Law Report

&

VEDHANTAM.

1910.

BY

BATHER & Co.,

MADURA.

Price As. 6.

42
-1479

லா ரிபோர்ட்டு

&

வேதாந்தம்.

மதுரை

பாதர் அண்டு கோவால்

அச்சிடப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE B. V. B. PRESS, CHOOLAI.

1910

REGISTERED COPY RIGHT.

ராஜ துரோக கண்டனம் & கோ.

ஜெனரல் மர்சண்டு & கமிஷன் ஏஜெண்டு
மதுரை & திருநெல்வேலி.

இந்த கம்பெனிக்கி பூலோகத்திலுள்ள எல்லாவித புஸ்தகங்களுக்கும் ஆர்டர் செய்யலாம்.

பூலோகத்தில் நூதனமாக ஏற்படுகிற புதிய புஸ்தகங்கள் எந்த பாஷையிலானாலும் சரி. இந்த கம்பெனிக்கி தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ராஜதுரோகிகளுக்கு நேர்விரோதியும்
மாக்ஷிமை தங்கிய
நமது பிரிட்டிஷ் தர்ம ராஜாங்க
பிரிதியுமான

ராஜ துரோக கண்டனம் & கோ.
புரோப்ரைட்டர்,
பாதர் ரூ. லி. நாகசாமி அய்யர்.
மதுரை

உ

அதிக பிரயோஜனம்.

லாயர் சந்தாதாரர்களாகச் சேருங்கள்.

இதனால் வெகு நன்மையும் லாபமும் அடைவீர்கள்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, அலஹபாத் இந்த 4 ஹைகோர்ட் தீர்மானங்களும் பிரிவீ கவுன்சில் (சீமை) தீர்மானங்களும் அடங்கிய லா ரிப்போர்ட்டுகளும் அப்போதைக்கப்போது மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டாரவர்களால் செய்யப்படும் சட்டங்களும் இன்னும் சட்டசம்பந்தமான மற்ற சகலவிஷயங்களும் தமிழில் மாதந்தோறும் சஞ்சிகை ரூபமாக பிரசுரிக்கப்படுகின்றன.

சந்தா ஒரு வருஷத்திற்கு ரூ. 5.

சென்னையிலிருந்து மதுரை 508-நிர் மால் கோர்ட்டு தெரு மெஸர்ஸ் "பாதர் அண்டுகோ"வில் (Bather & Co.,) வந்திருக்கும்,

M. A. LOGANATHEN,

லாயர் எடிட்டர் அண்டு லா பப்ளிஷர்.

நற்சாக்ஷிபத்திரம்.

பரோபகாரார்த்தமாக சொற்ப சந்தாவில் வெளிவரும் லாயர்'[illegible] மூலமாக லாயர்கள் & பாரிஸ்டர்கள் முதலியோர்கள் சா[illegible]ரியத்தோடு செய்யும் ஆர்குமெண்டுகளையும் மேன்மை தங்கிய மேலான[illegible]காவிகளால் நியாயத்தோடும் சட்ட[illegible]த்தோடும் செய்யப்படும் ஆச்சரியப்படத்தக்கதான அபூர்வமான ஜட்ஜுமெண்டுகளையும் கண்டுகளித்து ஞானிகள் அத்வைத சாஸ்திரங்களைப் பார்த்து விசாரித்து ஆனந்திப்பதுபோல சட்ட ஞானத்தில் அதிகப்பிரியத்தோடு ஆழ்ந்த புத்தியைச் செலுத்தி பரமானந்தமடைந்துக் கொண்டிருக்கிற பாதர் அண்டு கோ., வால், லாயர் விஷயமாய் பண உதவி செய்துவருகிற மெஸர்ஸ்: கா. கோ. பலபத்திர நாயக் அண்டு கம்பெனியாருக்கும், லா விஷயத்தில் அதிக அனுபவமும் யுக்தியும் புத்தியும் சுருசுருப்பும் நிறைந்த லாயர் எடிட்டரும் & லா பப்ளிஷருமான மிஸ்டர் M. A. லோகநாதன் அவர்களுக்கும் மென்மேலும் பரோபகார சிந்தையே ஜெனிக்கவேண்டுமென்று கடவுளை ஸ்துதிபண்ணப்படுகிறது.

BATHER & Co.,
S. India.

[illegible]ச்சரிக்கை.

மதுரை மஹால் கோர்ட்டுக்கு எதிரிலிருக்கிற சீர்மார்ட்டு தெரு அதாவது மதுரை டவுன் முனிசிபாலிடி 2-வது வார்டு டோர் 48 நம்பர் கெட்டிமச்சு மேல்மாடி பெரியபங்களா (போதர் அண்டு கோ:) புரொப்ரைட்டரா[illegible] எனக்கும் என் தம்பிக்கும் பொதுவாக பாகத்தில் விழுந்திருக்கின்றது.

டெ பங்களா பிரித்துக்கொள்ள வசதிப்படாததா[illegible]யிருக்கின்றபடியால் ஒருவர் பாகத்தை ஒருவர் கிரயத்துக்கு பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அல்லது இருவரும் சேர்ந்து வேறொருவரிடம் விற்பனைசெய்து கிரயத்[illegible]தொகையை பிரித்துக்கொள்ளலாமென்றும் இதுவரையில் பலதரம் கேட்டும் எனது தம்பி எதற்கும் இணங்கவில்லை. ஒரு மாதத்திற்குள் மேற்கண்ட எந்த விதத்திலாவது இணங்காவிடில் பிரதக்ஷ கடவுள்களாகிய மேன்மைதங்கிய கோர்ட்டாரவர்களால் டெ பங்களா பயிரங்கமாய் ஏலம்போடச்செய்து ஏலக்கிரயப்பணத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி பிராது தாக்கல் செய்யப்படும். இதனால் நேரிடக்கூடிய கோர்ட்டு செலவுவகைக்கு என் தம்பியே பாத்தியப்படவேண்டும்.

இதல்லாமல் என் சொத்துக்களை மோசடியாக அபகரித்துக்கொண்டிருக்கிற வகையிலும் நஷ்டவகையிலும் இன்னும்

மற்றவகையிலு முள்பட ரூபா 26,000 என் தம்பி கொடுக்க வேண்டும். அவைகளும் ஒரு மாதத்திற்குள் ஒழுங்குபடுத்தா விடில் சட்டப்பிரகாரம் வியாஜ்ஜியம் செய்து கோர்ட்டு செலவுகளுடன் வசூல்செய்யப்படு மென்றும் இதனால் எச்சரிக்கை செய்யப்படுகின்றது.

ஷெ பங்களா தேவையுள்ளவர்கள் தெரிவித்திருந்தால் ஏலகாலத்தில் ஞாபகப்படுத்தப்படும்.

பிரதக்ஷ கடவுள்களாகிய நாகரீகம்
நமது இங்கிலீஷ் தர்மராஜாங்க விஸ்வாசியும்
பாதர் ஆண்டு கோ. புரோப்ரைடருமான
பாதர் ரூ. வி. நாகசாமி அய்யர்,
மால் கோர்ட்டு தெரு,
மதுரை.

[illegible]தர் அண்டு கோ

ஜெனரல் மர்சண்டு அண்டு
கமிஷன் ஏஜெண்டு,
மதுராஸ் & மதுராஸ்.

இந்த கம்பெனியில் ஜவுளி வியாபாரம் முதல் பூலோகத்திலுள்ள எல்லா வியாபாரங்களுக்கும் ஆர்டர்செய்யலாம்.

கமிஷனுக்கு விற்பனைசெய்ய முதலாவது சாம்பிளும் விலையும் கமிஷன் விபரமும் அனுப்பப்படவேண்டும்.

அதன்பேரில் நம்மால் ஆர்டர்கள் வாங்கி அனுப்புவதுடன் ஆர்டர்கள் கொடுப்போர்களுடைய அட்ரஸும் அனுப்பப்படும். அந்த அட்ரஸுக்கு சாக்குகள் வி. பி. மூலம் அனுப்பவேண்டும். அப்படிக்கில்லாமல் நமக்கு நேராக ஆர்டரில்லாமல் வரும் சாக்குகளை அங்கீகரிக்கப்படமாட்டாது.

அட்டவணை.

பக்கம்.

1. புருஷர்களிடமிருந்து வர்சுக்கிரமத்தில் அடையும் சொத்துக்களில் விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைகள் ... ... 1.
2. ஒரு தீர்ப்புக்கொத்து ... ... 22.
3. திருவண்டிபுரம் வடகலைத் தென்கலை கேஸ் ... 32.
4. ஸ்ரீரங்கம் திருக்கோயில் மானேஜ்மெண்ட் கேஸ் 41.
5. சீட்டு பண்டு கேஸ் ... ... 51.
6. அலகபாத் ஹைக்கோர்ட் ... ... 62.
7. கல்கத்தா ஹைக்கோர்ட் ... ... 79.
8. வியாஜ்ஜிய தொகைக்கு சரியான கோர்ட்டுபீஸ் கட்டணம் ... ... 84.
9. போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் பணம் சேகரித்து வைப்போர் கவனிக்கவேண்டிய விதிகள் ... ... 85.
10. ஷை விவரணங்கள் ... ... 88.
11. பிரம்மவித்தை முகவுரை ... ... 149.
12. பிரம்மவித்தை சிஷ்யகுரு சம்வாதம் ஞான உபதேசப் பிரகரணம் ... ... 150.
13. தத்துவசோதனைப்பிரகரணம் ... ... 152.
14. ஜீவன்முத்திப்பிரகரணம் ... ... 158.
15. வைராசியப் பிரகரணம் ... ... 161.
16. சச்சிதானந்தெளிதற் பிரகரணம் ... ... 162.
17. சிஷ்யசோதனைப் பிரகரணம்... ... ... 167.
18. உபந்யாசம் ... ... 172.

RIGHTS OF HINDU WIDOWS IN THE PROPERTIES INHERITED BY THEM FROM THEIR HUSBANDS.

புருஷர்களிடமிருந்து வார்சுக்கிரமத்தில் அடையும் சொத்துகளில் விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைகள்.

புருஷன் பெண்சாதிக்குத் தானமாகக்கொடுத்த சொத்தை அவள் எப்படிப் பராதீனம் செய்தாலும் செய்யலாம். ஆனால் வார்சுக்கிரமத்தில் ஹிந்து விதவைகள் தங்களுடைய புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களை அவர்கள் உயில் எழுதிவைக்கவும் பராதீனங்கள் செய்யவும் அவர்களுக்குப் பாத்தியதை கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது, ஏனெனில், புருஷர்களுடைய சொத்தில் விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைக்கு இந்துலா ஒருவரை ஏற்படுத்திவிட்டது. வார்சுக்கிரமத்தில் தங்களுடைய புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களை ஹிந்து விதவைகள் அச்சொத்துக்களைத் தாங்கள் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் அனுபவித்து வருவதற்கு மட்டிலும் சர்வ சுதந்தரமிருக்

கிறதென்பதற்கு அனேக ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளிருக்கின்றன. (இ. லா. ரி. 13 சென் 116.)

* *

ஹிந்து விதவைகள் அவசியமான காரியங்களை முன்னிட்டு தங்கள் சொத்துக்களை பந்தகம் தானம் முதலிய விற்பனை பராதீனங்களும் செய்யலாம். தங்களுடைய புருஷர்களுடைய தாயாதிகளின் சம்மதியின்பேரில் பெந்தகம், விற்பனை, தானம் முதலிய பராதீனங்கள் செய்யலாமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

* * *

ஆனால் அவர்களுக்குத் தங்களுடைய ஜீவதிசை முடியும் பரியந்தந்தான் அச்சொத்தில் பாத்திபதை இருக்கின்றது. விதவை இறந்து போனபிறகு அச்சொத்திற்குப் பாத்தியதையுடையவர்கள் அவ்விதவைகளின் சமீப பந்துக்களல்ல; அச்சொத்து விதவையின் புருஷனுடைய சமீப வார்சுகட்குச் சேரும். ஆகையால் விதவைக்குச் சொத்தில் ஆயுள் பரியந்தம் தான் பாத்திபதையிருக்கிறது. அவள் இறந்துபோன பின்பு அவளுக்கு அச்சொத்தில் பாத்தியதை யில்லாமலிருப்பதால் அந்தச்சொத்தை அவள் இறந்துபோன பிறகு தன்னிஷ்டப்பட்ட ஒருவர் அனுபவிக்கும்படியாக உயில் எழுதிவைக்க பாத்தியதை யில்லையென்று எண்ணப்படுகின்றது.

* * *

அடியிற்கண்ட தீர்ப்புகள் புருஷனிடமிருந்து அடையும் சொத்தை உயில் எழுதிவைக்கக் கூடாதென்று கூறுகின்

றன:—வீக் [illegible] போர்ட்டர் 49 105, இ. லா. ரி. 7 சென் 93; [illegible] மெட்ருஸ் லா ஜெர்னல் 89, 17 பம்பாய் [illegible]; பம் [illegible].

***

இப்படி ஹிந்து விதவை உயில் எழுதிவைக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் சில சந்தர்ப்பங்களில் ஹிந்து விதவை எழுதிவைக்கும் உயில் செல்லாமணியாகின்றது. விதவையின் புருஷனுடைய சமீப வார்சு அதாவது விதவை இறந்துபோனால் இந்தச் சொத்தை வார்சுக்கிரமத்தில் அடையவேண்டிய புருஷனுடைய சமீபபந்து ஷை விதவை தன் இஷ்டப்பட்ட ஒருவருக்கு உயில் எழுதிவைப்பதற்குச் சம்மதம் கொடுத்திருந்தால் பிறகு அந்த உயிலை ஆக்ஷேபிக்க முடியாது; யாருக்கு விதவை உயில் எழுதிவைத்தாளோ அவர்களுக்கு அச்சொத்து சேரும். அவர்களிட மிருந்து புருஷனுடைய வார்சு ஷை உயில் எழுதி வைக்கப்பட்ட சொத்துக்களைப் பெறமுடியாது. உயில் எழுதி வாங்கியவர்கள் அச்சொத்துக்களை அனுபவிக்கவிடாமல் வேறொருவருக்ுப் பராதீனப் செய்யவும் புருஷனுடைய வார்சுகளுக்குப் பாத்தியமில்லை.

***

புருஷனுடைய தாயாதிகளிருந்தால், விதவை வார்சுக்கிரமத்தில் புருஷனிடமிருந்து அடைந்த சொத்தை மிக முக்கியமான காரியங்களுக்கன்றி யாதொரு பராதீனமும் செய்யக்

கூடாது. புருஷனுடைய ஆத்மாவிற்கு [illegible]க்கா[illegible]ரவிகள் கொண்டுபண்ணி வைக்கும்படியான த[illegible]ங்களுக்காகவும் வைதீக [illegible]ங்களுக்காகவும் அவள் அச்சொ[illegible] அதிகமாகவும் பராதீனம் செய்யலாம், இவ்வுலக [illegible]ங்களுக்காக அவள் செய்யும் பராதீனங்கள் செலாவணியாக வேண்டியதாகவிருந்தால் அக்காரியங்கள் மிக முக்கியமானவை என்றும் அவசியமானவை என்றும் சொத்தைப் [illegible]லாம் செய்யாமலொழிய அக்காரியங்களை நடத்த முடியாதென்றும் ருஜுப்படுத்த வேண்டும்.

***

அவள் செய்யும் பராதீனங்கள் செலாவணி யாகாதவையாகவிருந்தாலும், புருஷனுடைய வார்சின் அதாவது அவள் இறந்துபோனபின் அச்சொத்தை அனுபவிக்க பாத்தியதையுடையவனுடைய சம்மதம் பெற்றும் பராதீனம் செய்திருந்தால் அப்பராதீனங்கள் செல்லும்படியுள்ளதாக எண்ணப்படும்.

***

ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் அடையும் சொத்துக்களை பராதீனம் செய்யக் கூடாதென்று ஒருவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவள் இறந்துபோனபின்பு அச்சொத்தை அனுபவிக்க வார்சுகளிருப்பதையும் இல்லாததையும் பொருத்ததல்ல. அவள் இறந்துபோனபின்பு அச்சொத்தை அடைய வார்சு இருந்தாலும் சரி இல்லாமற்போனாலும் சரி அவள் அச்சொத்தைப் பராதீனம் செய்ய அவளுக்குப் பாத்தியதை கிடையாது, என்றும் அவள்

பரா[illegible] செய்[illegible] தப்பு, புருஷனிடமிருந்து அச்சொத்து [illegible]ளுடைய [illegible]க்கு [illegible]ந்த[illegible]னே [illegible] அ[illegible] சுபாவ[illegible]ய்விடுகிறதென்[illegible] முசிலிப்ப[illegible]னம் க[illegible] [illegible] நாராயணப்பா கேசில் (8 மூர் இந்தியன் அப்பீல் 5[illegible] பிரி[illegible] கவுன்சிலர்கள் நிர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கேசில் பிரதிவாதி புருஷனிடமிருந்து இரண்டசொத்தை வார்[illegible]மெத்தில் பெற்ற [illegible] ஹிந்துவிதவை. இவள் தான் பெற்ற [illegible] தன் இஷ்டப்[illegible] பராதீனம் செய்ய தலைப்பட்டனள். [illegible] விதவை இறந்[illegible]போன வுடன் இச் சொத்தை அடையவேண்டிய வார்சுகளுமில்லை. வார்சுக்கிரமப்படி சொத்தை [illegible]டைய பாத்தியமுடையவ[illegible] இல்லாமற்போனால் கடைசியில் அச்சொத்து மகாராஜாவைச் சேரவேண்டுமென்று யாஞ்ஞவல்கிய முதலிய உபநிடதங்கள் கூறுகின்றன. ஆகையால் மேற்கூறப்பட்ட கேசில் சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கு வார்சுகளில்லாததால் அச்சொத்து கவர்ன்மெண்டாரைச் சேரவேண்டும். ஆகையால் விதவை இறந்தபோனபின்பு அச்சொத்தை அடையவேண்டிய வார்சாகிய கவர்ன்மெண்டார் கிருஷ்ணா ஜில்லா க[illegible]லக்டர் மூலியமாக [illegible] விதவை சட்டவிரோதமாகவும் தான் இஷ்டப்பட்டபடியும் பராதீனம் செய்ய பாத்தியதையில்லை என்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

***

இந்த வியாஜ்ஜியம் பிரிவு கவுன்சிலுக்குச்சென்று முடிவடைந்தது. பிரிவு கவுன்சிலர்கள் ஹிந்து விதவை வார்சுக்

கிரமத்தில் ஒருவனுடைய சொத்தைப் பெற்றவ[illegible]வள் அதை தன் இஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாது, அச் சொத்திற் [illegible] சுபாவமுண்டாய் விடுகிறதென்றும், விதவை இறந்துபோனவுடன் அச்சொத்தை ஆ[illegible]க்கபாத்தியதையுடைய வார்சுகளிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவள் அதைத் தன் இஷ்டப்படி பராதீனம் [illegible]ாதென்றும், விதவை இறந்துபோனபின்பு அச்சொத்தை அ[illegible]டிய வார்சுகளுக்கு விதவை செய்யும் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியதை யிருப்பதுபோல, இந்த வியாஜ்ஜியத்தின் [illegible]துகளுக்கு விதவை இறந்துபோனபின்பு வார்சாய் வா[illegible]கூடிய கவர்ன்மெண்டார்க்கும் விதவை செய்யும் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியதை யிருக்கிறதென்றும். தீர்மானித்தார்கள்.

* *

வங்காளத்தில் தாயாப்பாகப்பிரகாரமும், பாக்கிமூன்று ராஜதானிகளில் மிதக்ஷராப் பிரகாரமும், விபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவனுக்கு ஆண் வார்சில்லாவிட்டால், அவனுடைய விதவை புருஷனுடைய சொத்திற்கு வார்சாகிறாள். ஆனால் அவள் ஜீவதிசையிலுள்ள பரியந்தரம் அனுபவிக்கலாமே தவிர அதைப் பராதீனம் செய்யக்கூடாது, உயிலும் எழுதி வைக்கக்கூடாதென்று பிரிவு கவுன்சிலார்கள் பீராட்சிங் v, லால் ஹால்சிங் (2 ஜூர் இந்தியன் அப்பீல் 331) வியாஜ்ஜியத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். முதலில் இந்த வியாஜ்ஜியம் பண்டைய காலத்தில் பங்காளத்தில் ஸ்தாபிக்கப்

பட்டு... சாடர் திவானி அடலாட் (Sadder Devnya Ada... கோர்ட்டில் விதவையால் பராதீனம் ... பட்ட காரி... இருந்த சொத்துக்களைப் பெறுவதற்கு கொண்டு வரப்பட்டது. அப்போது சாடர் திவானி அடவாலட் கோர்ட்டார் அப்போதிருந்த பிரக்கியாதிபெற்ற ஹிந்து சாஸ்திரியார்களைத் தருவித்து அடியிற்கண்ட கேள்வி கேட்டார்கள்.

***

கேள்வி:—ராஜா ஜெஸ்வென்ட் சிங்கின் முன்னோர்கள் ஆ...க வருஷகாலமாக ஆண்டு அனுபவித்து வந்த ஜெமீன் வார்சுக்கிரமத்தில் ராஜா ஜெஸ்வென்டு சிங்கிற்கு வந்துசேர்ந்தது. ஜெஸ்வென்ட் சிங்கோ ஆண்வார்சில்லாமல் இறந்து போய்விட்டார். ஆதலால் இந்த ஜமீன், வார்சுக்கிரமத்தில் ராஜா ஜெஸ்வென்ட் சிங்கின் விதவைக்கு வந்து சேர்ந்தது. இந்த விதவை மேல்படி ஜமீனை ...ரட்சிங் என்பவருக்கு உயில் எழுதிவைத்தால் அந்த உயிலும் பராதீனமும் ஹிந்துசாஸ்திரிகளின் பிரகாரம் செல்லுபடி யுள்ளனவா அல்லவா?

***

சாஸ்திரிகளின் ஜவாப்பு:—சொத்தை வேறொருவருக் கொடுப்பதற்கு ஹிந்துவிதவைக்கு அதிகாரமில்லை, பிரஸ்தாப விதவை பிரஸ்தாப ஜமீனுக்கு மிகுந்த பாத்தியதையுடைய ஒருவனுக்குக் கொடுத்தபோதிலும் ஜமீனுக்கு விதவை இறந்தவுடன் "வார்சாக வரக்கூடியவர்களின் சம்மதமின்றிக் கொடுக்கக்கூடாது. ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தில் பிரிவு கவுன்சிலர்கள் ஹிந்து சாஸ்திரிகளின் அபிப்பிராயத்தை ஏற்

றுக்கொண்டு ஷை விதவைக்கு ஷை ஜமீன் வார்சுதளின் சம்மதமின்றி உயில் எழுதிவைத்து பராதீனம் செய்ய அதிகாரமில்லை" என்று தீர்மானித்து தீர்வாய்ப் சொன்னார்கள்.

***

இந்தத் தீர்மானத்தால், ஹிந்து விதவை தான் இறந்த பின், தான் அனுபவித்துவரும் சொத்திற்கு சட்டப்பிரகாரம் வார்சாய் வரக்கூடியவர்களின் சம்மதத்துடன் ஷை சொத்தை உயில் எழுதிவைக்கலாமென்று ஏற்படுகின்றது. மற்றபடி விதவை ஜீவதிசையிலுள்ளபோது செய்துவரும் பராதீனங்கள் அவள் இறந்துபோனவுடன் அச்சொத்தை அடையக் கூடியவர்களுடைய சம்மதத்தைப்பெற்றுச் செய்யலாமென்று இந்தியாவிலுள்ள எல்லா ஹைக்கோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் சில ஹைககோர்ட்டார் ஷை சொத்திற்குப் பாத்தியதையுடையவும் ஜீவதிசையிலிருக்கிறதுமான எல்லா வார்சுகளுடைய சம்மதத்தையும் விதவை பெற்றுப் பராதீனம் செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள், சில ஹைக்கோர்ட்டார் மிகுந்த சமீப வார்சுகள் சம்மதத்தைப் பெற்றால் போதுமானதென்றும் அந்தச் சம்மதம் மற்ற வார்சுகளையும் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

***

எப்படியிருந்தபோதிலும் வார்சுகளின் சம்மதத்துடன் விதவை செய்த பராதீனத்தால் சொத்தைப் பெற்றுக்கொண்

போனவுடன் வார்சுகள் ஆக்ஷேபிக்கமுடியாது. ஏன் என்ருல், அந்தவை செய்த பராதீனத்திற்கு வார்சுகள் சம்மதம் கொடுத்துவிட்டார்கள்.

***

ஒரு தடவை சம்மதம் கொடுத்துவிட்டால் பிறகு ஆக்ஷேபிக்கமுடியாது. இம்மாதிரி நடந்திருக்கும் வியாஜ்ஜியத்தை ஓர் உதாரணமாகக் கூறுகின்ருேம். A என்பவனும் B என்பவனும் விபக்த சகோதரர்கள். A ஆண்வார்சில்லாமல் இறந்துபோய்விட்டான். அவனுடைய சொத்துக்கள் வார்சுக்கிரமத்தில், அவனுடைய விதவை M என்பவளுக்குக்கிடைத்தது. B என்பவனுக்கு ஆண் சந்ததியில்லை. ஆதலால் C என்பவனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டான். M என்பவளும் B என்பவனும் சேர்ந்து தத்தம் சொத்துக்களைத் தாங்கள் இறந்துபோனவுடன் C அநுபவித்துவரும்படியாய் உயில் எழுதி வைத்தார்கள். அப்போது C என்பவன் மைனர்; M என்பவளுடையவும் B என்பவனுடையவும் பராமரிப்பிலிருந்து வந்தான். இப்படி யிருக்கும்போது M இறந்துபோய்விட்டாள். M என்பவள் இறந்துபோனபின்பு அவள் B என்பவனின் சம்மதத்துடன் C-க்கு உயில் எழுதிவைத்த சொத்துக்களில் சிலவற்றை B என்பவன் D என்பவனுக்கு கிரயம் செய்தான். C என்பவன் மேஜர் அடைந்தவுடன் M எழுதிவைத்த உயிலை ஆதரவாக வைத்துக்கொண்டு D கிரையம் பெற்ற சொத்துக்களைப் பெறுவதற்கு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

விதவை M-க்குப்பின் அவளுடைய புருஷனுடைய சொத்துக்களை அடையவேண்டிய வார்சு B யைத் தவிற வேறொருவருமில்லை. அந்த ஒரே வார்சுடைய சம்மதத்தை ஏற்று M என்பவள் C என்பவனுக்கு உயில் எழுதிவைத்தாள். B அப்போது சம்மதம் கொடுத்துவிட்டதற்கு எப்படி அந்த சொத்தை D என்பவனுக்குக் கிரயம் செய்யக்கூடும்?

***

ஒரு ஹிந்து விதவை வார்சுக் கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்துக்களைத் தான் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்க பாத்தியமிருக்கிறது. இந்த பாத்தியதையை அவள் இறந்துபோனபிறகு அச்சொத்துக்கு வார்சாக வரக்கூடியவனுக்காகிலும் அல்லது அவனுடைய சம்மதமேற்று ஒரு அன்னியனுக்காகிலும் அவள் ஜீவதிசையிலிருக்கும்போதே கொடுத்துவிடலா மென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு புல் பெஞ்சார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா ரி. 21-சென். 128.)

***

ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக் கிரமத்தில் அடைந்த சொத்துக்களைத் தன்னுடைய காலக்ஷேபச் செலவுகளுக்காக விற்பனை செய்வது அவ்வளவு அவசிய மில்லாமலிருந்தபோதிலும் பம்பாய் ஹைக்கோர்ட்டார் அந்த விற்பனை செலாமணி யாகுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கேசிற்குத் தீர்ப்பு சொன்ன ஜட்ஜிகள் ஒரு குடும்ப மானேஜருக்கு நியாயமாக எவ்வளவு அதிகாரம்

கொடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு அதிகாரம் ஒரு ஹிந்து விதவைக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவள் இறந்துபோன பின்பு அந்தச் சொத்துக்களை அடையவேண்டிய வார்சுகளுக்கு எவ்வளவு பாத்தியதை இருக்கின்றனவோ அவ்வளவு பாத்தியதை தானம் பெற்றவனுக் கிருக்கிறதென்றும் அலஹாபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 10. அல. 407.)

***

அவசியமான செலவுகளுக்காக ஒரு ஹிந்து விதவை தனக்குப்பின் அச்சொத்திற்கு அப்போது (for the time being) பாத்தியமுடைய ஒரு வார்சுவின் சம்மதத்தை ஏற்று பெந்தகம் விற்பனை முதலிய பராதீனம் செய்திருந்தால் அந்த வார்சு பாத்தியதை யுடையவன் சம்மதம் கொடுத்தானே அவனைவிட அதிக பாத்தியதை யுடையவனுக வும் உள்ளபடியே விதவை இறந்தவுடன் அவளுக்குப்பின் அச்சொத்தை அடையவேண்டியவனும் அப்பராதீனங்களை ஆக்ஷேபிக்ககூடாது. ஏவன் பிறகு அச்சொத்துக்கள் தனக்குச் சேரவேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்தாலும் அப்பராதீனம் செல்லுபடி யுள்ளதுதான் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (10 கல். 1102.)

***

ஆதியில் இந்துக்களுக்குள் உயில் என்பது கிடையாது. இப்போதுதான் சிற்சில விஷயங்களில் ஹிந்துக்களில் உயில்

கள் செல்லுமென்று தீர்மானித்து வருகிறார்கள். உயில் ஏற்பாடு இங்கிலாண்டு தேசத்தைச் சேர்ந்தது. அந்த வழக்கத்தையும், ஏற்பாட்டையும் இப்போது நம்தேசத்திலுள்ளவர்களும் அனுஷ்டித்து வருகின்றார்கள். இத்தேசத்தில் ஜனங்கள் தாங்கள் இறந்துபோன பின்பு அனுபவிக்கும்படியாக யாருக்கேனும் கொடுத்து ஏற்பாடு செய்வதற்கு ஆதியில் "உயில்" என்கிற பெயர் வழக்கத்தில் வாராமற் போனபோதிலும் அது தானம் என்கிற பேருடன் வழங்கி வந்தது.

***

ஒருபோது ஹிந்துவிதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக் கிரமத்தில் அடைந்த சொத்தை அவள் இறந்துபோன பின்பு அச்சொத்தை அனுபவிக்கவேண்டிய வார்சுகளின் சம்மதத்துடன் பராதீனம் செய்தால் அப்பராதீனம் செல்லுபடி யுள்ளதென்று ஏற்பட்டிருக்கிறதே, அப்போதே அவன் மேற்படி வார்சுகளுடைய சம்மதத்துடன் உயில் எழுதிவைக்கவும் அவளுக்கு அதிகாரமிருக்கிறதென்றும் அவள் சட்டப்படி பராதீனம்செய்யக்கூடிய சொத்தை உயில் எழுதி வைக்க அவளுக்கு அதிகாரமில்லையென்று இதற்குமுன் எந்த ஹைக்கோர்ட்டாரும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை என்றும்ஆகையால் சட்டப்படி பராதீனம் செய்யவும், சட்டப்படி பராதீனம் செய்யக்கூடிய சொத்தை அவள் உயிலும் எழுதி வைக்கலாமென்றும், ஆகவே இரண்டு பாத்தியதைகளும் அவளுக்கிருக்கிறதென்றும் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (20 சென். 162.)

ஹிந்து விதவை வார்சுக் கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்தை தன்னுடைய சொந்த பந்துக்களுக்குத் தானம் செய்வதை ஹிந்துமத சாஸ்திரங்கள் கண்டித்த போதிலும் புருஷனுடைய பந்துக்களுக்குத் தானம் செய்வதை ஒப்புக்கொள்ளுகின்றன.

***

ஒரு ஹிந்து விதவை வார்சுக் கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடைந்த சொத்தை தன் பந்துவல்லாத வும் தன்னுடைய புருஷனின் பந்துவல்லாதவுமான ஒரு அன்னியனுக்குத் தானம் செய்தாலும் அவள் இறந்துபோன பிறகு அச்சொத்தை அனுபவிக்க வேண்டியவார்சுவின் சம்மதத்துடன் அச்சொத்தைத் தானம் (Gift) செய்திருக்கிறபடியால் அத்தானம் செல்லுமென்றும் விதவைக்கும் வார்சுகளுக்கும் அச்சொத்தில் எம்மட்டில் பாத்தியதை யிருக்கின்றதோ அம்மட்டிலும் பின்வரும் வார்சுகளுக்குப் பாதகமின்றி அச்சொத்தை மானேஜ்மெண்டு செய்யவேண்டு மென்றும் சொல்லி யிருக்கிறார்கள். (இ. லா. ரி. 18 பம். 534.)

***

ஹிந்து விதவை தன்னுடைய சீதனச் சொத்தை உயில் எழுதி வைக்கலாமென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 1 சென். 281. 166, 307.)

ஒரு ஹிந்து விதவை தனக்குத் தன் புருஷனுல் அல்லது இன்னும் யாராலேனும் தானமாகக் கொடுக்கப்பட்ட சொத்தை உயில் எழுதி வைக்கலாமென்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (1 பம். 155, 491, 21, பம். 170.)

***

ஒரு ஹிந்து குடும்ப மானேஜருக்கு எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அவ்வளவு அதிகாரமும் புருஷனிடமிருந்து வார்சுக் கிரமத்தில் சொத்தடைந்திருக்கும் ஒரு ஹிந்து விதவைக்கிருக்கின்றது என்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (33 கல். 845.)

***

புருஷனுல் பட்ட கடன்கள் காலாவதியாகப் போயிருந்தாலும் அவைகளைத் தீர்க்கும் பொருட்டு ஒரு விதவைசெய்யும் பராதீனங்கள் செல்லும்படி யுள்ளவென்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (இ. லா. ரி. 11 பம். 320.)

***

ஆகவே மேற்கூறிய தீர்மானங்களால் வார்சுக்கிரமத்தில் புருஷனுடைய சொத்தை அடையும் ஒரு ஹிந்து விதவை தான் இறந்துபோன பிறகு அச்சொத்துக்கு வார்சாகக்கூடியவர்களின் சம்மதத்தை எற்றுப் பராதீனம் செய்யலாமென்றும் உயிலும் எழுதி வைக்கலாமென்றும் முடிவு செய்யலாம்.

ஒரு தேவஸ்தானத்தைச் சேர்ந்த உற்சவத்திற்கு பணம் கொடுத்து நடத்துவதற்கு இந்த தேவஸ்தானத்தின் சுவாமியை நம்பிடும் ஒவ்வொருவனுக்கும் பாத்தியதை இருக்கிறது. அந்த உற்சவத்தைக் குறிப்பிட்ட ஒருவன் தான் நடத்தவேண்டும், மற்றவர்கள் அதை நடத்துவதற்கு பண[illegible]ன்று சொல்லமுடியாது. தேவஸ்தான தர்ம கர்த்தர்களாகிலும் அல்லது டிரஸ்ட்டிகளாயினும் ஒரு குறிப்பிட்ட உற்சவத்தை ஒரு குறிப்பிட்ட மனிதன் நடத்தவேண்டுமென்று அவனுடன் ஏற்பாடு செய்துகொள்ள பாத்தியமுடையவர்களாக விருந்தபோதிலும் அதே உற்சவத்தை நடத்த வேறு சிலர் பணம் கொடுத்தபோதிலும் அதையும்பெற்றுக்கொண்டு உற்சவத்தை இன்னும்சிறப்பாய் நடத்தவேண்டும் ஒருதேவஸ்தானத்தைச் சேர்ந்த உற்சவத்தை நடத்துவதற்கு ஒருவனுக்குமட்டிலும் பாத்தியதை உண்டென்று எவனும்சொல்லமுடியாது என்று சென்னைப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். வைத்தியநாதர் v. சந்திரசேகர் 15 மத. லா ஜர்னல் 453.

***

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் இறந்துபோய் விட்டான். இவனுடைய விதவை 1889-வது வருஷத்திய 7-வது ஆக்ட்டின்படி வார்சு சர்ட்டிபிக்கேட் வாங்கிவிட்டாள். இறந்து போனவன்பேரிலிருக்கும் நிலுவைகளை வசூல்செய்துக்கொள்ள தமக்கு பாத்தியதையிருக்கிறதென்று கோர்ட்டார் டிக்ளேர்செய்யும்படியாக இறந்துபோனவ

னுடைய சகோதரன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் இறந்து போனவனுடைய பெண்சாதிக்கு வார்சு சர்டிபிக்கேட் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தைப்பிடித்து விசாரணை செய்யலா மென்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். சின்னப்பா v. துள்சி 15 மதராஸ் லா ஜர்னல் 393.

***

ஒரு சிறிய தகப்பனும் அவன் தமையன் மகனும் சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் சிறியதகப்பன் இறந்துபோன பிறகு அவனுடையகுமாரத்தி ஹிந்து லா பிரகாரம் குடும்பச்சொத்திற்கு வார்சாகவர பாத்தியமற்றவள் என்று சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார்தீர்மானித்திருக்கிறார்கள். அம்மாக்கண்ணு v. ரெங்காத 15 மதராஸ் லா ஜர்னல் 392.

***

ஒருவன் தனக்குள்ள ஸ்தாபரசங்கம சொத்துக்கள் சகலவற்றையும் தன்னுடைய தாயாருக்கு உயில் எழுதி வைத்து விட்டு இறந்து போய்விட்டான். அந்த உயிலில் அவனுடைய பெண்சாதி அவனுடைய தாயாருடன் வசித்து வருகிறபோது அது பரியந்தம் அவளுக்கு அன்னவஸ்திரம் கொடுத்துவரும் படியாகஎழுதப்பட்டிருந்தது. தாயார் சிலகாலம்சென்று அந்த சொத்துக்களை தனக்கு இஷ்டப்பட்ட ஒருவனுக்கு உயில் எழுதிவைத்தாள். அச்சொத்துக்களை உயில் எழுதிவைக்க இவளுக்கு அதிகாரமில்லை என்று இவள் பேரில் ஒரு வியாஜ்-

ஜீவனம் கொண்டுவரப் பட்டபோது தாயாருக்குத் தானமாகக் கொடுக்கப்படும்சொத்து ஹிந்து லா பிரகாரம் நிபந்தனைக்குட் பட்ட சொத்தாக மாட்டாதென்றும் தானம் செய்யப்பட்ட பின்பு அது அவளுடைய சொந்த சொத்தாய் விட்டதென்றும் அவள் அதை தன்னிஷ்டப்படி பராதீனம் செய்ய[illegible] முடையவளென்றும் கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 32 கல். 1051.

***

ஒரு காண்டிடேட் தேவஸ்தான கமிட்டி அங்கத்தினராவதற்கு அருகதற்றவர் என்று ருஜுப்படுத்த வேண்டுமானால் [illegible] வோட்டுக் கொடுத்தவர்களுக்குப் பணம் கொடுத்து அதற்காக அவர்கள் தனக்கு வோட்டு கொடுக்கும்படியாகச் செய்தாரென்று ருஜுப்படவேண்டும் ஒருகாண்டிடேட் தனக்கு வோட்டு கொடுக்கும்படியாக போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறவர்களுக்கு ரயில பிரயாணச்செலவும், வண்டிச் சத்தமும் கொடுத்தாரென்று ருஜுப்பட்டால் அந்த காண்டிடேட் இப்படிப் பணம் கொடுத்ததற்காக வோட்டர்கள் வோட்டுக் கொடுத்துப் பணம் பெற்றிருக்கிறார் என்று எண்ணப்படும் வோட்டர்களுக்குப் பணம்கொடுத்தது தனக்குவோட்டுக்கொடுக்கும்படியாகயல்லவென்று ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு காண்டிடேட்டைச்சேர்ந்தது என்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். கிருஷ்ணசாமி v. சிவசாமி 15 மதிராஸ் லா ஜர்னல் 459.

A என்பவன் 9-வயதுடைய ஒரு பெண்ணை இல்வாழ்க்கைக்கு வரக்கி தன்னுடைய சகோதரனுக்கு விவாகம் செய்து வைத்தான். ஒரு பெண்ணை அடிமையாக விற்ருன் என்பதாக இ. பி. கோ. 370 வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கு A என்பவன் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டான். பெண்ணை விவாகம்செய்து கொடுத்திருக்கிறபடியால் A என்பவன் இ. பி. கோ. 370-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்திற்கு இலக்கர்கயாட்டார்கள் என்று பஞ்சாப் கோர்ட்டார் [illegible]த்திருக்கிருர்கள்.

***

கணக்கு புத்தகங்களை காண்பித்தால் மட்டிலும் கோர்ட்டார் பிரதி வாதியின்பேரில் டிக்கிரி கொடுக்கமாட்டார்கள் என்றும், அந்தக் கணக்கு புஸ்தகத்தில் எழுதி யிருக்கிறபடி பிரதிவாதிக்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று ஒரு சாக்ஷியைக் கொண்டாகிலும் அல்லது கடன் கொடுத்தவனே ருஜுப்படுத்த சாக்ஷி சொல்லவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆர் இந்தியன் அப்பீல் 432.

***

வட்டிக்கு வட்டிபோட்டு கணக்குத்தீர்ப்பது சட்டவிரோதமாகமாட்டாது. ஆனல் அப்படி போடப்பட்டது சாதாரண வட்டியாக விருக்க வேண்டுமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். 34 கல் 150.

ஒரு கடையில் பற்றுவரவு செய்துவந்தால் அந்தக்கடைக்காரன் வருஷத்திற்கு ஒருமுறை கூடுதலான வட்டியையும் அசலுடன் சேர்த்து அதற்கு வட்டி போட்டு வாங்குகிற வழக்கமிருந்தால் வாதி தன்னுடைய பேரில் மற்ற கடைக்காரர்களும் இதே மாதிரியாக வட்டி போட்டு வாங்குகிற வழக்கமென்று ருஜுப்படுத்தவேண்டுமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 5 சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட் ரிப்போர்ட் 135.

*

காண்டிராக்ட் ஆக்ட் சம்பந்தப்பட்ட ஒருகேசில் பொதுவான ஒருவழக்கத்தை கோர்ட்டார் கவனிக்காமல் தீர்ப்புச் சொன்னால் அது ஒப்பந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு ஷரத்தை நிராகரித்து தீர்ப்புசொன்னதற்குச் சமமான அநியாயத்தீர்ப்பாயிருக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

***

ஒரு பத்திரத்தில் வட்டி 6-மாதம் செலுத்தப்படாவிடில் 6-மாதமும் கூடுதலானவட்டி அசலுடன் சேர்க்கப்பட்டு இப்படிக் கூடுதலான தொகையின் பேரில் 100-க்கு வருஷத்திற்கு 12-மேனிக்கு வட்டிசெலுத்த வேண்டுமென்று சொல்லியிருந்தால் அது சட்ட விரோதமாகமாட்டாதென்றும் அப்படியே பிரதிவாதி செலுத்த வேண்டுமென்று அலகபாத் ஹைக்கோர்ட்டார் அடியிற்கண்ட மூன்றுகேஸ்களில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். 2 அல. 681.

ஒருவனை ஒருவன் மற்றொருவனுக்கு சிபார்சு செய்தால் சிபார்சு செய்யப்பட்டவனால் அவனுக்கு வைத்துக் கொண்டவனுக்கு நஷ்டம் நேரிட்டால் அந்த நஷ்டத்தை சிபார்சு செய்தவன் ஈடுபடுத்தவேண்டுமென்பது இங்கிலாண்டு தேசத்தீர்ப்பு. A என்கிற ஒரு ஜீயூஸ் பேப்பர் சொந்தக்காரன் வர்த்தகர்களுகருக் கணக்கர்களும் தரகர்களும் வேண்டியதாக இருந்து தமக்கு எழுதினால் தகுந்த பெயர்வழிகளை சிபார்சு செய்கிறதாக தம்முடைய பத்திரிகையில் விளம்பரம் பிரசுரித்திருந்தார். B என்கிற வர்த்தகன் தனக்கு ஒரு தரகனை சிபார்சு செய்யும்படியாக எழுதியிருந்தான். D என்பவன் கோர்ட்டார் டிஸ்சார்ஜ் செய்யாத இன்சால்வென்ட்டு; இவன் இந்த நிலைமையிலிருக்கிறான் என்பதை A என்பவர் அறிந்துகொள்ளாமல், என்பவருக்கு சிபார்சுசெய்தார். B என்பவரிடம் D என்பவன் தரகராயிருந்தபோது B என்பவருடையபணத்தைக் கையாடிவிட்டான். தமக்கு நேரிட்ட நஷ்டத்தைப் பெறுவதற்காக B என்பவன் A என்பவர்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார் யோக்கியமுடைய தரகனைப்பார்த்து சிபார்சு செய்திருக்கவேண்டியது A என்பவருடைய கடமையென்றும் இந்தக் கடமையை அவர் சரிவரச் செய்யாமல் இன்சால்வெண்டு பெறப்போகிற D என்பவனை சிபார்சு செய்தபடியாலும் அதனால் B என்பவருக்கு நஷ்டமுண்டானதாலும் அந்த நஷ்டத்தை ஈடுபடுத்த A என்பவர் கட்டுப்பட்டவரென்றும் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இங்கிலீஷ் தீர்ப்பு.

ஒருவன் ஒருவிடத்தில் பாடிக்கொண்டிருந்தான் போனகிராப்காரர்கள் இந்தப்பாட்டை போனகிராபில் பிடித்துக் கொண்டு பலவிடங்களிலும் போனகிராபைப் பாடச்செய்து பணம் சம்பாதித்தார்கள்; பாடகனுக்கு வருமானம் குறைந்து போனது. ஆகவே போனகிராப்காரர்கள் தன்னுடைய பாட்டை போனகிராபில் பிடித்து [illegible] செய்வது காப்பிரயிட் ஆக்ட்டிற்கு விரோ[illegible] சொல்லி வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். பாட்டை [illegible] பிடிப்பது காப்பிரயிட் ஆக்டிற்கு விரோதமாக ம[illegible]டாதென்று இங்கிலீஷ் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

***

ஒரு பெந்தக பத்திரத்தில் இரண்டு பேர்களுக்குக் குறையாமல் சாக்ஷி போடவேண்டுமென்பது சட்டம் இப்படி இரண்டுபேர்கள் சாக்ஷி கையெழுத்து போடாவிட்டால் அந்தபெந்தகப்பத்திரம் சட்டப்படி சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதும் சட்டம். இந்தப் பத்திரம் சம்பந்தமாக வியாஜ்ஜியமுண்டானகாலத்தில் அதில் கையெழுத்து போட்டிருந்த சாக்ஷி [illegible]யிருட னிருந்ததும் சாக்ஷியும் சொல்லும்படியான நிலை[illegible]யிலிருந்ததும் அவனை சாக்ஷியாகப்போட்டு அவனைக்கொண்டு அந்தப் பத்திரத்தின் பிரகாரம் பணம் கொடுத்ததை ருஜுப்படுத்தாமல் போனால் அந்த பெந்தகப் பத்திரத்தை கோர்ட்டார் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சென்னைப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மா

வித்திருக்கிறார்கள். வீரப்பா v. ராமசாமி [illegible] லா ஜர்னல் 213.

***

பாகப் பிரிவினையாகாத சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் பேரில் வாதிக்குப் பண்டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்தது குடும்பத்தில் சிலஸ்தாபரசொத்துக்கள்பெந்தகம் வைக்கப்பட்டிருந்தன. வாதி டிக்கிரியை நிறைவேற்றி குடும்ப சொத்தின் ஒருபாகத்தை [illegible] விற்பனைக்குக் கொண்டு ஏலத்தில் எடுத்தான். விற்பனை செய்யப்பட்ட பாகம் இதற்கு [illegible]தலாக விருந்தாலொழிய பெந்தம் வைக்கப்படாத பாகமென்று [illegible]க்கப்பட வேண்டுமென்று W. N. III ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. வியோகரேயின் v. நூர் முகமத் கேசில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

A COLLECTION OF RULINGS.

ஒரு தீர்ப்புக்கொத்து.

ஒரு பெட்டை நாய் பைசிக்கிலில் ஏறிப்போய்க் கொண்டிருந்த ஒருவரைத் தள்ளிவிட்டது. அதனால் தேகத்தில் அவருக்குக் காயமுண்டானது நாயின் சொந்தக்காரர்பேரில் நஷ்டதாவா கொண்டுவந்தார். இந்தக் கேசை விசாரணை செய்த கௌண்டிக்கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்புசொ

ன்ஹர்கள். அப்பீலில், நாயின் சொந்தக்காரர் அலக்ஷியமாகவா வது [illegible]ரஸ்தயாகவாவது யிருந்ததற்கு சாக்ஷியமில்லை என்று [illegible] அசல் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்துவிட் டார்கள். இங்கிலீஷ் தீர்ப்பு [illegible]. கார்ட்டு.

***

[illegible] லாபமடைய வேண்டுமென்கிற கருத்துடன் சீட்டுப்போ டும் ஒரு நிதி (Chi[illegible] ஙானகி) இந்தியன் கம்பெனி ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட[illegible]ண்டும். அப்படி ரிஜிஸ்டர் செய்யா விடில், சீட்டுக்கட்டினவர்கள் ஷை. நிதியிலிருந்து [illegible] குச் சீட்டுப்பணம் சேரவேண்டுமென்று [illegible] கொண்டுவந் தால் அந்த தாவா செல்லாமல் [illegible]டாது. இ. லா. ரி. 19 சென். 31.

***

வாதியின் உத்தரவின்றி டெலிபோன் கம்பெனியார் அவர் நிலத்தின்பேரில் டெலிபோன் கம்பியை போட்டார் கள். வாதி கொண்டுவந்த தாவாவில் வாதி இஜட்மெண்டு நடவடிக்கைகள் நடத்தி அக்கம்பியை எடுத்துப்போட கம்பெ னியாரைக்கட்[illegible]ாயம் படுத்தலாமென்றுதீர்மானிக்கப்பட்டது.

***

இன்சால் வென்சி மனுவின்பேரில் முனிசீப்புக்கோர்ட் டார் செய்த உத்திரவிற்கு விரோதமாய் ஜில்லாக் கோர்ட் டிற்கு மட்டிலும் அப்பீல் செய்துகொள்ளலாம். ஹைக் கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்யக்கூடாது.

ஒரு வியாஜ்ஜியத்தின் செலவு தொகையைக் கொடுக்க டிக்கிரியில் கட்டுப்படுத்தப்பட்ட பலர்களில் ஒருவன் டிக்கிரிப்படி தொகையை ஏகதேசமாய் செலுத்திவிட்டு மற்றவர்களிடமிருந்து வீதாச்சாரப்பணம் கிடைக்கவேண்டுமென்று அவர்கள் பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியம் ஸ்மால்காஸ் கோர்ட்டார் பிடிக்கக்கூடாத வியாஜ்ஜியமல்ல. பைரான் v. ராமபாரான் இ. லா. ரி. 28 அல. 292. Bhairon v. Ram Bharan I. L. R. 28 All. 292.

***

கூட்டு வியாபார விஷயத்தில் பிரசம்பிரித்துக் கணக்கு ஏற்பட்டு வரவேண்டிய தொகைக்காக பாகஸ்தின்பேரில் தாவா செய்ததில் கூட்டு முறிந்துபோய்விட்டதென்று தீர்ப்புக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்ட நிமித்தம் இந்தக் கேசை ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடிப்பதற்கு அதிகாரமில்லை என்று எண்ணக்கூடாது. சி. ப. கோ. 643 B பிரிவின்படி ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு அனுப்பும் ஜில்லாக் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு அபிப்பிராயத்தைப் பிசகென்று நினைப்பதற்கு காரணம் கூறி அனுப்பவேண்டும். இ. லா. ரி. 28 அல 293. Chotu v. Janahir 28 All. 294.

***

வாதிக்குச் சேரவேண்டிய தொகைக்காக வாங்கிய பிராமிசரி நோட்டின் வியாஜ்ஜியத்தில் பிராமிசரி நோட்டிலிருந்த ஸ்டாம்பு சரியாக அழிக்கப்படாமலிருந்த காரணத்துக்காக பிராமிசரிநோட்டை ஸ்டாம்பு ஒட்டாதபிராமிசரி நோட்

டார் பாவித்து இதர சாக்ஷியங்களை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளி விட்டார்கள். இதர சாக்ஷியங்களைக் கீழ்க்கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று தீர்மானித்தார்கள். அன்றியும் சொத்தைக் கிரயஞ்செய்த ஒரு வழியிலாவது ஒரு கடன்கொடுத்த வழியிலாவது வேறு எந்த பாத்தியதை முன்னிட்டாவது ஒருவனுக்குப் பணம்கொடுக்க வேறொருவன் கட்டுப்பட்டிருந்தால் பிறகு ஏற்பட்ட பிராமிசரி நோட்டு, பிறவிய இவைகள் மூலியமல்லாமல் நேரேவியாஜ்ஜியம் கொண்டுவந்து கொடுக்க வேண்டியவன்பேரில் டிக்கிரி பெற்றுக்கொள்ளலாமென்றும் ஆனால் தன்னிடமிருக்கும் பிராமிசரி நோட்டை மூன்றுவருஷ பேர்வழி வசமாகும்படிவிட்டு அதனால் பணம் கொடுக்கவேண்டியவனை நஷ்டத்திற்கு உள்ளாக்காமலிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். 28 All 298. Banarsi Prasad *v.* Fazal Ahmad 28 All. 298.

* *
*

ஒருவன் ஒரு குறிப்பிட்ட கிசய்கையைச் செய்யக்கூடாதென்று பிறப்பிவிக்கப்பட்ட இன்ஜங்ஷன் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரச்செய்து கொண்ட மனு லிமிட்டேஷன் ஆக்ட் 179-வது பிரிவு இரண்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கும் காலாவதி தோஷத்துக்கு உள்ளாகாது. 28 அல. 300. Bagawandas *v.* Sakhbi, 28 All. 300.

* *
*

ஸ்விகாரம் கொடுக்க உரித்தான குமாரனை கொடுக்கவும் வாங்கவும் உரியவர்கள் கிரமப்படி ஸ்விகாரஞ்செய்தால் ஜனக

பிற பணம் வாங்கியிருந்தாலும் ஸ்விகாரப் புத்திரனின் நிலை மை மாறிக்கப்படாது. பணம் வாங்கிக்கொண்டு ஸ்விகாரம் கொடுத்தது ஒழுங்கீனமாயிருந்தாலும் இந்த உடன்படிக்கை வேருகவும் ஸ்விகார உடன்படிக்கை வேருகவும் பாவிக்கப் படும் ஒன்று ஒன்றை பாதிக்காதென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. 29 சென். 161 Murugappa Chetty. Nagappa Chetty 29 Mad. 161.

* *
*

1863ம் வரு 20-வது தேவஸ்தான ஆக்ட்டு 7-வது பிரிவின்படி சென்னை கவர்ன்மெண்டார் செய்த 19-வது ரூல்படி ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பாகமானதெனிலும் ஒரு ஈடு கொடுத்தால், அந்த ஈடு வோட்டுக்குப்பதிலாக கொடுத்ததாக எண்ணப்படுமென்றும்

மெம்பராகப் பிரியமுள்ளவர் வோட்டர்களுக்கு கொடுக்கும் வண்டிச் சத்தம் மேலே குறித்த ஈடாகுமாகையால் அப்பேர்ப்பட்டவர் எலக்ஷனுக்கு யோக்கியதை யுடையவ ரல்லவென்றும்

ஒன்றைச் செய்வதாக வாக்கு கொடுத்தால் வோட்டுப் போடுவதற்குத் தகுந்த ஈடாகப் பாவிக்கப் படமாட்டா தென்றும்

அல்லது பணம் கொடுக்கிறவர் வோட்டுக்காக பணம் கொடுபட இல்லை என்ருல் தானே ருஜுக்கொடுக்க வேண்டு

மென்று தீர்ப்பு சொன்னார்கள். 29 சென் 166. 29 Mad. 166.

* *
*

அடமானம் மீட்டுக் கொள்ளுகிறதற்காக ஏற்பட்ட கெடுவுக்குப் பிந்திய காலத்துக்கு உத்திரத்திலுள்ள முழுவட்டியை யே கொடுக்கத் தீர்மானிக்கும்படி கோர்ட்டாரைக் கட்டாயப் படுத்தக் கூடாதென்று தீர்ப்புசெய்தார்கள். 29 சென் 170. Swaminatha Chettiar v. Swamiappa Naicker 29 Mad. 170.

* *
*

நில விஷயமாக சர்க்காரால் கொடுக்கப்படும் பொறுமானத் தொகையைப் பற்றி பலர் பாத்தியம் கொண்டாடும் பக்ஷத்தில் இது விஷயமாக சிவில் கோர்ட்டார் செய்த தீர்ப்பு பிந்திய வியாஜ்ஜியங்களுக்குக் இடமில்லாமல் முடிவை ஏற்படுத்துகிறதென்று தீர்ப்புசெய்தார்கள். 29 Mad. 173. Choakanan Mukki v. Vayya Prath Kunhi Kutti 29 Mad. 173.

* *
*

ஒரு அடமானக்காரன் தான் பெண்டு வாங்குகிறபொழுது முன்னால் அந்த சொத்தை வேறொருவருக்குப் பெந்தகம் வைக்கிறதென்று ஒரு உடன்படிக்கை யிருக்கிறதாக தன் விசாரணையில் தெரியவரக்கூடியதாய் இருக்கும் பட்சத்தில் இவ்வடமானக்காரனின் பாத்தியதை முன்னொரு அடமானமிருந்தால் என்ன பாத்தியதை யிருக்குமோ அந்த பாத்தியதை

...ர் உண்டென்று டிரான்ஸ்பர்ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 40-வது பிரிவையும் டிரஸ்ட் ஆக்ட் 91 வது பிரிவையும் கண்டித்துத் தீர்ப்பு சொல்லப்பட்டது. 29 சென் 177. Ramaswamma v. Si...mya Charlu 29 Mad. 177.

* *
*

பெரும் பொய் சொல்லியும் சாக்ஷிகளை மறைத்தும் மோசடியாகப் பெற்ற தீர்ப்பை ரத்து செய்ய வேறே வியாஜ்ஜியம்கொண்டுவரலாமென்று தீர்ப்புசெய்யப்பட்டது. 29 சென். 179. Venkatappa Naick v. Subba Naick 29 Mad. 179.

* *
*

மதிராஸ் சால்ட் ஆக்டின் 27-வது பிரிவின்பிரகாரம் ஒரு லைசென்ஸ் கான்சல் பண்ணப்பட்டால் லைசென்ஸ்தார் அந்த ஆக்டின் 18-வது பிரிவின்படி காம்பென்சேஷன் பெற்றுக் கொள்ள பாத்தியமுடையவரல்லவென்றும் 16 (a) பிரிவின்படி அவருடைய சுவாதீன பாத்தியதைக்குரிய விலை மாத்திரம் அவருக்குக் கொடுக்கப் படவேண்டுமென்றும் (2) அவ்வாறு விலை கொடுக்காத பக்ஷத்தில் நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளுகிறதென்று வாதிக்குத் தீர்ப்பு கிடைத்திருந்தால் அத்தீர்ப்பை நிறைவேற்றும் காலத்தில் நிறைவேற்றுங் கோர்ட்டார் விலையின் தொகையை நிர்ணயிக்க அதிகாரமிருக்கிறதால் வேறு தனி வியாஜ்ஜியம் கொண்டுவர வேண்டியதில்லை என்று தீர்ப்புச் சொல்லப்பட்டது. 29 Mad. 181. The

Collector of Chingleput for the secretary of state for India v. Subraya Mudaliar 29 Mad. 181.

*
* *

ஒருவருடைய சொந்த இடம் வாங்கவும் விற்கவும் பகிரங்க உபயோகப்படுத்தப்பட்டால் அதுவே மார்க்கட்டு.

* *
*

ஒருவருக்குச் சொந்தமாக விருந்த மார்க்கட்டு மூடிவிடும்படியாக உத்திரவு செய்யப்பட்டால் லைசென்ஸ் கேட்டுக் கொடுக்கப்படாதிருக்கும்போது அந்தவிடத்தில் மீனும், இரைச்சியும் ஒருவன் விற்றால் சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட் 197-வது பிரிவின்படி குற்றம் செய்தவனுவான் என்று தீர்மானிக்கப்பட்டது. 29 சென். 185. Abu Baker v. The Municipality of Negapatam 29 Mad. 185.

* *
*

எதிரிக்கு காம்பன்சேஷன் கொடுக்கும்படியாக ஒரு மாஜிஸ்டிரேட்டார் செய்த உத்தரவை எதிரிக்கு நோட்டீஸ் கொடுக்காமல் மாற்றக் கூடாதென்றும் கி. பு. கோ. 422-வது பிரிவுப்படி கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கு நோட்டீஸ் கொடுப்பது அதிக காபந்தான நடவடிக்கை என்றும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

ஒருபோலீஸ் கான்ஸ்டேபில் காஷுவல் (Casual) லீவ் வாங்கிக்கொண்டு லீவ் கழித்த பிறகு லீவ் இல்லாமல் வேலைக்கு வராமல் தங்கி விட்டால் சென்னை டிஸ்டிரிக்ட் போலீஸ் ஆக்ட்டு 44-வது பிரிவின்படி லீவில்லாமல் வேலைக்குவராத குற்றத்திற் குள்ளாவான் என்று தீர்மானிக்கப்பட்டது. 29 சென் 192 Emperor V. Ramaswamy Raju 29 Mad 192.

* *
*

தர்மச் சொத்துக்களை யாதொரு விதமான பராதீனமும் செய்யக்கூடாது. ஆனால் பொது நன்மைக்காக Land Acquisition ஆக்டின் பிரகாரம் அச்சொத்துக்கள் வாங்கப்பட்டால் அவைகளின் கிரயத்தை கவர்ன்மெண்டாரிடம் வட்டிக்குப்போகும்படி உத்தரவு செய்யலாம்; கலியாரல் v. நாகப்பா 9 சென் 117.

* *
*

ஏஜண்டினிடம் கடன் வாங்கினவர்கள் செலுத்தவேண்டிய தொகையை வசூலிக்க சொந்தக்காரன் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிெ கடனாளிகள் ஏஜண்டினிடமிருந்து கடன் வாங்கவில்லை என்று சொன்னால் வாதி மேற்படி ஏஜண்டையும் பிரதிவாதியாகச் சேர்த்து வியாஜ்ஜியம் செய்யலாம். இதர பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி கொடுக்கப்படாமற்போனால் ஏஜண்டு பேரிலாவது டிக்கிரி கொடுக்கவேண்டுமென்றுவாதி கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாம். வெய்யப்ப செட்டி v. பெரியண்ணன் செட்டி 29 சென். 50.

பெண்சாதி[illegible] இழந்தவன் ஸ்விகாரம் எடுத்துக்கொண்டால் அந்த ஸ்விகாரம் செல்லுபடியுள்ளது. விவாகமாகாதவன் ஸ்விகாரம் [illegible]க்கொண்டால் அது செல்லுபடியுள்ளது, சந்திரசேகரஞ் [illegible]. பிரமண்ணு 4 சென். ஹை. ரி 270. (4, Mal H. R. 270.)

* * *

பிரமாண வாக்குமூல ஆதாரத்துடன் தன்மேல் நடக்கும் கேசை வேறு கோர்ட்டுக்கு மாற்றும்படி மனுகொடுத்தால் அம்மனுதாரன் செய்த ஸ்டேட்டுமெண்டு விஷயமாக இ. பி. கோ. 390 வது பிரிவுப்படி பிராசிக்கியூட் பண்ணக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது, 28 அல 331. Emperor v. Bindeshari Singh 28 All. 331.

THIRUVANDIPURAM DEVASTANAM CASE

திருவண்டிபுரம் வடகலை தென்கலைக் கேஸ்.

பிரிவு கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட் மாக்னால்டன்
சர் ஆண்டிருஸ் கோபில்.
சர் ஆண்டிரு வில்சன்.

சடகோபாச்சாரியார் வகையறா—வாதிகள்.
அப்பீல் வாதிகள்.

V

கிருஷ்ணமூர்த்தி ராவ் வகையறா—பிரதிவாதிகள்
அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—தென் ஆற்காடு ஜில்லாவில் திருவண்டிபுரம் கிராமத்திலிருக்கும் வடகலைபிராமணர்கள் ஷை கிராமத்திலிருக்கும் தெருக்கள் ஷை கிராமத்திலிருக்கும்

டைகலை திருவஸ் ... ராகிய தேவநாயக சுவாமி தேவஸ்தான த்திற்குச் சொந்த ... று அந்தத்தெருக்களின் வழியாக தெ ன்கலையார் த ... ய மணவாளமாமுனி ஆழ்வாரை ஊ ர்கோலம் விட்டுக்கொண்டுவரக் கூடாதென்றும், ஆகவே அத் தெருக்கள் ... வடகலையாருக்காரர்களுக்கு மட்டிலும் சொந்தமென்றும் இந்த பாத்தியதையை ஸ்தாபிக்க தென் ஆர்காடு ஜில்லா ... கோர்ட்டில் ... டிஸ்ட்ரிக்ட் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்த விஷயமாக நீண்ட காலமாய் இரு கக்ஷியாருக்கும் விவாதப் ... இந்த விபரங்களெல் லாம் பிரிவி கவுன்சிலர்கள் செ ... திருக்கும் தீர்ப்பில் விபரமா யச் சொல்லப்பட்டிருக்கின்றன.

லாயர்கள்:—வாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் கோகன் K. C. யும், பாரிஸ்டர் L. T. குருதியரும் பேசினார்கள். பிரதி வாதிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ராஸ் பேசினார்.

வாதிகளின் லாயர் பேசியது:—வாதிகள் தங்களுடைய பிரியாதில் கேட்ட ஒவ்வொரு ... காரத்திற்கும் சட்டப்படி பாத்தியதை யுடைய ... ர் என்று ருஜுப்படுத்தி யிருக்கிறார் கள். வாதிகளின் வியாஜ்ஜியத்தின் முதல் அம்சம் என்னவென் றால் திருவஹிந்திபுரம் கிராமத்திலுள்ள தெருக்கள் புராதீன காலமுதல் தங்களுக்குச் சொந்தமாயிருந்துகொண்டு வருகின் றனவென்றும், இத்தெருக்களில் தென்கலையார் தங்களுடைய ஆழ்வாராதிகளை ஆராதிக்கக் கூடாதெனவும், இத்தெருக் களின் வழியாய் தென்கலை ஆழ்வாராதிகளுக்கு உற்சவ ஊர்

கோலம் முதலியவைகள் நடத்திக்கொண்டு வரக்கூடாதென்கிற நிபந்தனைகளுடன் இத்தெருக்களில் வீடு கட்டிக்கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன வென்பதே. இந் நிபந்தனைகளுடன் விடப்பட்டிருக்கும் தெருக்கள் சொற்பமே தவிர மற்றபடி மிகுந்த விசாலமான விடமல்ல. இந்தத் தெரு மேற்படி வடகலை தேவநாயக சுவாமி தேவஸ்தானத்திற்கு 700-வருஷங்களுக்கு முந்தி தானம் செய்யப்பட்டது. ஆகையால் வாதிகள் இப்போது இந்த வியாஜ்ஜியத்தில் ஸ்தாபிக்க முயல்வதெல்லாம் கூடி தங்களுக்குக்கிடைத்த தானத்தின் பாத்தியதையே தவிர மற்றபடி வேறல்ல; ஆகையால் அவர்களுடைய பாத்தியதைக்குச் சட்டப்படி சரியான வியாஜ்ஜிய மூலமிருக்கிறது. இதனால் நாம் தீர்க்கவேண்டிய தென்னவென்றால், ஒன்று இத்தெருக்கள் வடகலையாருக்குச் சொந்தமாக விருக்கவேண்டும், அல்லது இத்தெருக்களில் வசிப்பவர்கள் இவைகளை தேவநாயக தேவஸ்தானத்திற்குத் தான கைங்கரியம் செய்து இத் தெருக்களில் தென்கலை சுவாமிகளுக்கு ஆராதனைகள் நடக்கும்படியாக விடுகிறதில்லை என்றும், தென்கலை சுவாமிகளின் ஊர் கோலங்களை விடுகிறதில்லை என்றும் சம்மதித்திருக்கவேண்டும். மேற்படி தெருக்களுக்கு வடகலையார் ஏக சுதந்தரம் பாராட்டிவந்ததை 1807, 1828, 1840 ம் வருஷங்களில் தென்கலையார் ஆக்ஷேபித்து கோர்ட்டில் விவாதங்கள் நடத்தியும் வடகலையாரின் பாத்தியதையே கோர்ட்டார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வியாஜ்ஜியத்தின் இரண்டாவது முக்கியபாய்ண்ட் என்னவென்றால் இத்தெருக்கள் வடகலையாருக்கு மட்டிலும சொந்தமென்று இப்போது ஒருக்கால் ரூஜுப்படாமல் போயிருந்தாலும் பரம்பரையான வழக்கத்தாலும், அனுபவத்தாலும், இத்தெருக்களிலிருந்து வடகலையார் ஏக சுதந்திர பாத்தியதை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தெருக்களின் வழியாக அனேக வருஷ காலமாக வடகலையார் தென்கலை சுவாமிகளின் உற்சவங்களையும், ஊர்கோலங்களையும் விடுகிறதில்லை, தென்கலையார் தங்களுடைய சுவாமிகளை புறப்பாடு செய்துக் கொண்டு இந்தத் தெருக்களில் நுழைந்தசமயங்களில் எல்லாம் வடகலையார் தடுத்திருக்கிறார்கள். வடகலையாரின் இந்த பாத்தியதை 1840 ம் வருஷம் நடந்த வியாஜ்ஜியத்தில் சாதர் அடல்ட் கோர்ட்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வியாஜ்ஜியத்தின் மூன்றாவது முக்கியமான பாய்ண்ட் என்னவென்றால் எப்படியிருந்தபோதிலும் தென்கலையார் தங்களுடைய மணவாளமாமுனியை இந்தத் தெருக்களின் வழியாய் புறப்பாடுசெய்யவாவது கூடாதென்று தென்கலையார் பேரில் வடகலையாருக்கு 1828 ம் வருஷத்திய வியாஜ்ஜியத்தில் 1840 ம் வருஷம் சாதர் அடல்ட் கோர்ட்டார் வடகலையாருக்கு டிக்கிரி கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் அந்த வியாஜ்ஜியம் மணவாளமாமுனி சம்மந்தப்பட்டவரையில் இந்த வியாஜ்ஜியத்தை கட்டுப்படுத்தும்.

அனந்தராவ் பிக்காஜி பாடேக் v. ஷன்கர் தாஜிசாரியா (இ. லா. ரி. 7 சென் 323) பார்த்தசாரதி ஐயங்கார் v. சின்ன

கிருஷ்ண ஐயங்கார் (இ. லா. ரி. 26 சென் 154) ஆகிய இந்தக் கேஸ்களில் சொல்லப் பட்டிருக்கிற தீர்ப்புகளின் பிரகாரம் வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவர பாத்திய முடையவர்கள்.

பிரதிவாதிகளின் லாயர்பேசினது:—வாதிகள் தங்களுக் குண்டென்று சொல்லும் பாத்தியதையை ஸ்தாபிக்கவில்லை கீழ் இரண்டு கோர்ட்டார்களும் திருவண்[illegible]புரம் கிராமம் எந்த காலத்திலாவது வடகலையாருக்கு ஏகசுதந்தரமா யிருந்ததென் று தீர்மானிக்கவில்லை. மேற்படி [illegible]களில் வடகலை ஸ்வாமி களின் உற்சவங்களை நடத்து[illegible]தேயொழிய மற்றப்படி தென் கலை சுவாமிகளின் ஊர்கோலங்கள் வந்தால் அவைகளைத் [illegible] த்து விடுகிற வழக்கமென்பதையும் வாதிகள் ஸ்தாபிக்கவில்லை. இம்மாதிரி ஒரு வ[illegible]மிருந்ததாக ருஜுப்பட்ட போதிலும் அது அந்யாயமாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் கோர்ட் டார் ஊர்ஜிதப்படுத்தக் கூடாத வழக்கமென்று கீழ் இரண்டு கோர்ட்டார்களும் முடிவு செய்திருக்கிறார்கள், பகிரங்கமான தெருவில் இரண்டு கக்ஷியாரில் ஒரு கக்ஷிபார்[illegible]லும் போ வதற்குப் பாத்திதை யிருக்கிறதென்பதற்கும் மற்றொரு கக்ஷிக் காரர்கள் வந்தால் தடுக்க பாத்திதை யிருக்கிறதென்பதற்கும் அந்த பாத்தியதையை இந்தியாவில் எந்த ஹைக்கோர்ட்டாரா வது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும் வாதிகள் உதா ரணமாக ஒரு சரியான தீர்ப்பைக்கூட எடுத்துக் கூறவில்லை.

1840 ம் ஹு த்தில் சாதர் அடலட் கோர்ட்டார் வாதி களுக்குக் கொடுத்த டிக்கிரியை வாதிகள் ஆதாரமாகக்கூறி

இந்த வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்தை கட்டுப்படுத்துமெ ன்று கூறுகின்றார்கள். ஆனால் அந்த வியாஜ்ஜியத்தில் இந்த வியாஜ்ஜியத்தின கக்ஷிக்காரர்கள் கக்ஷிக்காரர்களல்லஆதிலி வாதிகள் கேட்ட பிரார்த்தனைகள் இந்த வியாஜ்ஜியத்தில்கேட் டுக்கொள்ளப் பட்டிருக்கும் பிரார்த்தனைகளல்ல; ஆகையால் அந்த வியாஜ்ஜியத்திற்கும் இந்த வியாஜ்ஜியத்திற்கும் சம்பந்த மில்லை. ஆகையால் தாவாவில் சம்பந்தப்பட்ட தெருவுகளில் பிரதிவாதிகள் போகவும் அனுபவிக்கவும் சட்டப்படி பாத்திய முடையவர்கள் இவர்களை வாதிகள் தடுக்க யாதொரு பாத்திய தையுமற்றவர்கள்.

தீர்ப்பு:—லார்ட் மாக்நாட்டனால் 1907 ம் வரும் மார் ச்சுமீ 21உ சொல்லப்பட்டது. வாதிகள் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தென் ஆற்காடு ஜில்லாக்கோர்ட்டார் செ லவுதொகையுடன் தள்ளுபடிசெய்து சொன்ன தீர்ப்பை சென் னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் உறுதிப்படுத்த வாதிகள் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள், பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ள ஹைக்கோர்ட் டார் முதலில் அனுமதி கொடுக்கவில்லை. என் எனில் வியா ஜ்ஜிய மதிப்பு தொகை எவ்வளவாயிருந்தால் பிரிவு கவுன்சிலு க்கு அப்பீல் செய்துகொள்ளலாமோ அதற்குக் குறைவாயிருக் கின்றது. இந்த வியாஜ்ஜியத்தின் மதிப்பு குறைவா யிருந்த போதிலும் இந்த வியாஜ்ஜியத்தில் இந்தியாவிலுள்ள மத சம்ப ந்தமான கக்ஷிக்காரர்களைக் குறித்த சட்ட அம்சமும, பயிரங

சுதான ஒரு தெருவை ஒரு கக்ஷியார் உபயோகப்படுத்திக் கொண்டு மற்ற கக்ஷிக்காரர்களை வரக்கூடாதென்று தடுப்ப தைக்குறித்த [illegible]க்தியலதையும், இன்னும் ஹிந்தும[illegible]க்கார ர்களுக்கு முக்கியமாயுள்ள சட்ட பாயிண்டுகளும் இதில் அடங் கியிருப்பதால் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்று வாதிகள் கேட்டுக்கொ ண்டதின்பேரில் ஹைக்கோர்ட்டார் அனுமதி கொடுத்திருக் கிறார்கள்.

தென் ஆற்காடு ஜில்லாவில் திருவண்டிபுரம் கிராமத்தில் வைஷ்ணவ பிராமணர்களுக்குள் தென்கலையாருக்கும் வடக லையாருக்கும் வெகுகாலமாகவிருந்த சச்சரவை [illegible] இந்த வியாஜ்ஜியம் உற்பத்தியாயிருக்கின்றது. இந்த கிராம த்தில் புராதீனமான தேவஸ்தானம் ஒன்றிருக்கிறது. இதில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் தேவநாயக சுவாமி. இந்த தேவஸ்தானத்திற்குச் சேர்ந்தாப்போல் வடகலையாரால் மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கப்படும் வேதாந்த தேசிகர் சந்ந தியுமிருக்கிறது. இது இப்படியிருக்க தென்கலையார் மண வாளமாமுனியை ஆராதித்து வருகின்றார்கள். தென்கலை யார் 1807-ம் வருஷத்தில் தங்களுடைய மணவாள மாமுனி விக்கிரகத்தை மேற்படி தேவநாயகசுவாமி தேவஸ்தானத்தில் கொண்டுவந்து வைத்தார்கள். வைக்கவே வடகலையார் ஆக்ஷே பித்துத் தடுக்க இதனால் தங்களுக்கு நஷ்டம் நேரிட்டிருப்பதா கச் சொல்லி தென்கலையார் வடகலையார் பேரில் 1807-ம் வரு ஷத்தில் ஒரு நஷ்டதாவா கொண்டுவந்தார்கள் கோர்ட்டார்

இந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்து தென்கலையார் மேற்படி தேவஸ்தானத்தில் கொண்டுவந்துவைத்த மணவாள மாமுனி விக்ரகத்தை எடுத்துபோம்படி உத்தரவு செய்து தீர்ப்பு சொன்னார்கள். இதன் பிறகு 1828-ம் வருஷத்தில் தென்கலையார் தங்களுக்குச் சொந்தமான ஒரு வீட்டில் மணவாள மாமுனியை வைத்து ஆராதனை செய்து இந்த வியாஜ்ஜியத்தில் கண்ட தெருவுகளின் வழியாக புறப்பாடு செய்து கொண்டு வந்தார்கள். தென்கலையார் மேற்படி தெருவுகளில் பயிரங்கமாக மணவாள மாமுனியை ஆராதிப்பதையும், புறப்பாடு செய்வதையும் பற்றி புகார் செய்து வடகலையார் தென்கலையார் பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள். தென்கலையார் பயிரங்கமாய் அவர்களுடைய ஆழ்வார்களை மேற்படி தெருவுகளில் ஆராதனை செய்யக்கூடாதென்பதும், புறப்பாடு செய்துக்கொண்டு வரக்கூடாதென்பதும் மேற்படி தெருவுகளில் வடகலை தேவஸ்தானமாகிய தேவநாயக சுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமென்பதும், தென்கலையார் தங்களுடைய ஸ்வாமிகளைப் புறப்பாடு செய்துக்கொண்டு வருவது பாரம்பரையான வழக்கத்திற்கு விரோதமென்பதும், வடகலையாரின் கக்ஷி. இதன் மேல் கோர்ட்டார் இந்துமத ஆசாரியர்களை தருவித்துக் கேட்டார்கள். அவர்கள் கூறின அபிப்பிராயம் பெரும்பாலும் மதசம்பந்தமான பிரபந்தங்களைப் பொருத்ததாயும் சட்டத்திற்கு ஒவ்வாததாயு மிருந்தது. இருந்தபோதிலும் கோர்ட்டார் அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு தென்கலையார் இனி பயிரங்கமாய் தங்களு

ஆழ்வார்களை ஆராதிக்கக் கூடாதென்றும் மேற்படி திருப்புகளில் புறப்பாடு செய்துக்கொண்டு வரக்கூடாதென்றும் பிரதிவாதிகளாகிய வடகலையாருக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பு சொன்னார்கள். பிரதிவாதிகளாகிய தென்கலையார் சாடர் அடல் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்துக்கொள்ள, தென்கலையார் தங்களுடைய வீடுகளில் வைத்து ஆராதனை செய்து வரலாமென்றும், ஆனால் திருக்களில் புறப்பாடு செய்துக்கொண்டு வரக்கூடாதென்றும், கீழ் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியை சிறிது மாற்றித் தீர்ப்பு சொன்னார்கள். இதன்பிறகு 1886-ம் வருஷம் வரையில் இருகக்ஷியாரும் சச்சரவு செய்துக்கொண்டு பலமுறை சிவில் கோர்ட்டிலும், பலமுறை கிரிமினல் கோர்ட்டிலும் கக்ஷி ஆடினார்கள். சில சமயம் வடகலையாரும், சில சமயம் தென்கலையாரும் வெற்றி அடைந்திருக்கிறார்கள். ஆனால் 1886-ம் வருஷத்தில் இருகக்ஷியாருக்கும் நடந்த கிரிமினல் விவகாரத்தில் அப்போதிருந்த மாஜிஸ்டிரேட் தென்கலையார் தங்களுடைய ஸ்வாமிகளை புறப்பாடு செய்துக்கொண்டு வந்தால் வடகலையார் தடுக்கக் கூடாதென்றும், அப்படித் தடுக்க பாத்தியமுண்டென்பதை வடகலையார் சிவில் கோர்ட்டில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டனர்.

இதன்பேரில் வடகலையார் தங்களுக்கு சாடர் அடல்கோர்ட்டாரால் கொடுக்கப்பட்ட டிக்கிரியை நிறைவேற்றி மேற்படி டிக்கிரிக்குக் கட்டுப்பட்ட பிரதி வாதிகளின் சந்ததியாரை அரஸ்டு செய்து ஜெயிலில் வைக்கும்படி நிறைவேற்று

மனுதாக்கல் செய்தார்கள். கோர்ட்டார் மனுவைத் தள்ளிவிட்டே வடகலையார் கடைசியாக, தென்கலையார் தங்களுடைய சுவாமிகளை பிரங்கமாய் ஆராதனை செய்வதையும் புறப்பாடு செய்துகொண்டு வருவதையும் தடுப்பதற்கு தங்களுக்கு பாத்தியதை இருக்கிறதென்று கோர்ட்டார் டிக்ளேர் செய்யும்படியாக இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். புராதனமாக இந்தெருக்கள் வடகலையாருக்குச் சொந்தமான தெருக்கள் என்றும், தென்கலை சுவாமிகளைத் தென்கலையார் புறப்பாடு செய்துகொண்டு வந்தால் விடக்கூடாதென்கிற நிபந்தனையின் பேரில் இத்தெருவுகளில் வீடுகள் கட்டிக்கொள்ளும்படி விடப்பட்டிருக்கின்றன வென்றும் சொன்னார்கள். இதை முழுதிலும் ருஜுப்படுத்த முடியாமற் போனபோதிலும் மேற்படி தெருவுகளை சில நிபந்தனைகள் பேரில் உபயோகித்துக்கொண்டு வந்தார்கள் என்று யூகிக்க ஆதாரமிருக்கிறதென்றும், எப்படி யிருந்தபோதிலும் தங்களுடைய வடகலை சுவாமிகளைத் தவிர வேறெந்த சுவாமிகளும் அந்தத் தெருக்களில் ஆராதிக்கப்பட்டால் அதைத் தாங்கள் தடுத்து வரும்வழக்கம் பாரம் பரியமாக இருந்து வருகிற தென்றும் எப்படியிருந்த போதிலும் மணவாள மாமுனி சம்பந்தப்பட்ட வரையில் தென்கலையார் இந்த ஆழ்வாரைப் புறப்பாடு செய்துக்கொண்டு இந்தத் தெருக்களின் வழியாக வரக்கூடாதென்று 1828-ம் வருஷத்திய வியாஜ்ஜியத்தில் சாடர் ஆடல் கோர்ட்டார் டிக்கிரி கொடுத்திருக்கிறார்கள் என்றும், இந்த விஷயம் சம்பந்தமி

பட்ட வரையில் அந்த வியாஜ்ஜியம் இந்த வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்துமென்றும் கக்ஷி சொல்லுகிறார்கள்.

கீழ் இரண்டு கோர்ட்டார்களும் வாதிகளுக்கு விரோத மாய் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானங்கள் சரியானவை என்றே நாமும் அபிப்பிராயப் படுகின்றோம் இந்தத் தாவாவில் கண்டிருக்கும் தெருவுகள் எந்தக் காலத்தி லாவது வடகலையாரின் சொந்த சொத்தாக விருந்தென்று நினைக்க சாக்ஷியத்தின் நிழலேக்கூட காணோம்.

கிராமம் சாதாரணமான ரயட்வாரி கிராமம் தெருவுகள் பயிரங்கமான தெருவுகள். லோக்கல் போர்டு ஆக்ட் (Madras Act V of 1884) 1884-ம் வருஷத்திய 5-வது ஆக்டின் பிரகாரம் லோக்கல் போர்ட்டார் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கி ன்றன. இந்தத் தெருவுகள் லோக்கல் போர்ட்டாரிடம் ஒப் புவிக்கப்படக் கூடாதென்று சொல்லுவதற்கு வடகலையாரு க்கு தகுந்தகாரண மிருக்குமாகில் அந்த ஆக்ட் அமுலுக்கு வந்த வுடனே அந்த ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கவர் னர் ஜெனரலுக்கு அப்பீல் செய்துக்கொண்டிருக்கவேண்டும். லோக்கல் போர்ட் ஆக்ட் திருவண்டிபுரத்தில் அமுலுக்குவந் தபோது உள்ளபடி இந்தத் தெருவுகள் வடகலையாருக்குச் சொந்தமாக விருந்திருந்தபோதிலும், லோக்கல் போர்ட் ஆக்ட் அமுலுக்கு வந்து வெகுகாலமாய் விட்டபடியால் இப் போதும் வடகலையார் தங்களுக்கு அந்த பாத்தியதை உண்டெ ன்று சொல்லமுடியாது. வாதிகள் 1828-ம் வருஷம் வியாஜ்

ஜியத்தில் சாடர் ஆடல் கோர்ட்டார் கொடுத்த தீர்மானம் இந்த வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்துமென்று கக்ஷி சொல் லுவதையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 1828-ம் வருஷம் நடந்த வியாஜ்ஜியத்தில் தென்கலை வருபவரை எப் போதும் கட்டுப்படுத்தும்படியான அத்தனை பிரதிவாதிகள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்படவில்லை. அந்த வியாஜ்ஜியத் தில் சில தென்கலையாரும், சில வடகலையாரும் தங்களுக்கு நேர்ந்த தீங்குகளுக்காக கக்ஷிக்காரர்களாக விருந்தார்கள். ஆகையால் அப்பீலைத் தள்ளிவிடவேண்டும். இந்த அப்பீ லில் ஒரு முக்கியமான லாப் பாயின்ட்டுமில்லை. ஹைகோர்ட்டார் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்துக்கொள்ள அனுவசியமாக உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆகையால் அப்பீலைத் தள்ளும்படி செய்துவிடும்படியாக கவுன்சிலர்கள் மா க்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு யோசனை சொல்லுகி றார்கள். வாதிகள் பிரதிவாதிகளின் அப்பீல் செலவைகொடு க்க வேண்டும். இ. லா. ரி. 30 சென் 155. Sadagopa Charriac *v.* Krishna Murthi Roa 30 Mad. 155.

THE SRIRANGAM DAVASTANAM CASE.

ஸ்ரீரங்கம் திருக்கோயில் மானேஜ்மெண்ட் கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் S. சுப்பிரமணிய ஐயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்.

கணபதி ஐயர் வகையரு 18, 5, 4 பிரதிவாதிகள்—
அப்பீல் வாதிகள்.

V

ஸ்ரீ வேத வியாஸ துளசிங்க பட்டர் வகையரு—
1 முதல் 4 பிரதிவாதிகள் 7 to 10, 11 to 13 பிரதி
வாதிகள்—அப்பீல் பிரதி வாதிகள்.

மேலே கூறப்பட்டுள்ள வாதிகளும் 8 முதல் 16 பிரதிவாதிகளும் ஸ்ரீரங்கம் திருக்கோயிலின் பரம்பரை ஸ்தானிகர்கள். அதாவது கோவிலின் ஸ்தானிக ஸ்தானத்தை அவர்களுடைய குடும்பத்தார்களே தலைமுறை தலைமுறையா வகித்துக் கொண்டு வருகின்றார்கள்; 3 முதல் 7 பிரதிவாதிகள் திருச்சினாப்பள்ளி தாலுக்கா தேவஸ்தான கமிட்டியார்; 1. 2, பிரதிவாதிகள் பிஸ்தாப திருக்கோயிலுக்கு ஏற்கனவேயிருக்கும் டிரஸ்டிகளுடன் கூடயிருந்து மானேஜ்மெண்ட் செய்யும்படியாக புதிதாய் நியமிக்கப்பட்ட டிரஸ்டிகள்; 1817-ம் வருஷ சென்னப்பட்டணம் 7-வது ரெகுலேஷனுல் ரெவினியூ போர்டாரு

கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி ரெவினியூ போர்ட்டார் ஸ்ரீரங்கம் கோவிலை மானேஜ்மெண்ட் செய்வதற்கு 1842-ம் ஸ்ஸு ஒரு எற்பாடு செய்தார்கள். அந்த எற்பாடு என்னவென்றால் அந்த கோயிலுக்கு பாரம்பரை ஸ்தானிகபாத்தியதையுடைய நான்கு குடும்பங்களுக்குள் வருஷம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒரு டிரஸ்டியாயிருக்க வேண்டுமென்றும், ஒருவருஷம்சென்றவுடன்மற்ற 3 குடும்பங்களில் ஒருவர் ஸ்தானிக குடும்பங்களுக்கு பிரதிநிதியாயிருந்து மானேஜ்மெண்டு செய்து வரவேண்டுமென்றும், ஒருவர் ஒருவருஷம் சென்றவுடன் வேறுகுடும்பங்களில் ஸ்தானிக பிரதிநிதி டிரஸ்டி ஸ்தானத்தை பெறவேண்டும் என்றும் இப்படி வருஷத்திற்கு வருஷம் ஸ்தானிக குடும்பத்திலிருந்து ஒரு டிரஸ்டியும் ஸ்தானிக குடும்பங்களைச் சேராத வேறு இரண்டு டிரஸ்டிகளும் ஆக மூன்று டிரஸ்டிகளும் சேர்ந்து கோவிலை மானேஜ்மெண்டு செய்து வரவேண்டும் என்று ரெவினியூ போர்ட்டார் எற்பாடு செய்தார்கள். எற்பாடுசெய்த காலமுதல் ஸ்தானிக குடும்பங்களில் பிரதிநிதி டிரஸ்டி ஒருவரும் வேறே இரண்டு டிரஸ்டிகளும் ஆக மூன்று பேருமாகச்சேர்ந்து 1899 ம் ஸ்ஸு வரையில் மானேஜ்மெண்டு செய்து வந்தார்கள்.

இந்த பிரகாரம் கோவிலை மானேஜ்மெண்டு செய்து வரும்போது 1899 ஸ்ஸு-ம் டிசம்பர் மாதத்தில் 3 முதல் 7 பிரதிவாதிகளாகிய திருச்சிநாப்பள்ளி தாலூக்கா தேவஸ்தான கமிட்டியார் ஸ்ரீரங்கம் (கோவிலும் திருச்சிநாப்பள்ளி தேவஸ்தான

கமிட்டி அதிகாரத்திற்குட்பட்டது. ஏற்கனவே ஸ்ரீரங்கம் கோவிலுக்கிருக்கும் மூன்று டிரஸ்டிகளுடன்கூடவிருந்துசெ ற்ப காலத்திற்கு மானேஜ்மெண்டு செய்து வரும்படியாக 1, 2, பிரதிவாதிகளை அடிஷனல் டிரஸ்டிகளாக நியமித்தார்கள். இப்படி இந்த இரண்டு டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டது சட்ட விரோதமென்று கோவிலுக்கு பாதகமான காரியமென்றுதங் களுடைய பாத்தியதைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன வென் றும்சொல்லி நியமனங்களை ரத்துசெய்யும்படி ஸ்ரீரங்கம் டி. மு. கோர்ட்டில் வாதிகள் வியாஜ்ஜியம் [illegible] செய்தார்கள்

டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைச் செலவு தொ கையுடன் தள்ளிவிட்டார்கள். ஜில்லாக்கோர்ட்டார் அசல் கோர்ட்டு தீர்மானத்தை ரத்து செய்து வாதி பக்கம் தீர்ப்ப சொல்லி செலவு தொகைக்கும் டிக்கிரி கொடுத்தார்கள். ஆக வே 4, 5, 18 பிரதிவாதிகளாகிய தேவஸ்தான கமிட்டிவகை யரு ஹைக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண் டார்கள்.

வக்கீல்கள்:—அப்பீல் தாரர்களுக்காக மிஸ்டர் பி. எஸ். சிவசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் P. R. சுந்தரமய்யரும் N. ராஜகோபாலாச்சாரியாரும் ஆஜரா னார்கள்.

அப்பீல் வாதிகளின் கக்ஷி :— (1) டிரஸ்டி ஸ்தா னத்தை ஸ்தானிக குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பாரம் பரி யமாக வகித்துக்கொண்டு வரும்படியாக ஏற்பாடு செய்வதற்கு

ரெவினியூ போர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (2) 1817ம் ஞு சென்னப்பட்டணம் 7 வது ரெகுலேஷன் 2 வது பிரிவின்படி தேவஸ்தானங்களை விசாரணை செய்யும் பொருப்பு ரெவினியூ போர்ட்டாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ரெவினியூ போர்ட்டார் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளின் ஒரு பாகத்தைப் பரம்பரை டிரஸ்டிகள் ஏற்படுத்தி இவர்களிடம் ஒப்புவித்து யிருப்பது ரெகுலேஷன் இரண்டாவது பிரிவிற்கு விரோதமான செய்கை. (3) எப்போது ரெவினியூ போர்டாருக்கு தேவஸ்தான மானேஜ்மெண்டு விஷயமாக ஒரு ஏற்பாடு செய்ய அதிகாரமிருக்கிறதோ அந்த ஏற்பாட்டை ரத்து செய்யவும் அதிகாரமிருக்கின்றது.

1863 ம் ஞுத்து 20 வது ஆக்டின்படி தேவஸ்தான மானேஜ்மெண்டின் விஷயமாக ரெவினியூ போர்ட்டாருக்குள்ள அதிகாரம் தேவஸ்தான கமிட்டியாருக்கு சென்று விட்டது, தேவஸ்தானங்களின் மானேஜ்மெண்டு விஷயமாக அனுஷ்டானத்திலிருந்து வரும் ஏற்பாடுகளைத் தாங்கள் இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாம். ஆகையால் அவர்கள் ஸ்ரீரங்கம் கோவிலுக்கு அடிஷனல் டிரஸ்டிகள் நியமித்திருப்பதை ஆக்ஷேபிக்கக்கூடாது.

தீர்ப்பு:—1817ம் ஞுத்திய சென்னப்பட்டணம் 7-வது ரெகுலேஷன் பிரகாரம் தேவஸ்தானங்களை மானேஜ்மெண்டு செய்து வரும் விஷயத்திலாவது அல்லது மேற்பார்வை செய்து வரும் விஷயத்திலாவது எந்த காரியம் சரியானதென்றும் நியா

யமானதென்றும் ரெவினியூபோர்ட்டாருக்குத் தோன்றுகின்ற தோ அதை செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தானிகாளில்லாத தேவஸ்தானங்களை மட்டும் ரெவினியூபோர்ட்டார் விசாரணை செய்து வரவேண்டு மென்றுவது, அல்லது ஸ்தானிகாள் உடைய கோவிலையும் விசாரணை செய்து வரலாமென்றுவது ரெவினியூ போர்ட்டாரின் அதிகாரத்திற்கு ஒரு வரம்புகட்டி ரெகுலேஷனில் கூறப்படவில்லை. ஆகையால் ஸ்தானிகாள் உள்ள தேவஸ்தானங்களையும் இல்லாத தேவஸ்தானங்களையும் விசாரணை செய்து வருவதற்கு ரெவினியூ போர்ட்டாருக்கு அதிகாரமிருக்கின்றது. ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் அத்தேவஸ்தானத்திற்கு அவர்களுக்கு நியாயமென்றும் சரியானதென்றும் தோன்றின காரியங்களை செய்வதற்கு ரெகுலேஷன் 3 வது பிரிவில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்து வருவதில் தேவஸ்தான ஸதானிக குடும்பத்தாரும் பாரம்பரியமாக டிரஸ்டிகளா யிருந்து வரவேண்டியது அவசியமென்றும் ரெவினியூ போர்ட்டார் அபிப்பிராயப்பட்டு செய்தால் அவர்கள் அப்படிச் செய்யக்கூடாதென்று ஆக்ஷேபிக்க முடியாது. ஆராதனை அர்ச்சனை முதலியவிஷயங்களை மானேஜ்மெண்ட் செய்வதற்காக ஸ்தானிகாள் டிரஸ்டிகளாய் இருந்தால் நலமாயிருக்குமென்று ரெவினியூபோர்ட்டார், அபிப்பிராயப்பட்டு செய்திருக்கலாம். ஸ்தானிக குடும்பங்களில் ஒரு பரம்பரை டிரஸ்டி ஏற்படுத்தி

அவர் மற்ற இதர இரண்டு டிரஸ்டிகளுடன் கலந்து மானேஜ்மெண்டு செய்து வரும்படியாக ரெவினியூ போர்ட்டார் செய்திருக்கும் ஏற்பாடும் கோவிலின் நன்மையை நாடிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் பரம்பரை டிரஸ்டி நடத்த விஷயத்தில் ரெவினியூ போர்ட்டார் தங்களுடைய அதிகாரத்தைமீறி நடக்கவில்லை என்பது வெங்கடேச நாயுடு v. ஷிரீவன் சடகோபா ஸ்ரீ சடகோபசாமி (M. H. C. P. 77) கேஸில் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானத்தால் நன்கு விளங்குகின்றது. டிரஸ்டிகளில் ஒருவரை பரம்பரை டிரஸ்டியாகச் செய்து [illegible]மையால், சட்டப்பிரகாரம் ரெவினியூ போர்ட்டாருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை ரெவினியூ போர்ட்டார் பாரம்பரை டிரஸ்டிக்கு விட்டுவிட்டார்கள் என்று அப்பீல் வாதிகள் சொல்லும் கக்ஷியும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல; ரெவினியூ போர்ட்டார் செய்த ஏற்பாடு ஒழுங்காய் நடைபெற்று வரும்போது அதை மாற்றுவதும் கூடாத காரியம். அவர்கள் செய்த ஏற்பாடு யாதொரு புகாருக்கு உட்படாமல் நடைபெற்று வரும்போது அதை மாற்றவும் கூ[illegible]டுக்கலவத சாகிப்பா v. உசேன் சாகிப்பா இ. லா ரி. 17 சென் 21) கேஸில் பரம்பரை டிரஸ்டிகளிருக்கும்போது அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. இந்த ஒரு காரணத்தைக்கொண்டே தேவஸ்தானக் கமிட்டியார் அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கக் கூடாதென்று சொல்லிவிடலாம்; இந்தக்காரணமின்றியும் அடிஷனல் டிரஸ்டிகள்

நியமிக்கக்கூடா தென்றும் சொல்லாமல் டிரஸ்டிகள் அலக்ஷிய
த்துடன் சீர்கேடாக மானேஜ்மெண்டு செய்து வந்தால் அப்ப
டிப்பட்ட டிரஷ்டிகளை விலக்கிவிட்டு புதிய டிரஸ்டிகள் நிய
மிக்கவேண்டுமே யொழிய அடிஷனல் டிரஸ்டிகள் நியமிக்கக்
கூடாது. மேலும் தேவஸ்தான கமிட்டியார் செய்திருக்கும்
நியமனங்களுக்கு ஒரு முக்கியமான ஆக்ஷேபம் என்னவென்
றால் நியமிக்கப்பட்டிருக்கும் அடிஷனல் டிரஸ்டிகள் சொற்ப
காலத்திற்கு டிரஸ்டிகளா யிருப்பவர்கள்; சேஷாத்திரி அய்ய
ங்கார் v நடராஜ அய்யர் (இ. [illegible]. ரி.) 7 சென் 179 ல் ஜட்ஜி
மிஸ்டர் ஷெப்பர்ட் தேவஸ்தான கமிட்டியாரை [illegible]கால
த்திற்கு டிரஸ்டிகளை நியமிக்கும்படி விடுவது அவர்களுக்குக்
கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை துர்விநியோகப் படுத்
தும்படி செய்யும் என்று சொல்லி யிருக்கிறார். 1863 ௵ 20
வது ஆக்டில் தேவஸ்தானத்தின் நேரான பரிபாலனை தர்மக
ர்த்தா டிரஸ்டிகளிடத்திலிருக்கவேண்டு மென்றும் [illegible]ான
கமிட்டியார் மேற்பார்வை பார்த்து வரவேண்டுமென்றும் [illegible]
லப்பட்டிருக்கின்றது. [illegible]ற்ப காலத்திற்கு நியமிக்கப்படும்
தாமகர்த்தா டிரஸ்டிகள் எப்போதும் தேவஸ்தான கமிட்டியா
ரின் தயவையும் தாக்ஷிணியத்தையும் அபேக்ஷித்தவர்களா யிரு
ப்பார்கள். தேவஸ்தான கமிட்டியார் தங்களை தர்மகர்த்தா
ஸ்தானத்திலிருந்து விலக்கி விடுவார்களோ என்று அஞ்சி அவ
ர்கள் இஷ்டப்படி நடக்க விருப்பமுடையவர்களா யிருப்பார்
கள் அப்போது தேவஸ்தான மானேஜ்மெண்டும் கமிட்டியாரு

டைய அதிகாரத்திற்குட்பட்டு சேர்குலைந்து போகக்கூடியதா யிருக்கும். ஆகையால் சொற்ப காலத்திற்த தர்மகர்த்தாக்கள் நியமிக்கக்கூடாது. ஆகவே ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானத்தை எற்றுக்கொண்டு அப்பீலை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா. ரி. 29 சென். 534. Ganapathy Iyer v. Sree Vethi Vyasa Tholasiuga Pattar 29 Mad. 534.

CHIT FUND CASE.

சீட்டு பண்டுக் கேஸ்

புதிபேர்கள்:—சர் ஆல்னல்ட் வொயிட்

மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்

மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்

அப்பய்யா சாஸ்திரி—நீலமேகசாஸ்திரி—முதல்

பிரதிவாதி—அப்பீலாந்.

V

அப்பய்ய சாஸ்திரி—வாதி—அப்பில்பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—சீட்டுப்போடும் பண்டுகள் எப்படியிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும் எப்படியிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை.

வியாஜ்ஜியசங்கிரகம்:—ஒரு சீட்டு பண்டிற்கு முதல் பிரதிவாதியும இன்னொருவரும் ஆக இருவரும் மானேஜர்களாக இருந்தார்கள். வாதி மானேஜர்களிடம்சீட்டுகட்டிக்கொண்டுவந்தார். இவருக்குச்சேரவேண்டிய சீட்டுப்பணம் பிர

திவாதிகளால் கொடுக்கப்படவில்லை. மானேஜர்களில் ஒரு வர் இறந்துபோய்விட்டார் இவருடைய வார்சை இரண் டாவது பிரதிவாதியாகச் சேர்த்து இரண்டு பிரதிவாதி கள் பேரிலும் ஜில்லாக்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். பிரதிவாதிகளிருவரும் அவர்களிடம் சீட்டுக்கட் டிக்கொண்டுவந்த வாதி உள்பட 10 பேர்களும் அடியிற் கண்ட பிரகாரம் கரூர் நாமா எழுதிக்கொண்டார்கள். சுப்பிர மணிய சாஸ்திரியும் நீலமேகசாஸ்திரியும் அடியிற் சொல்லப் பட்ட 12 பேர்களும் கூட்டுக்சீட்டு சேர்ந்து செய்துகொண்ட கரூர்நாமா 1899 ம் ஷ்ம் அக்டோபர்மாதம் ஞாயிற்றுக்கிழ மை முதல் ஒவ்வொருவரும் ரூபாய் 250 மேனிக்குசீட்டுகட்டி வருஷத்திற்கு இரண்டு முறை, முறை ஒன்றுக்கு ரூபா 3500 சேர்த்து 6½ வருஷங்களுக்குச் சீட்டுபோட்டுக்கொண்டு வர வேண்டும். மேலே கூறப்பட்ட இருவர்களும் இந்த சீட்டு பண்டிற்கு ஏஜண்டுகளாகவிருந்து நடத்திக்கொண்டு வரவே ண்டும். இந்த பண்டில் சேர்ந்து சீட்டுக்கட்டிக்கொண்டுவரு கிறவர்கள் தங்களுடைய குடும்ப நன்மைக்காக கட்டிவருகி ன்றார்கள். ஆகையால் சீட்டு பண்டிற்கு அவர்களுடைய குடு ம்பமே கட்டுப்படவேண்டும். மேலே கூறிய இருவர்களும் இந்த சீட்டு பண்டிற்கு ஏஜண்டாகவிருந்துநடத்திக்கொண்டு வருவதை முன்னிட்டு முதல் சீட்டை ஏலம்போடாமல் சீட் டுத்தொகை மூன்றில் ஒரு பாகத்தை முதல் ஏஜண்டும், மூன் றில் இரண்டுபாகத்தை இரண்டாவது ஏஜண்டும் தங்களுடை

யகுடும்ப நன்மைக்காக எடுத்துக்கொள்ளவேண்டும். சீட்டுக் கட்ட வேண்டியவர்களிடமிருந்து ஏஜண்டுகள் சீட்டுப்பணத்தை வசூல் செய்யவேண்டும். ஒவ்வொரு சீட்டிற்கும் ஏஜண்டுகள் தாங்கள் கொடுக்கவேண்டிய சீட்டு பணத்தையும் போட்டுக்கொள்ளவேண்டும். இப்படிச் சேர்த்து இரண்டாவது சீட்டு முதல் ஏலம் போட வேண்டும். ஏலம் போடுவதற்கு முந்தி ரூபாய் ஆயிரத்திற்கு ரூபா 60 வட்டிமேனிக்கு ரூபா 210 வட்டிக்காக ஏஜண்டுகள் பிடித்துக்கொண்டு பாக்கி ரூபாய் 3290யையும் ஏலம் விடவேண்டும். யார் குறைந்த விலைக்குக்கேட்கிருரோ அவருக்கு விட்டுவிடவேண்டும். இதில் மிகுந்த பணத்தையும் வட்டிக்காகப் பிடித்து வைத்திருந்த பணத்தையும் சேர்த்து ஏஜண்டுகள் அப்போதைக்கப்போது பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

சீட்டை ஏலத்தில் எடுத்தவர்கள் கடன் வில்லங்கமில்லாத தங்களுடைய சொத்துகளின்பேரில் ஏஜண்டுகளுக்கு அடமானபத்திரம் எழுதிக்கொடுத்து ஏலத்தொகையை பெற்றுக்கொள்ளவேண்டும். ஏஜண்டுகள் சீட்டை எடுத்தவர்களுக்கு ஏலத்தொகையை கொடுக்காவிட்டால் ஏஜண்டுகள் ஜாமீனுக்க் கொடுத்திருக்கிறதும் இந்தக் கரார் நாமாவில் சொல்லப்பட்டிருக்கும் ஏஜண்டின் சொத்துக்களின்பேரில் தொடர்ந்து வசூல் கொள்ளலாம்.

ஏலம் எடுத்தவர்கள் ஏஜண்டுகளுக்கு அடமானப் பத்திரம் எழுதிக்கொடுத்தபின் ஏலத்தொகை வாங்காமற்போனுல்

அதுவரையில் அவர்கள் செலுத்தியிருக்கும் பணத்தைப் பிடி
த்துக்கொள்ளவேண்டும் அப்படி பிடித்துக்கொண்டும் ஏலம்
கொடுத்தவர்கள் நிதிக்குப்பணம் கொடுக்கவேண்டியதாக விரு
ந்தால் அதை ஏஜண்டு வசூல் செய்யவேண்டும். சீட்டுக்கட்ட
வேண்டியவர்கள் சரியான காலத்தி சீட்டுப்பணத்தை செ
லுத்த தவறிப்போனால் ஏஜண்டுகள் அவர்களுடைய பணத்
தைக் கட்டவேண்டும். அவர்களுக்குச் சேரவேண்டிய வட்
டிப்பணத்தையும் அசல் வட்டிப்பணத்தையும் ஏஜண்டுகள்
எடுத்துக் கொள்ளுவது மன்றி அவர்களிட மிருந்து 100 க்கு
மாதத்திற்கு இரண்டு வட்டிமேனிக்கு பணம் வசூல்செய்து
கொள்ளலாம். ஒரு ஏலத்தில் எவரும் கேட்காவிட்டால்
வட்டிப்பணம் ரூபாய் 210 கழித்துக்கொண்டு ஏஜண்டுகள்
சீட்டு எடுக்காத யாருக்கேனும் கொடுத்துவிடலாம். வட்டி
ப்பணத்தை மட்டிலும் ஏஜண்டுகளும் இன்னுமற்று முள்ளவர்
களும் அவ வர்களுடைய விகிதப்படி பங்கு பிரித்துக்கொள்
ளவேண்டும். சீட்டு எடுக்காதவர்கள் சீட்டுக் கட்டத்தவறிப்
போனால் அவர்களுக்கு ஒருமாத அவகாசம் ஏஜண்டுகள் கொ
டுக்கவேண்டும். அதற்குள் அவர்கள் செலுத்தாவிடில் ஏஜ
ண்டுகளுக்கு இஷ்டமிருந்தால் அவர்களை விலக்கிவிடலாம்.
அவர்களுக்குப் பதிலாக யாரேனும் சேரவிரும்பினாலும் ஏஜ
ண்டுகள் சேர்த்துக்கொள்ளலாம். இப்படிச் சேர்ந்தவர்கள் சீ
ட்டு எடுத்தவுடன் விலக்கப்பட்டவர்கள் கொடுத்திருந்த பணத்
தை வட்டிசேர்த்துக் கொடுத்துவிட வேண்டும். ஏலக்காரர் வட்

டிலாபத்தை தள்ளிக்கொடுப்பதற்கும் அதிகப்படி வட்டியை தள்ளிக் கொடுப்பதற்கும் ஏஜண்டுகளுக்கு அதிகாரமிருக்கின்றது. இந்த கஷரத்துகளின்படி இந்த சீட்டுபண்டை நடத்திக் கொண்டு வரும்பொருட்டு, இந்தக் கரார் நாமா செய்துகொள்ளப்பட்டது.

இம்மாதிரி சிலகாலம் நடத்திக்கொண்டு வந்ததில் இந்த சீட்டு பண்டில் 20 பேர்களுக்குமேல் சேர்ந்திருந்தார்கள்.

எதிர்வாதம்:—இரண்டு ஏஜண்டுகளும் மற்றும் இந்தபண்டில் சீட்டுக்கட்டி வருகிறவர்களுமாகச் சேர்த்து 20 பேர்களுக்கு அதிகமாக விருக்கிறார்கள் என்றும் ஆகவே இவர்கள் இந்தியன் கம்பெனி ஆக்ட் 4வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கூட்டத்தார் (Association) ஆகிறபடியால் இந்த சீட்டு பண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் அப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாததால் இந்த வியாஜ்ஜியம் செல்லாதென்பது முதல் பிரதிவாதியின் கக்ஷி.

ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானம்:—வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்த சிவில் ரிவிஷன் மனு மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாமால் விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

முதல் பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் லெட்டர்ஸ் பேட்டண்ட் அப்பீல் செய்துகொண்டார்.

இந்த அப்பீல் மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் கூடியிருந்த கோர்ட்டிற்கு விசாரணைக்கு வந்தது.

புல் பெஞ்சுக்கு ரிபர் செய்ய நேரிட்ட காரணங்கள்:— மதுரை ஜில்லாவிலிருந்து இராமசாமி பாகவதர் V. நாகேந்திராரயன் (இ. லா ரி. 19 சென் 31) என்கிற அப்பீல் வியாஜ்ஜியம் ஹைக்கோர்ட்டிற்கு வந்தது. இந்தக்கேசில் 20 பேர்களுக்கு மேல் அதிகமாகச் சேர்ந்து சீட்டுப்போட்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் சீட்டுப்பிடித்தவனிடம் சீட்டுப்பணம்செலுத்தி வந்தார்கள். சீட்டுக் குலுக்கி எவர் பெயருக்கு சீட்டு வருகிறதோ அவருக்கு அந்தமாத சீட்டுத் தொகையைக்கொடுத்து வந்தார்கள். சீட்டு எடுத்தவன், சீட்டுப்பிடித்தவன் பெயராலும், பாக்கியுள்ள சீட்டுக்காரர்கள் பெயராலும் பத்திரம் எழுதிக்கொடுத்து சீட்டுப்பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இப்படிப் பத்திரம் எழுதிக்கொடுத்து சீட்டு எடுத்துக்கொண்ட ஒருவன் பிறகு சீட்டுகட்டவில்லை ஆகவே அவன் எழுதிக்கொடுத்த பத்திரத்தின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. இந்த வியாஜ்ஜியத்தில் சீட்டுப்பண்டுக்காரர்கள் இந்தியன் கம்பெனி ஆக்ட் 4 வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோஷியேஷன்காரர்களாகிறபடியாலும், இந்தச் சீட்டுப்பண்டுக்காரர்கள் தங்களுடைய பண்டை சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யாதபடியால் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வியாஜ்ஜியம் செல்லாதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள்.

கிற்க, மலையாளத்திலிருந்து பஞ்சன பஞ்சு நாயர் 1. கா
ட்டின் ஹெறக்குமாரன், சதபத்பநாப நாயர் (இ. லா. ரி 20
சென் 68) என்கிற ஒரு அப்பீல் வியாஜ்ஜியம் வந்தது. இந்
தக் கேசில் இருபது பேர்களுக்கு அதிகமாகச் சேர்ந்து லாட்
டரி ஏற்படுத்தி டிக்கட்டு வாங்கிக்கொண்டார்கள். லாட்ட
ரியில் வெற்றி அடைந்தவர்கள் லாட்டரிக்கித் தலைமையாக
விருந்த இரண்டு பேருக்கு மாதா மாதம் செலுத்தவேண்டிய
பணத்திற்காக ஈடுகாட்டி பத்திரம் எழுதிக் கொடுத்துவி
ட்டு லாட்டரிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள்.
இப்படி லாட்டரியில் பணம் பெற்றுக்கொண்டு பத்திரம்
எழுதிக்கொடுத்தவன் பின்பு செலுத்தவேண்டிய தவணைப்
பணத்தைச் செலுத்தவில்லை. ஆகவே லாட்டரி தலைவர்கள்
வியாஜ்ஜியம் கொணடு வந்தார்கள், இந்தக் கேசில் ஹைக்கோர்
ட்டார் ஒரு லாட்டரியில் சேர்ந்தவர்கள் பணத்தைச் செலு
த்தாவிட்டால் அப்பணத்தை வசூல் செய்யும்பொருட்டு இந்த
லாட்டரி ஏற்பாட்டின்படி லாட்டரி தலைவர்களுக்கு பட்டிலு
இருக்கின்றது. இரண்டாவது லாட்டரியில் சேர்ந்தவர்கள்
பணம் கொடுக்கத் தவறிப்போய்விட்டால் அந்தப் பணத்தைத்
தங்களுடைய கையிலிருந்து கொடுக்கவேண்டிய பொறுப்பும்
லாட்டரித் தலைவர்களுடைய பொறுப்பாயிருக்கின்றது. லாட்
டரியில் வெற்றிபெற்று வந்தவன் பின்னிட்டு செலுத்தவேண்
டிய தவணைக்காக எழுதிக்கொடுக்கும் பத்திரமும் லாட்டரித்
தலைவர்களுக்கே தவணைப்பணம் செலுத்தாதவர்களை விலக்

கவும். புதியவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் லாட்டரி தலைவர்களுக்கே அதிகார மிருக்கின்றது. ஆகையால் லாட்டரியைச் சேர்ந்த சகல விஷயங்களும் லாட்டரி தலைவர்களைப் பொருத்திருக்கின்றது. லாட்டரியில் சேர்ந்த மற்றவர்கள் தங்களுடைய தவணைப்பணத்தை லாட்டரி தலைவர்களிடம் செலுத்துவதும் லாட்டரி தங்களுக்கு விழும்போது தலைவர்களிடமிருந்து தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதும் ஆகிய இந்த இரண்டு சுதந்தரங்களைத் தவிர்த்து வேறொரு சுதந்தரமில்லை. லாட்டரியில் சேர்ந்திருந்தவர்களுக்குள் ஒருவருக்கொருவர் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஆகையால் லாட்டரியைச் சேர்ந்திருப்பவர்கள் இந்த லாட்டரியில் சேர்ந்து டிக்கட்டு பெற்றுக்கொண்டிருந்த போதிலும் ஒருவருக்கொருவர் யாதொரு சம்பந்தமுமின்றி நிற்கிறபடியால் அவர்கள் அன்னியர்கள் நிலைமையிலிருக்கிறார்கள் என்று சொல்லி இப்படிப்பட்ட லாட்டரி இந்தியன் கம்பெனி ஆக்ட் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷன் ஆகமாட்டாதென்றும் இந்த லாட்டரி ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியது அனாவசியமென்றும் தீர்மானித்தார்கள். இன்னொரு அப்பீல் வியாஜ்ஜியத்தில் அதாவது நாராயணசாமி v. சாம்புவய்யன் (11 மதராஸ் லா ஜர்னல்) கேசில் 20 பெயர்களுக்குமேல் அதிகமாகச் சேர்ந்து சீட்டு பண்டு ஏற்படுத்தி சீட்டுப் போட்டுக்கொண்டு வந்தார்கள். எல்லாச் சீட்டுக்காரர்களும் சேர்ந்து தங்களுக்குள் 9-பேர்களைக் கொண்டு

களாக நியமித்து இந்த பண்டை நடத்திக்கொண்டு வரும்படி ஏற்பாடுசெய்து இவர்கள் ஒழுங்காய் சீட்டு நடத்திக்கொண்டு வருகிறார்களாவென்று விசாரணை செய்யவும் இவைகளை எஜ ண்டு ஸ்தானத்தில் வைக்கவும் தங்களிடம் அதிகாரம் வைத் துக்கொண்டார்கள். இந்த சீட்டு பண்டைச் சேர்ந்த கேஸ் ஹைக்கோர்ட்டிற்கு வந்தபோது மேலே கூறப்பட்ட மலையாள லாட்டரியைப்போல சொந்த முதலாளியுள்ள சீட்டுபண்டு அல்லவென்று இதில் சேர்ந்த எல்லோருமே சீட்டுபண்டிற்கு முதலாளிகள் என்றும் இதில் சேர்ந்திருக்கிறவர்களுக்குள் ஒரு வருக்கொருவர் கட்டுப்படும்படியாக சுதந்தரமிருக்கிறதென் றும் சீட்டு பண்டுக்காரர்கள் இந்தியன் கம்பெனி ஆக்ட் 14-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷன்காரர்க ளாகிறார்கள் என்றும் ஆகையால் இந்த சீட்டு பண்டு ரிஜிஸ் டர் செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். ஹைக் கோர்டார் மேலே கூறப்பட்ட மலையாள லாட்டரி ரிஜிஸ் டர் செய்யப்பட வேண்டியதில்லை என்று தீர்மானித்து முதல் சீட்டு பண்டுகளைப்பற்றியும் லாட்டரிகளைப்பற்றியும் கேசுகள் ஹைக்கோர்ட்டிற்கும் வெளியூர் கோர்ட்டுகளுக்கும் வந்தால் எம்மாதிரியுள்ள சீட்டுபண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண் டும். எம்மாதிரியான சீட்டுபண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியதில்லை என்று சரிவர தெரியாமலிருக்கிறபடியால் இதைப்பற்றி முடிவானவும் விபரமானவுமான அபிப்பிராயம் கூறும்படியாக இந்தக்கேஸ் புல்பெஞ்சிற்கு ரிபர் செய்தார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அப்பீல் வாதி தரப்பிற்கும் மிஸ்டர் T. சுப்பிரமணிய அய்யரும் மிஸ்டர் P. பஞ்சாபிகேச சாஸ்திரியும் அப்பீல் பிரதிவாதி தரப்பிற்கும் பேசினார்கள்.

புல்பென்ச் அபிப்பிராயம்:—ஒரு சீட்டு பண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமோ அல்லது வேண்டாமா என்று பரீக்ஷிக்க மேலே கூறப்பட்டுள்ள மலையாள லாட்டரி கேஸில் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானமே சரியான தீர்மானம். ஒரு சீட்டு பண்டு இந்தியன் கம்பெனி அக்ட் [illegible] பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷன் என்று சொல்லப்பட வேண்டுமானால் அந்த பண்டைச் சேர்ந்தவர்கள் 20-பேர்களுக்கு மேலிருக்கவேண்டும். அவ்வளவு பேர்களுக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பர சுதந்தரங்களும் கடமைகளுமிருக்க வேண்டும். அல்லது கட்டுப்பட்டு பாத்தியப் படவேண்டிய விஷயங்களில் எல்லோரும் சேர்ந்து பாத்தியப்பட வேண்டியதாக விருக்கவேண்டும் அல்லது பாத்தியதைகளை அல்லது சுதந்தரங்களை அனுபவிக்கவேண்டிய விஷயங்களில் எல்லோருக்கும் பாத்திய மிருக்கவேண்டும். இந்த அம்சங்களை உடைத்தாயிருக்கும் பண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப் படவேண்டும். பிரஸ்தாப பண்டு வியாஜ்ஜியத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற கரூர் நாமாவைப் பார்த்தால் அதில் சொல்லப்பட்டிருக்கும் இருவர்கள் மற்ற மெம்பர்களால் நியமிக்கப்பட்ட ஏஜண்டுகளாகக் காணப்பட்ட போதிலும் கரூர் நாமாவை முழுதிலும்

வாசித்துப் பார்த்தால் அவர்களே இந்த பண்டிற்குச் சொந்தக்காரர்கள் என்று தெரியவருகின்றது. ஆகையால் இந்த பண்டு இந்தியன் கம்பெனி ஆக்ட் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அசோசியேஷனாக மாட்டாதென்றும் இந்த பண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியதில்லை என்றும் அபிப்பிராயம் கூறினார்கள். புல்பென்ச்சார் அபிப்பிராயம் கூறியபின்னர் இந்த அப்பீலை மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் ஆகிய இருவர்களும் விசாரணை செய்து செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

N. B. இந்தக்கேஸ் நம்முடைய சென்னை ராஜதானிக்கு முக்கியமான கேஸ். சீட்டுபோடுவதற்குச் சேரவேண்டியதாகவிருந்தால் இருபது பேர்களுக்குமேல் சேரவேண்டும். சேர்ந்த மெம்பர்கள் ஒவ்வொருவரும் பரஸ்பர சுதந்தரமிருக்கவேண்டும். யாராவது ஒரு மெம்பர் பணம் கொடுக்கத் தவறிப் போய்விட்டால் எல்லோரும் சேர்ந்து பிராது செய்யவேண்டும். ஏதேனும் கடனுக்குப் பாத்தியப்படவேண்டியதாக விருந்தால் அந்தக் கடனுக்கு எல்லோரும் சேர்ந்து பாத்தியப்படவேண்டும். சீட்டெடுத்துக்கொண்டவன் எல்லார் பேராலும் பத்திரமாவது பிராமிசரி நோட்டாகிலும் எழுதிக்கொடுக்கவேண்டும். இந்த அம்சங்களைப் பொருந்தியிருந்தால் அந்த பண்டு கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். அப்படிக் இல்லாவிடில் இது சம்பந்தமாக வந்த வியாஜ்ஜியங்கள் கோர்ட்டில் செலாமணியாக மாட்டாது. சாதாரணமாய் ஒருவன்

அல்லது இரண்டுபேர் சேர்ந்து சீட்டுப்பிடித்து மற்றவர்களைச் சேர்த்துக்கொண்டு ஒவ்வொரு சீட்டு சமயத்திலும் பணம் வசூல்செய்து சீட்டுக்குலுக்கி சீட்டு வந்த பேர்வழிக்குப் பணம் கொடுத்துத் தங்கள்பேருக்கு மட்டில் ஒரு பத்திரம் எழுதிக்கொண்டும் சீட்டுக்கட்ட வேண்டியவன் சீட்டுக்கட்டத் தவறிப் போனால் தாங்கள் பணம் கையிலிருந்து கொடுக்கவும் வசூலித்துக்கொள்ளவும் ஆக இம்மாதிரி சகல சுதந்தரமும் சீட்டிற்கு தலைமை வகித்திருந்து பிடிக்கிறவர்களுக்கு ஏற்பட்டதாயிருக்கும்; சீட்டு பண்டுகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை.

அலகபாத் ஹைகோர்ட்.

ஜட்ஜிகள்—சீப் ஜஸ்டிஸ் ஸர் ஜான் ஸ்டான்லி

மிஸ்டர் ஜஸ்டிஸ் வில்லியம் பர்க்கிட்

சிவில் அப்பீல்.

அனுமால் வகையரு—பிரதிவாதிகள்—அப்பீல்வாதி.

V.

பெர்லி கலெக்டர்—வாதி—அப்பீல்பிரதிவாதி.

லாப்பாயிண்ட்:—வேறொருவருக்குச் செய்திருக்கும் உடன்படிக்கை தெரிந்து வாங்கின கிரயம் செல்லாது.

வியாஜ்ஜியசங்கிரகம்:—1857ம் வருஷம் காபாத்ராம் என்பவர் மகேஸ்வரம் கிராமத்தையும் வேறு சில சொத்தை

யும் வைத்துவிட்டு இறந்துபோனர். இவருடைய விதவை அந்த சொத்தை அனுபவித்து 187[illegible]ஆம் இறந்துபோனர். பிறகு நாபாத்ராமின் ஸ்வீகார புத்திரனின் மனைவி என்று சொல்லி சொத்துக்களை ராணிநாராயணன் இவ்வர் அபகரித்துக்கொண்டார்.

1. கஷிப்லால், (2) பிரியாரிலால் ஆகிய பிரதாத்திலுள்ள இரண்டு [illegible] வார்சுகள் 1889ஆம் ஜூன்மீ 20உ பேரிலி ஜில்லா ஜட்ஜ் [illegible] இச்சொத்துக்கள் வசப்படுத்திக்கொள்ள டிக்கிரிபெற்றார்கள். இவ்வியாஜ்ஜியத்திற்கு பணம் உதவிசெய்த [illegible]லால்ஜிமால் என்பவருக்கும் இச்சொத்தில் ஒரு பாகம் [illegible]த்தார்கள். பியாரலால் இறந்துபோனதுஇவருக்கு வார்சாக பெய[illegible]ரோப் பிரசாத் இச்சொத்தின் சிறிது பாகத்தை யனு[illegible]க்கார்.

இவ்வாறிருக்கும்பொழுது கஷிப்லாலும் பெயிரல் பிரசாதும் தங்களுடைய வியாஜ்ஜியத்தில் தங்களுக்கு நர்படா பிரசாத்செய்த உதவிக்காக 1-ரூபா வரும்படியில் 2-அணு 8-பைசா வரும்படிபாகத்தை நர்படா பிரசாதுக்கு கொடுத்துவிடுகிறதென்றும் அவர் பெயரைத் தங்கள் பெயரோடு கேவாத்துகளில் பதிந்துவிடுகிறதென்றும் ஒரு உடன்படிக்கை ரூபாய்ஸ்டாம்பு கடுதாசியில் எழுதி ரிஜிஸ்டர்செய்யாமல் இருந்துவிட்டார்கள். இவ்வுடன்படிக்கையில் பாஜிமால் சாக்ஷி போட்டிருக்கிறர். ராணிநாராயண குன்வீர் அப்பீல் செய்தபொழுது ஒரு ராஜிநாமா செய்துக்கொண்டு வேறுசொத்துக்களைகொடுத்துவிட்டு

மகேஸ்புரம் கிராமத்தைத் தங்களுக்குள் வைத்துக்கொண்டார்கள். இந்த ராஜிநாமாவை ஒட்டி ஹைக்கோர்ட்டு டிக்கிரி 1885 ஷு ம் ஜுலைமாதம் 8 உ தேதி பிறப்பட்டது. இத்தருவாயில் ராணிநாராயண குன்வார் மகேஸ்புரம் கிராமத்தை ராம்சாப் என்பவருக்குத் தனக்குப்பாத்தியதை யுள்ளதாக 1885 ம் ஷு செப்டம்பர் மாதம் 24 உ ஹைக்கோர்ட்டு டிக்கிரிக்குப் பிறகு கிரயஞ்செய்து விட்டார். இக்கிரயத்தை ஆதாரமாகக் கொண்டு ராம்சாபின்மேல் டிக்கிரிபெற்ற ஒருவர் இக்கிராமத்தை ஏலம்போட ஹரிசரன்மிசர் என்பவர் ஏலமெடுத்துவிட்டு இறந்துபோனார். இவர் குமாரர்கள் மைனராயிருந்ததால் கோர்ட் ஆப் வார்ட்ஸில் இவருடைய சொத்துக்களைப் பரிபாலனம் பண்ணினார்கள்.

க்ஷிப்லாவின் சகோதரர் மகன் லக்ஷ்மி நாராயணனுக்கும் க்ஷிப்லாவுக்கும் விவாதம் வந்தபொழுது ஒரு மத்தியஸ்தரிடம் மகேஸ்புரம் கிராமத்துக்கு பாத்திதையுள்ளவர்கள் இன்னாரென்றும் இவ்வளவு பாத்தியமுள்ளதென்றும் பின்வருமாறு தெரிவித்துக்கொண்டார்கள்.

க்ஷிப்லாவுக்கு 4 அணா 6 பைசா வரும்படி பாகமும், பெயிரோபிரசாதுக்கு 3 அணா 6 பைசா வரும்படி பாகமும் லால்மாவுக்கு 5 அணா 4 பைசா வரும்படி பாகமும் நர்பதா பிரசாதுக்கு 2 அணா 8 பைசா வரும்படி பாகமும் உள்ளதென்றும், இதில் யாதொரு விவாதமும் இல்லை என்றும் எழுதிக்கொடுத்தார்கள்.

கூிப்லாலுக்கும் லக்ஷிமி நாராயணனுக்கும்நடந்த வியாஜ்ஜியத்தில் நர்படா பிரசாத்துக்கு 2 அணு 8 பைசா வரும்படி பாகச்சொந்தமென்றும் கூிப்லால் ஒப்புக்கொண்டிருந்தும் லால்ஜிமால் முன் உடன்படிக்கையில் சாக்ஷி போட்டிருந்தும் கூிப்லாலுக்கு 7 அணு 2 பைசா வரும்படியாகப் பாத்தியமிருப்பதுபோல அவரிடமிருந்து லால்ஜிமால் ஒத்திபம் வாங்கிக்கொண்டார்கள்.

லால்ஜிமால் இறந்துபோக இவருடைய விதவை ..... மாலுக்கு லால்ஜிமாலின் பாத்தியதை கிரயம் செய்தார்

1896ம் ஆ அக்டோபர் மீ 10வ ஹரிசரண் மிசர் என்பவருக்கு ..... பிரசாத்தின்பாகம் 2 அணு 8 பைசா வரும்படியாக ஒரு ..... கிரம் கொடுத்துவிட்டார்.

1901ம ஆ ..... பாத் பாங்கியார் (Allahabad Bank) லால்ஜிமாலைக் கட்டுப்படுத்தி ஒரு டிக்கிரி பெற்றிருந்ததால் மகேஸ்வரம் கிராமத்தில் லால்ஜிமாலுக்கு 13 அணு $4\frac{1}{2}$ ..... வரும்படி பாகம் பாத்தியமிருக்கிறதாகச் சொல்லி ஏலத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவ்வளவு லால்ஜிமாலுக்குச் சொந்தமில்லை என்று ஜாசாரன் மிசர் மைனர் குமாரர்களுக்காகக் கோர்ட்டு ஆப்வார்ட்சார் ஆக்ஷேபனை மனுக்கொடுத்தார்கள். இவ்வாக்ஷேபனை மனுவை சப்கோர்ட்டார் ஒத்துக்கொள்ளாததால் சி. பு. கோ 283வது பிரிவின்படி புது வியாஜ்ஜியம்கொண்டுவந்தார்கள். மகேஸ்புரம்கிராமத்தில் தங்களுக்கு 8 அணு வரும்படி தங்களுக்கிருக்கிறதாக டிக்ளேர் பண்ணும்படிக்கும்

அப்பாகத்தின்மேல் அலகாபாத் பாங்கியார் தொடரக் கூடாதென்றும் உத்திரவு பிறப்பிக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள்.

இவர்களுக்குப் பிரதிவாதிகளாக விருந்தவர்கள் (1) அலகபாத்பாங்கியார், (2) லால்ஜிமாவின் விதவையும் குமாரர்களும், (3) அனுமால்சந்தர். மேற்படி அலகபாத் பாங்கிக்குப் பணம் செல்லாகிவிட்டதால், இவர்கள் கக்ஷியாடவில்லை. இவர் லால்ஜிமாவின் விதவையும் குமாரர்களும் தங்கள் பாத்தியத்தைக் கிரயம் செய்துவிட்டதால், இவர்களும் கக்ஷியாடவில்லை.

அன்னு மால் வகையறா மாத்திரம் எதிர்கக்ஷியாடினார்கள். சப் கோர்ட்டார் தீர்மானம் [illegible] பிரசாதின் பாகமாகிய 2 அணா 8 பைசா வரும்படி [illegible] அணா, 3½ பைசாவரும்படி பாகத்திற்கு வாதிக்கு [illegible] செய்தார்கள். இதன்மேல் ஹைகோர்ட்டிற்கு அன்னு மால் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—ராணி நாராயண குன்வாரின் ராஜிநாமா [illegible] ஹைகோர்ட்டார் செய்ததற்கு ஒரு வருஷத்திற்குமுன் 1884-ம் வருஷம் செப்டம்பர் மீ 1-வ கக்ஷிக்காரர் [illegible] பிரசாத்தும் இந்த வியாஜ்ஜியத்தில் முக்கிய தஸ்தாவேஜியாயிருக்கும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ராணி நாராயண குன்வாரோடு செய்த வியாஜ்ஜியத்தில் தாங்கள் ஜெயமடைந்ததையும், கர்படா பிரசாத் தங்களுடைய கக்ஷியிலிருந்து நடத்தினதையும் தம் பாத்தியதை

யும் ஸ்தாபிக்க தஸ்தாவேஜி சாக்ஷியங்கள் தயார்பண்ணினதையும் தாங்களும் நர்படா பிரசாத்தும் ஒரே மூல புருஷனின் சந்ததியா யிருப்பதையும் கண்டெழுதி (மேலே கூறிய உதவிக்காக) தீர்மானத்திலாவது ராஜிநாமாவிலாவது தங்களுக்கு கிடைத்து தங்கள் சுவாதீனமாகும் எல்லாச் சொத்துக்களிலும் 2 அணா 8 பைசாவரும்படி பாகத்தை நர்படா பிரசாத்துக்குக் கொடுக்கிறதென்றும் உடன்படிக்கையில்எழுதி யிருந்தார்கள். அன்றியும் அவர் பெயரை கேலாத்தில் தங்கள் பெயரோடு ஜமீன்தார் என்றும் சொத்துக்குச் சொந்தக்காரர் என்றும்பதித்துவிடுகிறதென்றும் இவ்வுடன் படிக்கையில் வரையப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் லால்ஜிமால் சாக்ஷி கையெழுத்து போட்டிருந்தார். அதில் லால்ஜிமால் வாங்கியிருந்த சில சொத்துக்களும் மத[illegible]மாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த சில சொத்துக்களும் விலக்கி யிருந்தன. லால்ஜிமால் நேரில் இந்தப்பத்திரத்தில் சம்பந்தப்படாமலிருந்தாலும் அவ்வுடன படிக்கையில் எழுதியிருக்கும் சங்கதிகளை அறிந்தவராக இருக்கிறார். பெர்காம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தீர்ப்பினால் ஈஸ்வர்ராமின் குடும்ப சந்ததி ஜாப்பிதாவை நர்படா பிரசாத் சேகரம் பண்ணிக்கொடுத்து கக்ஷி ஜெயிக்கும்படி செய்ததாகத் தெரியவருகிறது. இவ்வுடன்படிக்கை ஐந்து ரூபாய் ஸ்டாம்பு கடிதத்தில் எழுதி ரிஜிஸ்டர் பண்ணப்படாமலிருந்தது. 2 அணா 8 பைசா வரும்படி பாகத்தை கிரயஞ் செய்ததாக யாதொரு பத்திரமும் காணப்படவில்லை, இவ்விரண்டுங்குறைவா யிருக்கிறதென்றுடிய

ன்ன் சொன்னார்கள். 2 அணா 8 பைசா வரும்படி பாகத்துக்கு ச்சொந்தக்காரராக ர்பட்டா பிரசாத்தின் பெயரை கேவாத்தில் எழுதி உடன்படிக்கை ஷரத்து பூர்த்தி பண்ணியிருக்கிறதாக 1902 ம் வருஷம் ஹைக்கோர்ட்டார் செய்த அப்பீல் தீர்மான த்தால் தெரிகிறது. இந்த வியாஜ்ஜியம் ஷிப்லால் ஒரு பக்க த்திலும் ர்பட்டா பிரசாத் மற்றொரு பக்கத்திலுமிருந்து கக்ஷி யாடினதால் ஏற்பட்ட தீர்ப்பு அப்பீல் வாதிகளாகவும் கீழ்க் கோர்ட்டு பிரதிவாதிகளாகவு மிருக்கிறவர்கள் ஷிப்லால் லா ல்ஜீ மாலுக்கு மகேஸ்புரம் கிராமத்தில் 7 அணா 2-பைசா வரு ம்படிபாகத்தை விற்றதினால் (இதில் 2 அணா 8 பைசா வரும் படி பாகமும் சேர்ந்திருக்கிறதென்று அது தங்களுக்குக்கிடை க்கவேண்டுமென்று பாத்தியம் கொண்டாடுகினார்கள். ஹரிசா ண்மிசருக்கு ர்பட்டா பிரசாத்து 2 அணா 8 பைசா வரும்படி பாகத்தை விதலைப் பத்திரத்தின் மூலமாக கையளித்து விட் டதால் கீழ்க்கோர்ட்டு வாதிகளாகிய அப்பீல்பிரதிவாதிகள் தங் களுக்குக் கிடைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள் ஆகை யால் இவ்வியாஜ்ஜியத்தின் இரு கக்ஷிகாரர்களும் அவ்வியாஜ் ஜியத்தின் இரு கக்ஷிகாரர்களிடமிருந்து தங்களுக்குப் பாத்தி யமுண்டானதாகச் சொல்லுகிறார்கள். முந்தின வியாஜ்ஜிய த்தில் ர்பட்டா பிரசாத்துக்கு யாதொரு பாகமும் கொடுக்கப்ப டவேண்டியதில்லை என்றும் கொடுக்க உடன்படவில்லை என் றும் இவர் பெயரை வாதி குறித்தது புகலானகாரிய மென்றும் டிக்ரீனோர் பண்ணும்படி கோர்ட்டாரை ஷிப்லால் கேட்டுக்கொ

ண்டார். ஷிப்லாலின் மேல் தாவா செய்ய உத்தேசித்திருந்த லக்ஷிமிநாராயணனை இந்தச்சொத்து நர்படா பிரசாத்துக்குச் சொந்தமென்று காண்பித்து ஏமாற்றுவதற்காக இக்காரியம்செய்ததாக ஷிப்லால் காரணம் சொன்னார். இந்த வியாஜ்ஜியம் கீழ்க்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வியாஜ்ஜியம் ஹைக்கோர்ட்டு விசாரணைக்கு வந்தபோது ஷிப்லாலின் பிரியாது பொய்யென்றும் லக்ஷிமி நாராயணனை ஏமாற்றுவதற்கு நர்படா பிரசாத்தின் பெயர் பதியப்படவில்லை என்றும் முன்னேற்பட்ட உடன்படிக்கையை முன்னிட்டு அவர் பெயர் பதியப்பட்டதென்றும் 1887 ம் வருடம் மார்ச்சுமீ 9உ நடந்த வேறொரு உடன்படிக்கையில் இது உறுதிசெய்யப்பட்டிருக்கிறதென்றும் நர்படா பிரசாத் இச்சொத்துக்கு ஈடாகத்தான் உதவிசெய்திருப்பதாலும் அவ்வுடன் படிக்கை இருவரையும் கட்டுப்படுத்துமென்றும் உடன்படிக்கைப்படி நர்படா பிரசாத்துக்குக் கிரயசாசனம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் அக்கடமையில் ஷிப்லால் தவறிவிட்ட காரணத்துக்காக நியாயப்படி அவருக்குச்சேரக்கூடாத ஒரு சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ள டிக்கிரி கொடுக்கக் கூடாதென்றும் அத்தீர்ப்பில் எழுதியிருக்கிறார்கள், அத்தீர்ப்பில் கொண்ட கருத்தை மாற்றி வேறு தீர்ப்பு செய்ய இப்பொழுது யாதொருகாரணமுமில்லை.

இத்தீர்ப்பினால்இவ்வியாஜ்ஜியத்தில்எதிர்கக்ஷிக்காரர்சொல்லுவதுபோலன்றி நர்படாபிரசாத்தின் பெயரை கேவலத்தில்

பதிந்ததுஉடன்படிக்கையில் ஏற்பட்டவாக்குத்தத்தைநிறைவேற்றுவதற்கென்று தெரிகிறது. மேலொரு தஸ்தாவேஜி 1887ம் வருஷம் மார்ச்சு மீ 9வ எழுதப்பட்டது (1) பெயரோபிரசாத் (2) ஷிப்பால் (3) நர்படா பிரசாத் (4) லக்ஷ்மிநாராயணன் (5) லால்ஜிமால் ஆகியஇவ்வைவரும்கூடி அத்தஸ்தாவேஜியை எழுதியிருக்கிறார்கள். அதில் நாதுராமின் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளுவதற்காக நர்படாபிரசாவின் பெயரை சில நடவடிக்கை நடத்துவதற்காக [illegible] வேண்டுமென்றும் கீழே குறித்த பிரகாரம் இவர்கள் பங்கு ஸ்தாபிக்கப்பட்டுப் போய் எல்லாருடைய சம்மதத்தின்மேல் அப்பங்கு விகிதம் அன்றையவரைக்கும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகிறதென்றும் இப்பங்கு விகிதம் ஷிப்லால் 4½ அணா பெயிரோ பிரசாத் 3 அணா 4 பைசா நர்படாபிரசாத் 2 அணா 8 பைசா லால்ஜிமால் 5 அணா 4 பைசா என்றும் கண்டிருந்ததுடன் இப்பங்கு விகிதத்தில் ஷிப்லாலுக்கும் லக்ஷ்மிநாராயணனுக்கும் விவாதமிருக்கிறதென்றும் மற்றவர்களுடைய பங்கு விகிதத்தில் ஒரு விவாதமுமில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது. இப்பத்திரத்தில் ஷிப்லாலினுடைய பாகத்தில் லக்ஷ்மி நாராயணனுக்கு இவ்வளவு பாகமென்றும் வக்கீல் மிஸ்டர் காம்பருடைய மத்தியஸ்தம் முதலியவைகளையும் எழுதப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மேலே குறித்த ஜட்ஜிமெண்டில் இப்பத்திரத்தைப்பற்றி ஹைகோர்ட்டார் பூராய் யோஜித்து முன்னுடன்படிக்கையை அனுசரித்து எழுதியிருந்தார்கள்.

1 கக்ஷிகாரர்களின் பாகத்தில் விவர்தமிருக்கிறதாகவாவது அவைகளைத் தீர்க்கமத்தியஸ்தர்களைக்கேட்டுச்செய்கொள்ளவாவது இல்லை. நர்படா பிரசாத் அந்த மத்தியஸ்த வியாஜ்ஜியத்தில் ஒரு கக்ஷிக்காரராக விருந்தார். 3 கிராமம் கேலாத்தில்(Calcct) நர்படா பிரசாத்தின் பெயர் எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வுடன்படிக்கையின் பிரகாரம் காரியங்கள் நிறைவேற்றப்பட்டதென்று தெரிகிறது. லக்ஷிமிநாராயணன் செய்த வியாஜ்ஜியத்தில் மத்தியஸ்தரால் 2 அணு 8 பைசா வரும்படி பாகம் நர்படா பிரசாத்துக்கு தீர்ப்பு செய்திருக்கிறதாக ஷிப்லால் சொல்லி இருக்கிறார் என்றும் முன் ஜட்ஜிமெண்டில் கண்டிருக்கிறது, இதனால் நர்படா பிரசாத்துக்கு 2 அணு 8 பைசா வரும்படி பாகம் சொந்தமென்று ஷிப்லால் ஒப்புக்கொண்டு கிராமத்தின் கேலாத்தில் இவர் பெயரையும் பதிந்திருக்கிறார் என்று தெரிகிறது. 7000 ரூபாய் கிரயம் பேசி (2 அணு 8 பைசா பாகம் உள்பட) 7 அணு 2 பைசா தனக்கிருக்கிறதாகக் கண்டு லால்ஜிமாலுக்கு ஷிப்லால் கிரயஞ் செய்திருக்கிற கிரயசாசனம் 1896 ௵ம் மேமீ 8உ பிறக்திருக்கிறது. இதில் நர்படா பிரசாத்தின் யாவரும் ஒப்புக்கொண்ட பாத்தியதையை அறியாதிருக்கிறதுபோல் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கிரயம் செய்தவரும் பெற்றுக்கொண்டவரும் நர்படா பிரசாத்துக்குரிய பாத்தியதையை நன்றாய் அறிந்திருக்கிறவர்களென்றும் சொல்லாமலே விளங்குகின்றது. 1887ம் வருஷம் உடன்படிக்கையில் லால்ஜிமாலும் ஷிப்லாலும் நே

சிற் சம்பந்தப்பட்டவர்கள். 18[illegible] வது வரு உடன்படிக்கை யில் ஷிப்லால் நேரிற் சம்பந்தப்பட்டும் லால்ஜிமால் சாக்ஷியா கவுமிருக்கிறுர். இவ்விரண்டாவது பத்திரத்தில் லால்ஜிமா வின் சொந்த சொத்துக்கள் நன்ருய்க் காபந்து பண்ணப்பட்டு எழுதியிருக்கிறது. இந்நூல் 2 அணு [illegible] பைசா வரும்படி பாக ம் பெற்ற ஷிப்லால் தனக்குச் சொந்தமல்லவென்று தெரிந்தவ ராக விருக்கிருர். இப்பாகத்தை வாங்கின லால்ஜிமாலும் விற் றவருக்குச் சொந்தமல்லாத பாகத்தை வாங்குகிருமென்றும் தெரிந்தவராக இருக்கிருர். இவர்களிருவரும் அச்சொத்து நர்படா பிரசாதுக்குச் சொந்தமென்று தெரிந்திருக்கிருர்கள். 1895ம் வரு டிசம்பர்மீ 16உ ஹைக்கோர்ட்டார் செய்த தீர் மானத்தின்படி தனக்குப் பாத்தியமுண்டென்று விற்றதை கவனிக்கவேண்டியதில்லை. இத்தீர்ப்போ, ஷிப்லால், பெய்ரோ பிரசாத், லால்ஜிமால் ஆகிய மூவர்களும் ஹரிசரண்லால் இட மிருந்தும் கேஸ்புரம் கிராமத்தை சுவாதீனப்படுத்திக்கொள் ளக்கொண்டுவந்த வியாஜ்ஜியம் இதில் நர்படா பிரசாத்தைச் சேர்த்துக்கொண்டு கக்ஷியாடவில்லை. ஆகையால் இத்தீர்மா னம் நர்படா பிரசாத்தைப் பாதிக்காது; ஆகையால் 2 அணு, 8 பைசா வரும்படி பாகத்துக்கு நர்படா பிரசாத் சொந்தக் காரர்.

1896 வரு அக்டோபர்மீ 10உ நர்படா பிரசாத் எழு திக்கொடுத்த விடுதலைப் பத்திரத்தில் தனக்கு நாபத்ராமின் முழுச்சொத்தில் 2 அணு 8 பைசா பாகம் தனக்குச் சொந்த

மென்றும் மத்தியஸ்தர் தீர்ப்பிலும் கிராம ரிக்கார்டுகளில் தன் பெயர் பதிவுப்பட்டிருக்கிறதினலும் மகேஷபுரம் கிராமம் உள்பட தான் குறித்திருக்கும் பாகம் அவ்வளவுக்கு சுவாதீன அனுபவம் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு நேரிட்ட வியாஜ்ஜியச் செலவினல் ஏற்பட்ட கடனையும் தன் முன்னேர்பட்ட கடனையும் தீர்க்கவேண்டிய மகேஷபுரம் கிராமத்தில் தனக்குரிய 2 அணு 8 பைசா பாகத்தைத்தான் விட்டதாகவும் இனி தனக்கு யாதொரு சம்பந்தமில்லை என்றும் எழுதப்பட்டிருந்தது. வரிசாண்லால் மிசருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. இப்பத்திரத்தின் மூலமாக வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் தங்களுடைய பாத்தியதையை ஸ்தபிக்க முயன்றார்கள்.

நர்படா பிரஸாத் விஷயமாகச் செய்த உடன்படிக்கை ரிஜிஸ்டர் ஆகாமலிருக்கிறதால் முடிவில்லாத வாக்குத்தத்தம் என்று அப்பீல் வாதிகள் வாதம் சொன்னர்கள். 2-அணு 8-பைசா பாகம் நர்படா பிரசாதுக்குச் சொந்தமென்று கேவீத்தில் இவர் பெயர் எழுதப்பட்டிருப்பதாலும், மத்தியஸ்தர் விசாரணைக்காக செய்துகொண்ட உடன்படிக்கையில் நாலுகு பாகஸ்தர்களுடைய பாகமும், எல்லாருடைய ஒற்றுமையினலும், சமமதத்தினலும் அப்பொழுதுவரைக்கும் ஒழுங்காய் அனுபவித்து வருவதாகக் கண்டிருப்பதாலும், ... இந்துப் பின் ஷிப்லால் தான் ஒப்புக்கொண்டதற்கு மாருக மற்றொருவர் பாகத்தைச் சேர்த்து கிரயம் செய்திருப்பதர்

லும், மேலே கூறிய வாதம் நிற்கத் தகுந்ததல்ல. அன்றியும் ரிஜிஸ்டர் ஆகாத ஒரு பத்திரத்தை நர்படா பிரசாத்தின் பாத்தியத்துக்கு ஆதாரமாகக் காண்பிப்பது செல்லத் தகுந்ததலவென்றும், ஷிப்லால் தங்களுக்கு முந்தி 1896-ம் வருஷம் மே மாதம் கிரயஞ்செய்து விட்டதாகவும், அதற்குப் பிறகு 1886 வது வருஷம் அக்டோபர் மாதம் 10-தேதி அப்பீல் பிரதிவாதிகளுக்கு நர்படா பிரசாத் கிரயம் பண்ணி யிருப்பதாகவும், அதனால் அப்பீல் பிரதிவாதியின் கக்ஷி பலமில்லை என்றும் அப்பீல் வாதிகள் வாதஞ் சொன்னார்கள்.

நர்படா பிரசாத் விஷயமாகச் செய்த உடன்படிக்கை ரிஜிஸ்டர் ஆகாமலிருக்கிறதால் முடிவு பெறாத வாக்குத் தத்தம் என்று அப்பீல் வாதிகள் வாதஞ் சொன்னார்கள். 2-அணு 8-பைசா பாகம் நர்படா பிரசாத்துக்குச் சொந்தமென்று கேவலாத்தில் இவர் பெயர் எழுதப்பட்டிருப்பதாலும். மத்தியஸ்தர் விசாரணைக்காக செய்துகொண்ட உடன்படிக்கையில் நான்கு பாகஸ்தர்களுடைய பாகமும் எல்லாருடையஒற்றுமையினாலும், சம்மதத்தினாலும் அப்பொழுது வரைக்கும் ஒழுங்காய் அனுபவித்து வருவதாகக் கண்டிருப்பதாலும், 9-வருஷத்திற்குப் பின் ஷிப்லால் தான் ஒப்புக்கொண்டதற்கு மாறாக மற்றொருவர் பாகத்தைச் சேர்த்துக் கிரயஞ் செய்திருப்பதாலும், மேலே கூறிய வாதம் நிற்கத் தகுந்ததல்ல. அன்றியும் ரிஜிஸ்டர் ஆகாத ஒரு பத்திரத்தை நர்படா பிரசாத்தின் பாத்தியத்துக்கு ஆதாரமாகக் காண்பிப்பது செல்லத் தகுந்ததல்ல

வென்றும் அதினால் தங்களுக்கு முந்தி 1896-ம் வருஷம் மே மாதம் கிரயஞ்செய்து விட்டதாகவும், அதற்குப் பிறகு 1896-ம் வருஷம் அக்டோபர்மாதம் 10 தேதி அப்பீல் பிரதிவாதிகளுக்கு நர்மடா பிரசாத் கிரயம்பண்ணி யிருப்பதாகவும் அதனால் அப்பீல் பிரதிவாதியின் கசும் பலமில்லை என்றும் அப்பீல் வாதிகள் வாதஞ்செய்தார்கள்.

அடமானத்தை உண்டுபண்ண ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டை ஒரு யந்திரமாக்கிக் கொள்ளக்கூடாதென்றும் அடிக்கடி ஹைகோர்ட்டில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ரிஜிஸ்டர் பண்ணப்பட்ட கிரய சாசனத்தையுடைய ஒருவன் தனக்கு முன்கிரயம் வாங்கின வேறொருவன் ரிஜிஸ்டராகாத ஒரு கிரயசாசனம் பெற்றிருப்பது தெரிந்து வாங்குவானேயானால் ரிஜிஸ்டர் பண்ணின பத்திரத்தையுடையவனுக்கு ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டில் சொல்லியிருந்தாலும முந்திய பாத்தியம் கிடைக்காது. இவ்விதி இந்த இலாக்காவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இதே பிரகாரம் இங்கிலாண்டிலும் ரிஜிஸ்டிரேஷனுள்ள கவுன்டிகளிலும் அனுஷ்டித்து வரப்படுகின்றது. 1861-ம் வருஷம் 1 ஜான்சன் 685 ல் சொல்லியிருக்கும் பென்ஹாம் v. கீன்கேசில் சொல்லியிருக்கிறதாவது "ஒருவன் தன்முன் னடத்தையால் கிரயம்பண்ண யோக்யதை யில்லாத பட்சத்தில் அவனிடமிருந்து வேறொருவன் அது தெரிந்து வாங்குவானேயானால் விற்கிறவனின் மனசாக்ஷியினால் வாங்குகிறவனின் மனசாக்ஷி பாதிக்கப்படும். ஆகை

யால் விற்கிறவன் விற்பதிலிருந்து விலக்கப் பட்டவனென்று தெரிந்து வாங்குகிறவன் விற்பவனைப்போலே தானும் வாங்குவதிலிருந்து விலக்கப்படுவான்.'' ஆகையால் விப்லால் ஏற்பட்ட பிரசாத்துக்கு கொடுத்துவிட்ட அதே சொத்தை விற்பதிலிருந்து தடுக்கப் படுவது போல் இது தெரிந்து வாங்கின—பாஸ்ஜிமாலும் தடுக்கப்படுவார். பல கேஸ்களில் இது விஷயமாக சொல்லப்பட்டிருப்பவையாவன:—

முன்னால் இரகசியமாகவும், மோசடியாகவும் செய்துக்கொண்ட சொத்துக்களின் மேலுள்ள பாத்தியதையினால் பின் அச்சொத்து வாங்குகிறவர்களை பாதிக்காம லிருப்பதற்கு ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட்டு ஒரு காபந்தாக ஏற்படுத்தப் பட்டதேயன்றி ஏற்கனவே கைமாறிப்போன சொத்தை இது விஷயந்தெரிந்து வாங்குகிறவர்களை காபந்து பண்ண ஏற்பட்டதல்ல. அது சட்டத்தின் நோக்கமன்று என்று ஜேம்ஸ் என்னும் ஜஸ்டிஸ் சொல்லுகிறார்.

இரகசியமாக கிரயம் முதலிய பராதீனம் செய்யப்பட்டிருந்து பின் வேறொருவன் அதனை அறியாது பணம் கொடுத்து வாங்கி ரிஜிஸ்டர்பண்ணி கிரயசாதனம் வைத்திருந்தால் அவனைக் காபந்து பண்ணுவதே ரிஜிஸ்டிரேஷன் ஆக்டின் வித்தாகும் என்றும் முன்னடந்த கிரயமுதலியவை தெரிந்து வாங்கும் ஒருவனுக்கு அது காபந்து ஆகாதென்றும் பேசாலே என்னும் ஜஸ்டிஸ் சொல்லியிருக்கிறார்.

ஒருவன் தன்னுடைய சொத்தை வேறொருவனுக்குக் கிரயம் பண்ணுவதாக உடன்பட்டிருக்கும் பொழுது இதனை லக்ஷியஞ்செய்யாது மூன்றாவது பேர்வழிக்கு கிரயம்பண்ணி இந்த விஷயம் வாங்குகிறவன் அறிந்திருக்கின் பின் வாங்கினவனுடைய மனசாக்ஷி பங்கமாயிருக்கிறதால் முன் வாங்கிக்கொள்ள ஒப்பந்தம் பண்ணினவனுடைய பாத்தியதைக்குட்பட்டே இவனுக்குச் செல்லுமேயன்றி இவன் கிரயம் நிற்கத் தகுந்ததல்லவென்றும் பிரம்பெல் என்னும் ஜஸ்டிஸ் கூறியிருக்கிறார்.

மனசாக்ஷி பாதிக்கப்படாமலிருக்கும் பேர்களுக்கு இந்த ஆக்ட்டு காபந்தாகுமேயல்லாமல் ஒரு உடன்படிக்கை விரோதமாக ஒரு தப்பிதத்தைச் செய்பவனோடு கூடிக்கொண்டு அப்பிசகுக்கு உடந்தையாயிருக்கும் வேறொருவனைக் காபந்து பண்ணுவது இவ் ஆக்ட்டின் கருத்தல்லவென்று இந்த ஜட்ஜி திரும்பவும் சொல்லியிருக்கிறார்.

மேலே கூறியவைகளை இவ்வப்பீலில் சம்பந்தமாகயோசிக்கும் பொழுது ஷிப்லாலுக்கும் நர்படா பிரசாத்துக்கும் நடந்த நடவடிக்கைகளை—லால்ஜிமால் பூராய் அறிந்தவராய் இருக்கிறார். இவர் நடவடிக்கையினால் 2-அணா 8-பைசா பாகத்துக்குச் சொந்தக்காரராக இவர் பெயர் பதிவாயிருக்கிறது. அப்பீல் வாதிகள் லால்ஜிமாவின பாத்தியதை யுடையவர்களாக யிருக்கிறதால் நர்படா பிரசாத்துக்கு 2-அணா 8-பைசா பாகத்துக்குச் சொந்தக்காரராகையாலும் அந்தப் பாத்தியதை அப்பீல்

பிரதிவாதிக்கு வந்துவி[illegible]யாலும் அ[illegible]பீல் வாதிகள் இவருக்குப் பாத்திய மில்லை என்று சொல்லக் கூடியவர்களல்ல.

வாதிகளாகிய அப்பீல் பிரதிவாதிகள் சம்[illegible]-வது [illegible]-யை சாபாகமிருக்கிறதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நர்படா பிரசாத்தைத் தவிர வேறொருவருக்கு ஷிப்லால் பராதீனம் பண்ணக்கூடிய பாத்தியதையை இழந்தவராயிருக்கிறதினால் யோக்கியதையோடு 1896-ம் வருஷம் மார்ச்சுமாதம் 10 தேதி அதைக் கிரயஞ்செய்யக்கூடியவரல்லவென்பதை லால்ஜிமால் அறிந்தவரா யிருக்கிறார்.

லால்ஜிமால் 'அக்கிரயத்தை ஒப்புக்கொண்ட பொழுது நல்ல எண்ணத்துடன் வாங்கினவராக மாட்டார். இவரும் இதைக் கிரயஞ்செய்தவரும் அயோக்கியதையாய் நடந்துகொண்டார்கள். நர்படா பிரசாத்தைச் சொத்தின் பாத்தியத்திலிருந்து விலக்கவும் 1887-ம் வருஷம் மார்ச்சுமாதம், 1884 ம் வருஷம் செப்டம்பர் மாதங்களில் பிறந்த உடன்படிக்கைகளால் ஏற்பட்ட நர்படா பிரசாத்தின் நலத்தைக்கொடுக்கவும் ஷிப்லாலின் கருத்தா யிருக்கிறதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. மேலே சொன்ன காரணங்களால் சப் சோர்ட்டார் தீர்ப்பு நியாயமென்று அதை உறுதிப்படுத்தி அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளிவிட்டார்கள்.

தீர்ப்பின் சாராம்சம்:—ஒரு கேசில் ஜெ[illegible]ந்த சில வாதிகள் ஒரு பெரிய சொத்தையடைந்தார்கள். த[illegible]ளுடைய

வியாஜ்ஜியத்தில் உதவி புரிந்த ஒரு சொந்தக்காரனுக்கு ஒரு பாகம் கொடுக்கிறதென்று உடன்படிக்கை செய்துகொண்டு அவ்வுடன் படிக்கைப்படி மற்ற உடன் படிக்கைகளின் சம்மதத்தோடு இவர் பெயரை கிராம ரிக்கார்டுகளில் பதிவுசெய்து இவர் வசத்திலும், அனுபோக அனுபவத்தையும் விட்டுவிட்டார்கள். ஆனால் கிரயசாதனம் எழுதி ரிஜிஸ்டர் பண்ணவில்லை. பின்பு இவ்வாறு அனுபவிப்பதையும் காரணத்தையும் அறிந்த வேறொருவருக்கு மூலபங்காளிகளில் ஒருவர்விட்ட இப்பாகத்தை கிரயம் பண்ணினார்.

விற்றவர் விற்கத் தனக்குப் பாத்தியமில்லை என்று தெரிந்து விற்றதாலும், முன் வாங்கினவரை மோசம் செய்யாமல் விற்க முடியாதென்கிறதை பின்பு வாங்கினவர் அறிந்திருப்பதாலும், முன் வாங்கினவரின் பாத்தியத்துக்கு விரோதமாக இவ்விற்பனை பயன்படாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 25 அல. 315. (Anna Mal v. The Collector of Bareilly I. L. R 28 All. 315.)

கல்கத்தா ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் மித்திரா
மிஸ்டர் ஜஸ்டிஸ் கெயிட்

ஜெயகோவிந்தலாலா—வாதி—அப்பீல்வாதி.

V.

மன்மதநாத் பானர்ஜி—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

லாப்பாயின்ட்—வகதேசத்திலும் பொ...விலும் கட்டுப் பட்டிருக்கும் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜியசங்கிரகம்:—1306 ம் வருடம் முதல் 1309 ம் வருஷ வரைக்கும் சாகுபடி செய்ததற்குக் கிடைக்கவேண்டிய மேல் வாரத்துக்காக குடியானவர்களாகிய பிரதிவாதிகள்மேல் வாதி ஜேசோர் அடிஷனல் முனிசீப்கோர்ட்டில் தாவா செய்தார். இதற்குப் பிரதிவாதிகள் 1308 ம் வருஷத்தில் தங்கள் உழவுடைப்பாத்தியதையை குமிடினிதாசிடம் விற்றுவிட்டபடியால் அதற்குப் பின் தாங்கள் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களல்ல வென்றும் அதுவரையில் தாங்கள் கொடுக்க வேண்டியதை செலுத்தி விட்டதாகவும் டிபன்சு சொன்னார்கள்.

டி. முன்சீப்கோர்ட்டார் தீர்மானம்:—குமிடினிதாஸ் என்பவருக்குக் கிரயம்பண்ணிவிட்டதாக ஒரு ரிஜிஸ்டர் பத்திரம் பிறந்திருந்தபோதிலும் உண்மையில் அச்சொத்துக்களின் உழவுடைய பாத்தியம் அனுபோகத்தில் விடப்பட வில்லை என்று தெரிந்துகொண்டு வாதிபக்கம் தீர்ப்புசொன்னார். இதன்மேல் அப்பீல் செய்தார்கள்.

அடிஷனல் சேஷன் ஜட்ஜிசெய்த தீர்மானம்:—இப்பாத்தியம் கிரயம் பண்ணக்கூடியதானதாலும் ஒரு கிரயப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதாலும் கிரயமான காலத்திற்குப்பின் ஏற்படும் மேல்வாரத்துப் பிரதிவாதிகள் கட்டுப்பட்டவர்களல்லவென்று கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பைமாற்றி

பிரதிவாதிகளு பக்கம் தீர்ப்புசெய்தார். இதன்மேல் வாதி ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—பிரதிவாதிகளில் ஒருவ இறந்துபோயிருக்க அவர் வார்சை சி. பு. கோ. 36[illegible] பிவுப்படி சக்ஷியிற் சேர்க்காததால் இது நிலைக்கத் தகுந்த தல்லவென்று அவ்வப்பீல் பிரதிவாதி வாதஞ்சொல்லி இ. லா. ரி. 22 அல. 430-ல் சொல்லியிருக்கிற ஷேம்குன்வார் v. அப்பா பிரசாத் கேசை இதற்து ஆதாரமாகக் காட்டினார்கள்.

இதற்து எதிர்வாதமாக பிரதிவாதிகள் பொதுவாயும் ஒவ்வொருவரும் ஏக தேசத்திலும் இப்பகுதி கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாகையால் இவ்வப்பீலுக்குக் கெடுதியில்லையென்றும் இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் ஒருவேளை இவ்வப்பீல் பாதிக்கப்படலாம்; சி. பு. கோ. 368-வது பிரிவின் தாற்பரியம் இதுவேயென்றும், ஒரு கிரயம் ஏற்பட்டால் அக்கிரயம் செல்லுபடியுள்ளதாக இருக்கவேண்டிய ஒருவருக்குப் பேரிரவலாகவும் கட்டுப்பாடாகவு மிருக்கிற கிரயத்தை அடிஷனல் ஜட்ஜி எடுத்துக்கூறிய கேசுகள் குறிக்கவில்லை என்றும் அப்பீல் வாதிசொன்னார்.

இதற்கு மாருக முதல் அப்பீல் கோர்ட்டார் எடுத்துக் காட்டிய இ. லா. ரி. 16 கல். 643-ல் கூறியிருக்கும் கிரிஷ்டோ, புல்லவகோஸ் v. கிரிஷ்டோலால்சிங்கு கேசும் இ. லா. ரி. 19 கல். 17-ல் சொல்லியிருக்கும் சிந்தாமணி டட் v. ராஷ் பெஹாரி மொண்டல் கேசும் அக்கோர்ட்டார் கொண்ட

அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துகிறதென்றும் உழவுடையாத்தியம் கிரயம்பண்ணக்கூடியதென்றும் அவ்வாறு கிரயம்பண்ணினதாத ஒரு ரிஜிஸ்டர் பத்திரம் செய்யப்பட்டிருப்பதால் ஆ[illegible] செல்லுபடியானதென்றும் ஆகையால் கிரயம்பண்ணினவர்களின் கடமை கிரயமான தேதியோடு நின்றுவிட்டதென்றும் பிரதிவாதி ஆக்ஷேபித்தார். இவ்வப்பீல் நடக்கும் போது ஒரு பிரதிவாதி இறந்தார். அவருடைய வார்சை வாதிகள் கக்ஷியில் சேர்க்கவில்லை. பிரதிவாதிகள் சேர்ந்தும் தனித்தும் பகுதித்தொகை கொடுக்கக் கட்டுப்பட்டவர்களாதலால், இறந்துபோன பிரதிவாதிக்சாக அவருடைய வார்சை நியமிக்காமற்போனது இதர பிரதிவாதிகளை தங்கள் கடமையிலிருந்து விலக்காது அப்பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் இவ்வப்பீல் பாதிக்கப்படும். இதர பிரதிவாதிகளின்மேல் அப்பீல் நடவடிக்கை நடத்தக்கூடாதென்பதற்கு யாதொரு காரணமுமில்லை. ஸி. பு. கோ. 308-வது பிரிவுடன் இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்ட அளவுக்கு என்று சேர்த்து வாசித்துக்கொள்ள வேண்டும். ஆனால் ஜெம்கூன்வார் ப. அம்பர் பிரசாத் கேஸில் ஒரு பிரதிவாதி இறந்து அவருக்கு வார்சு நியமித்து கட்சியில் சேர்க்காவிட்டால் அப்பீல் காலியாய்விடும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்வியாஜ்ஜியம் நிலத்தைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு வரப்பட்டது. பிரதிவாதிகளுக்குத் தனித்த பாத்தியமிருந்ததாகத் தெரியவில்லை. இதைப்போல தனித்தும் கட்டுப்பட்டவர்களல்ல.

ஆகையால் இதைப்பற்றி பிரதிவாதிசொன்ன ஆக்ஷேபனையை நிற்கத்தகுந்த தல்ல. இறந்துபோன பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் அப்பீல் நிற்காது.

இரண்டாவது ரிஜிஸ்டர் பத்திரம் பிறந்திருப்பதால் கிரயம் பூர்த்தி ஆகிவிட்டது. ஆகையால் பின் பகுதிப்பிரதிவாதிகள் கட்டுப்பட்டக்கூடியவர்களல்லவென்று அடிஷனல் ஜட்ஜி சொல்லுகிறார். குமிடி என்பவருக்குக் கிரயம்பண்ணினபடி அந்த நிலத்தை அவர் அனுபோகத்துக்கு விடவில்லையென்று ருஜுவாகிறதால் கிரயம் மாறுட்டமானதென்று முனிசீப் கோர்ட்டார்சொண்ட அபிப்பிராயமே சரி. அடிஷனல் ஜட்ஜி குறிப்பிடுகிற இரண்டு கேசுகளும் இக்கேசுக்கு வித்திய சமானது. இக்கேஸ்களில் பொய்யாகவும் மாறுட்டமாகவும் செய்யும் கிரயங்களைப்பற்றிப் பேசவில்லை. உண்மையான கிரயங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறது. கிரயம் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் கிரயஞ் செய்தவர்கள் பின் பகுதிக்குக் கட்டுப்பட்டவர்களல்ல. ஆகையால் இக்கேசை திரும்பி கீழ்க்கோர்ட்டுக்கு அனுப்பி கமிஷனுக்குச் செய்த கிரயம் உண்மையா மாறுட்டமுள்ளதா என்பதை முடிவு செய்யவேண்டுமென்றும் இம்முடிவின் பேரில் செலவுத்தொகை ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்ப்புசொன்னார்கள். 33. கல். 580. (Jaya Gobiud Lala, v. Manmotha Natha Bannerjee 33 cal 580.

போஸ்டாபீசு சேவிங்ஸ் பாங்கியில் பணம் சேகரித்துவைப்போர் கவனிக்க வேண்டிய விதிகள்.

விஷய விபரம்.

பொது விதிகள்.

விவரங்கள், நோக்கங்கள். முதலியன.

விதிகள்.

1. விவரணம்
2. சேவிங்ஸ் பாங்கி ஏற்படுத்தியதில் கவர்ன்மென்டாருடைய கருத்து.
3. வேலைக்காலம்.
4. தபால் உத்தியோகஸ்தர் அந்தரங்கத்தை வெளியார்க்காதிருத்தல்.

டிபாசிட்டுகளைக் குறித்த நிபந்தனைகள்.

5. எவரெவர் பணத்தைக் கட்டலாம்.

6—12. பணங்கட்டி கணக்கேற்படுத்துவதற்குரிய மட்டு மிதங்கள்.

வாபஸ் பெறுந்தொகைகளைக் குறித்த நிபந்தனைகள்.

13—16. பணத்தை மீண்டும் வாங்குவதற்குரிய அதிகாரமும் வாபஸ் பெறுந்தொகைகளின் வரையறைகளும்.

கணக்குகள் ஏற்படுத்தல்.

17—21. அக்கவுண்டு ஏற்படுத்தும் விதம்.

பாஸ் புத்தகங்கள்.

22. பாஸ் புத்தகமும் அதினுடைய ரு[illegible]

23. பாஸ் புத்தகத்தைபோக்கடித்துவிட்டால் என்னசெய்வது.

கணக்கு ஏற்படுத்தினபிறகு கட்டிய டிபாசிட்டுகள்.

24, 25. கணக்கு ஏற்படுத்தினபிறகு பணங்கட்டும் விதம்.

பணம் வாபஸ் பெறல்.

26—29. பணம் வாங்குகிறவிதம்.

வட்டி.

30, 31. வட்டி.

கணக்கு வேறிடம் மாறுதல், முடித்தல், மீண்டும் ஏற்படுத்தல்.

32. கணக்குகளை மாற்றுவது.

விதிகள்.

33—34A. கணக்கு எடுத்துவிடுதல்.

35. எடுத்துவிட்ட கணக்கை மீண்டும் ஏற்படுத்தல்.

காலாவதியான கணக்குகள்.

36. காலாவதியான (டெட்) கணக்குகள்.

டிபாஸிட்டர்களின் மரிப்பும், சக்தியின்மையும், இளமையும்.

37—41. சேவிங்ஸ்பாங்கியில் போட்டிருக்கும் பணத்தை வாரிசுதாரர்கள் அல்லது சம்ரக்ஷணைகர்த்தர்கள் சேர்க்கும்போது அனுசரிக்க வேண்டிய முறைமைகள்.

பொதுகணக்கு பட்டாளக்கணக்கு, ஜாமீன்கணக்கு.

42, 43. பப்ளிக் (பொது) கணக்குகள்.

44. ரிஜிமெண்ட், போலீஸ்கணக்குகளும் இதாகூட்டு அக்கவுண்டுகளும்.

45. செக்யூரிடி டிபாசிட் கணக்குகள்.

வட்டிக்குவைத்த தொகைகள்.

46. கவர்ன்மெண்டு பத்திரங்களை வாங்கல்.

47. கவர்ன்மெண்டு பத்திரம் விற்றல்.

48. கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளை பத்திரப் படுத்தல்.

49, 50. கவர்ன்மெண்டு பத்திரவட்டி.

விதிகளின் மாற்றம்.

51. விதிகளை மாற்ற கவர்ன்மெண்டு பாத்தியதை.

விவரணங்கள்.

---

1. இந்த விதிகளை நன்றாய் உணரும்பொருட்டு அவைகளில் ஆங்காங்கு வழங்கும் சொற்களின் அருத்தத்தை அடியில் கூறியபடி தெரிந்துகொள்ளவும்.

டிபாட் என்பது - பணம் சேகரித்து வைப்பவன் மற்றவர்களால் தன்பேருக்காவது அல்லது தானேயாவது போஸ்டாபீஸ் சேவிங்ஸ்பாங்கியில் கட்டியபணம்.

டிபாசிட் அட்கால் - என்பது 13, 16. 42 (k) விதிகளிலும், 44 (f) விதியிலும் குறிப்பிட்டிருக்கும் மட்டுமிடங்களுக்குட்பட்டு எப்போதேனும் வாபஸ்பெறும் டிபாசிட்டு தொகையாம். ஆறுமாத வாபஸ் வாயிதா அறிக்கைக்குரிய டிபாசிட்டுத் தொகைகளுக்கும் இந்த டிபாசிட்டுகளுக்கும் உள்ள தாரதம்மியத்தைக் காட்டுவதற்காகவே இந்த 'டிபாசிட் அட்கால்' என்கிற சொற்றொடர் பிரயோகிக்கப்பட்டது.

டிபாசிட்டர் - என்றால் பணம் எவரால் அல்லது யார்பேரில் கட்டியிருக்கிறதோ அவர்.

அக்கவுண்ட் - என்பது போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் ஒரு டிபாசிட்டரின் கணக்காகும்.

பாலன்ஸ் - என்பது ஒரு கணக்கின் வரவில் இருக்கும் இருப்பு.

மைனர் - என்றால் 18 வயது பூர்த்தியாகாத நபர்.

கார்டியன் - என்றால் தகப்பன், அவனிறந்த காலத்தில் தாயார், இருவரும் இறந்திருந்தாலும் உயில், சாதனம் அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் அக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் இதர சட்டத்தாலாவது மைனரை ஆதரிப்போர் ஏற்பாடாகாவிடினும் வயது வந்த எவருடன் அல்லது எவருடைய சம்ரக்ஷணையில் அந்த மைனர் இருக்கிருளுே அவர் ஆகிய இவர்கள் கார்டியன் என்று சொல்லப்படுவார்கள்.

டைரக்டர் ஜெனரல் என்றால் இந்தியாவிலுள்ள தபால் ஆபீசின் தலைவர்.

போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் என்றால் போஸ்டாபீசு சேவிங்ஸ் பாங்கி ஏற்பாடாயிருக்கும் தேசம் அல்லது மாகாணத்தின் தலைமையான தபால் உத்தியோகஸ்தர்.

சேவிங்ஸ்பாங்கி ஏற்படுத்தியதில் கவர்ன்மேன்டாருடைய கருத்து.

2. செலவில் சிக்கனத்தை விர்த்திப்படுத்துவதும், மிச்சப்பணத்தை எளிதில் சேர்த்துவைக்க உதவிசெய்வதுமே கவர்ன்மெண்டார் போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ்பாங்கி ஏற்படுத்திய [illegible] நோக்கம். அப்போதைக்கப்போது வாங்கிக் கொள்வதற்[illegible] பாங்கியில் பணம் கட்டினால் அது மேற்படி கருத்துக்கு மா[illegible] இருக்கிறபடியால் தபாலாபீஸ் கணிதபரிசோதகரான கண்ட்ரோலர் அவர்கள் அவ்விதமான கணக்குகள் இருப்பதாகத்தெரிந்தால் உடனே அவற்றை முடிவு செய்துவிடும்படி

ஆக்கியாபிப்பார். மைனர்கள்பேரில் ஏற்பட்ட கணக்குகள் விஷயத்தில் பிந்திய டிபாசிட்டுகளை வாங்காமலிருக்கும்படி உத்தரவு செய்வார். இவ்வாறு செய்வதற்கு அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றது.

வேலைக்காலம்.

3. போஸ்டாபீச் சேவிங்ஸ்பாங்கி பிரதிதினமும் மத்தியானமுதல் 4 மணி வரையிலும் திறந்திருக்கும்; ஆனால், ஆதிவாரங்களிலும், கிறிஸ்து பிறந்தநாள், வருஷப்பிறப்பு, புது வெள்ளிக்கிழமை, இராஜா பிறந்தநாள், இந்த நாட்களில் திறந்திருக்காது. வேலை காலம் அந்தந்த இடத்துக்குத் தக்கபடி போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அவர்களின் உத்தரவின்பேரில் மாற்றப்படும்.

தபால் உத்தியோகஸ்தர் அந்தரங்கத்தை வெளியாக்காதிருத்தல்.

4. டிபாசிட்டுகளைக் கொடுக்கல் வாங்கல் இவைகளில் சம்பந்தப்பட்டிருக்கும் தபால் உத்தியோகஸ்தர்கள், போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அல்லது இந்த நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவரும் மற்ற ஆபீஸர்கள் இவர்களுக்கன்றி ஏனையோருக்கு எந்த டிபாசிட்டருடைய பெயரையாவது அல்லது அவரால் வைத்த அல்லது வாங்கிக்கொள்ளப்பட்ட தொகையை யாவது மற்றவர்களுக்கு வெளிப்படுத்தலாகாது.

எவரேவர் பணத்தைக் கட்டலாம்.

5. எந்த மனுஷரும் போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் (a) தன்பேருக்காவது (b) பருவமடையாத தன் பந்துக்களில்

யார்பேருக்காவது (c) அல்லது சவரக்ஷணையிலிருக்கும் எந்த மைனர் பேருக்காவது பணத்தைக் கட்டலாம்.

விலகிது:—ஒரு துரைத்தன உத்தியோகஸ்தர் ஒரு மைனருக்கு "கார்டியன்" நியமனம் பெற்றவராயிருந்தால் அந்த மைனர்பேருக்கு அவர் பணம் கட்டக்கூடாது.

விவா :—எந்த மைனர்களாவது மண்ணம்புரிந்துகொண்டு அல்லது தனியாய் வாழும் ஸ்திரீகளாவது தங்கள் தங்களு பேருக்கு பணத்தைக்கட்டலாம். ஆனால் ஸ்திரீகள் கலியாணம் செய்துகொண்டவர்களாயிருந்தால் 6 - (ii) ம் விதியில் கூறியிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாயிருக்கக்கடவர்.

பணங்கட்டி கணக்கேற்படுத்துவதற்குரிய மட்டுமிதங்கள்.

6. (i) எவரும் தன்பேருக்கு ஒரு அக்கவுண்டு ஏற்படுத்தியிருக்க மற்றொரு அக்கவுண்டு ஏற்படுத்தக்கூடாது.

(ii) தன்பேரால் ஏற்பட்டிருக்கும் அக்கவுண்டு தவிர, தனக்கு உறவாயிருக்கும் அல்லது தன் ஆதாவிலிருக்கும் எத்தனை மைனர்கள் பேரிலாவது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாய் அக்கவுண்டுகள் வைக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட மைனர்கள் ஒவ்வொருவர்பேரில் ஒரு அக்கவுண்டுக்கு மேலாக அக்கவுண்டுகள் வைக்கக்கூடாது.

(iii) மைனருக்காக கணக்கு முன்பு வைத்திருந்தபோதிலும் மைனர் தாமுமொரு கணக்கு வைத்துக்கொள்ளத் தடையில்லை; விவாகமானவன் தன்பேரால் கணக்குவைத்திருப்ப

தால் அவன் பெண்சாதி தன்பேரால் கணக்குவைத்துக்கொள்ளத் தடையில்லை. ஆனால் அவள் கட்டும்பணம் அவள் சொந்தம் அல்லது அவள் சுயார்ஜ்ஜிதமாயிருக்கவேண்டும்.

குறிப்பு:—இவ்விதியிற் சொல்லிய நிபந்தனைகளுக்கு மாறுபாடாக எக்காரணம்பற்றியாவது ஒரு கணக்கு ஏற்பட்டால், அக்கணக்கின்பேரில் வட்டி கேட்க பணம் கட்டியவருக்கு அதிகாரம் கிடையாது. தபாலாபீஸ் கணித பரிசோதகரான கண்ட்ரோலரும் அக்கணக்கை உடனே முடிவுசெய்யும்படி அவருக்கு உத்திரவுசெய்வார்.

7. வேண்டுமென்றபோது வாபஸ்பெறுவதற்காகவேனும் ஆறுமாத வாயிதா அறிக்கைமேல் வாபஸ் பெறுவதற்காகவேனும் பிரதி கணக்கிலும் பணம் கட்டிவைக்கலாம்.

8. நம்பிக்கைவிஷயமாக வைக்கப்பட்ட டிபாசிட்டுகள் ஒத்துக்கொள்ளப் படமாட்டா.

9. இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட நபர்கள்பேரால் கூட்டாய் பணம் கட்டப்படக்கூடாது. ஆனால் பிரசித்தமான வர்த்தகக் கூட்டத்தார்பேரால் கட்டினால் இந்த நிபந்தனை விலக்காது.

10. குறைந்தது 4 அணா எந்தக்காலத்திலாவது கட்டலாம். அதற்குக் குறைந்த தொகையைக்கட்டக்கூடாது. ஒரு அணாவிற்குக் குறைந்த சில்லரை சேர்ந்த எந்தத் தொகையும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

11. ஏப்ரல்மீ 1வ தொடங்கி அடுத்த மார்ச்சுமீ 31வ யோடு முடிவுபெறும் ஒரு அபீஷியல் வருஷத்திற்குள் கட்டக்கூடிய தொகை 1,200க்கு அதிகப்படக்கூடாது. ஆனால் இத்தொ... வேணுமென்றபோதேனும், ஆறுமாத வாயிதா அறிக்கை... னும் ஒரு பாகம் வேணுமென்றபோதும் மற்றப்பாகம் ஆறுமாத வாயிதா அறிக்கையிலும் வாபஸ் பெறக்கூடிய ரூ. 200 க்கு அதிகப்படக்கூடாது. இந்த ரூபா 200க்குமேல் நின்ற மிகுதித் தொகையும், டிபாசிட்டர் பேருக்குக் கட்டியிருக்கிற வேறெந்தத் தொகையாவது ரூ. 10க்குக் குறையாததாய் சில்லரையல்லாத முழு ரூபாய்களாயிருந்து கவர்ன்மெண்டு பத்திரத்தில் வட்டிக்குக் கட்டிவைக்க விரும்பினால் அத்தொகையும் 46-வது விதிப்படி அப்படியேகட்டி வைக்கப்படும்.

உதாரணம்:—ஏப்ரல்மீ முதல்தேதியிலிருந்து நவம்பர் மாதம் 10வ க்குள்ளாக ஒரு டிபாசிட்டர் 200 ரூபா... கட்டிவிட்டார். நவம்பர்மீ 2..வ தபாலாபீசில் கட்டும்படியாக ரூபா 5-3-0 கொண்டுவருகிறார். ஆகமொத்தம் 205 ரூபா 3 அணாவில் 10 ரூபாய்க்கு குறையாத (அதாவது 10 அல்லது 11 ரூபா) முழு ரூபாய்களின் தாம் குறிப்பிடும் யாதாமொருதொகையை கவர்ன்மெண்டு செக்யூரிடியில் தனக்காக கட்டிவிடும்படி ஒரு அப்ளிகேஷன் கொடுத்தால் தான் பாங்கியில் கட்டும்படியாகக் கொண்டுவருகிற இந்த ரூபா 5-3-0 ஏற்றுக்கொள்ளப்படும். இவ்விதமாக ஒரு டிபாசிட்டர் ஒரு வருஷத்தில் ரூபா 1,200 வரையில் கட்டிக்கொண்டே போக...

குறிப்பு 1.—வேண்டிய போ[illegible]ம். ஆறுமாதவாயிதா அறிக்கை மீதேனும், 'வாப்ஸ்பெற [illegible] பிக்கட்டிய டிபாசிட்டுத் தொகைகளுக்கு எற்பட்டு வருஷ[illegible]த அளவு, இடையில் வாங்கும் தொகைகளை நோக்காம[illegible] (200) இருநூறு என்று கணக்கிடப்படும். அதாவது - அ[illegible]ருஷ கிலிப்தமான தொகையை நிர்ணயிப்பதில், இடையில் வாங்கும் தொகை [illegible]ழிக்சப்படாவென்பதேயாம். ஆகிலும் (1) வட்டிக்கென்று புத்திரனுபமாய் உடனே க[illegible]கும் தொகைகளும், (2) வேண்டுமென்றபோது வாபஸ்பெறவைத்த டிபாசிட்டு, ஆறுமாதவாயிதா டிபாசிட்டு, இவற்றுள் ஒன்றை மற்றொன்றாகமாற்றப்பட்டவையானதொகைகளும் மேர்படி வருஷ கிலிப்த கணக்கிலிருந்து கழிக்கவேபடும். கவர்ன்மென்டு பத்திரங்களைவிற்று வந்த பணத்தைப் 47 (3) - ஸல்பிரகாரம் டிபாசிட்டர் கணக்கில் கட்டி, 3)-வது ஸல்பிரகாரம் சேர்வதற்குமுன் [illegible]க்தை வாங்[illegible]ல் இந்தப்பணம் வருஷகிலிப்த கணக்கிலிருந்[illegible]கப்படும்.

குறிப்பு 2.—ஒரு கணக்கானது ஒரு தபாலாபீசிலிருந்து வேறொரு தபாலாபீசுக்கு மாற்றப்படும்போது மாற்றப்படும் அந்த வருஷத்தில கட்டப்பட்ட தொகை[illegible]வோ அது தான் 200 ரூபாய் அளவுக்கு கூட்டப்படும்.

12. ஒரு டிபாசிட்டர் தனக்கு வேண்டியபோதோ, ஆறுமாதவாயிதா அறிக்கைமீதோ வாங்கவேண்டுமென்று வைக்கக் கூடியது அல்லது நடக்கா நின்ற வருஷத்திற்கு வட்டி நீக்க

மாகக் கட்டிவைக்கக்கூடியதுமான தொகை, வயது வந்தவ ராயிருந்தால் ரூ. 5,000 ம், வயதுவராத மைனரின் பொரு ட்டு அவன் பாத்தியரூ ஒரு கார்டியனே வைத்த கணக்கா யின் ரூ. 4,000 கையில் உள்ளாகும். ஆனால் இந்த ரூ.5,000 - ம் ரூ. 4,000 - ம் கூடுமே மொத்தத் தொகைகளில் வயது வந் தவன் ரூ. 2,000-க்கு அதிகமாகாமலும், மைனர் ரூபா 1 000-க்கு அதிகமாகாமலும் ஒரு பாகம் வேண்டுமென்றபோ தும், மற்றொருபாகம் ... மேலும் பெறு இற டிபாசிட்டாகவும் இருக்கவேண்டியது. இந்த ரூ. 2,000 மோ அல்லது ரூ. 1,000 மோ போகின்ற மிகுதித்தொகை யை 46-வது விதிப்படி டிபாசிட்டர் நிமித்தம் வட்டிக்குக் கட் டிவைக்கவேண்டும். மேலும் ரூ. 10-க்குக் குறையாத முழு ... யுள்ள தொகை ... எப்போதேனும் இப்படி வட்டிக் குக் கட்டி ... கூடியவையாம்.

உதாரணம்.—ஒரு டிபாசிட்டருக்கு 2,000 ரூபா சேவி ங்ஸ் பாங்கியில் இருக்கிறது. அவர் அதன்மேல் கட்டும்படி யாக ரூபா 58-5-0 கொண்டுவருகிறார். ஆகமொத்தம் ரூபா 2,008-5-0 ல் 10 ரூபாய்க்கு குறையாததும் அவர்தாமே குறிப் பிடுவதுமான முழு ரூபாய்த் தொகையை தனக்காக வட்டிக்கு விடும்படி ஒரு அப்ளிகேஷன் எழுதிக்கொடுத்தால் மாத்திரம் திரும்பி கட்டும்படியாக கொண்டுவரும் ரூபா 58-5-0 எற்றுக் கொள்ளப்படும். இப்படியாக டிபாசிட்டர் ஒரு வருஷத்தில் 1,200 ரூபாய் வீதம், தான் வாங்கக்கூடியதும் வட்டிக்குவிட்

டதுமான தொகை மொத்தம் 5,000 ரூபாயாகிறவரையில் கட்டிக்கொண்டே போகலாம்.

குறிப்பு.—ஒரு டிபாசிட்டர் வேண்டுமென்றபோதேனும் ஆறுமாத வாய்தா அறிக்கைமீதேனும் வாபஸ் பெறுவதற்காக வைத்துக்கொள்ளக்கூடிய தொகையான 2,000 ரூபாய் (மைனருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கணக்கில் 1,000 ரூபாயானது) வருஷா வருஷம் அந்த 2,000 ரூபா அல்லது 1,000 ரூபாயின்பேரில் கணக்கிட்டு சேரும் வட்டியினுலும் 49-வது விதிப்படி வட்டிக்கு விடப்பட்ட தொகைகள்மீது சேரும்வட்டியினுலும் அதிகமாக்கப்படலாம்.

பணத்தை மீண்டும் வாங்குவதற்குள்ள அதிகாரமும் வாபஸ் பெறும் தொகைகளின் வரையறைகளும்.

13. ஒரு டிபாசிட்டர் தன் அக்கவுண்டிலிருந்து வாரத்துக்கொருமுறை பணம்பெறலாம், வாரமென்பது திங்களும், திங்கள் முதல் சனிக்கிழமை வரையிலும் உள்ள நாட்களைக் குறிக்கின்றது. ஆகையினுல் ஒரு டிபாசிட்டர் தன்னுடைய அக்கவுண்டிலிருந்து சனிக்கிழமையும் அடுத்த திங்கட்கிழமையும் பணம் பெற்றுக்கொள்ளலாம்.

14. ஒரு மைனர் தன்பேரால் கட்டியபணத்தை தானே மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம். ஆனுல் ஒரு மைனருக்காக கட்டிய பணத்தை அவன் வயதுக்கு வருகிறவரையில் அவனுடைய கார்டியன் தான் பெற்றுக்கொள்ளலாம்.

15. ஸ்திரீகள் கலியாணமாயிருந்தாலும் அல்லது கன்னிகையா யிருந்தாலும் தங்கள் பேரால் கட்டிய பணத்தை தாங்களே பெற்றுக்கொள்ளலாம். ஸ்திரீகள் விவாகமா யிருந்தபோதிலும் தங்கள் சேர்ந்தபேரால் கட்டிய பணத்தை தாங்களே பெற்றுக்கொள்ளலாம். ஒரு மைனர் ஸ்திரீயின் நிமித்தமாக கட்டியபணத்தை அவள் பணம்கட்டும்பொழுதே விவாகம் ஆயிருந்தபோதிலும் அல்லது பணம் கட்டின பிற்பாடு ஆனபோதிலும் அவள் வயதிறந்து வந்தபிற்பாடு தானே பணம் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை.

16. ஒரு டிபாசிட்டர் 1-அணாவுக்குக் குறைந்த தொகையையும் அல்லது ஒரு அணாவின் சில்லறைப்பாகம் சேர்ந்த எந்த மொத்தத்தையும் வாபீஸ் பெற்றுக் கொள்ளக்கூடாது; ஆனால் அக்கவுண்டை எடுத்துவிடும்படியான விஷயத்தில் அவர் தனக்கு பாக்கியிருக்கிற தொகைமுழுதும் பெற்றுக்கொள்ளலாம்.

அக்சவுண்டு ஏற்படுத்தும் விதம்.

17. எவரொருவர் அக்கவுண்டு ஏற்படுத்த வேணுமென்று விரும்புகின்றாரோ அவர் கிட்டயிருக்கிற சேவிங்ஸ்பாங்கியுள்ள போஸ்டாபீசில் மனுகொடுக்க வேண்டியது, நேரில் போய் அப்படிசெய்ய வேணுமென்கிற கட்டாயமில்லை. ஆனால் மனுகொடுப்பவர் தன் பெயரையும் தொழிலையும் இருப்பிடத்தையும் குறிக்கவேண்டியது. சுதேசியாயிருக்கும் பக்ஷத்தில் தன்னுடைய தகப்பன் பெயரையும் ஜாதியையுங்கூட காண்பிக்கவேண்டியது.

18. டிபாஸிட்டராக வேண்டுமென்று விரும்புகிறவர் தான் தபாலாபீஸ் சேவிங்ஸ்பாங்கியின் நிபந்தனைகளைப் படித்து அவைகளை ஒத்துக்கொண்டதற்கு அடையாளமாகப் பின் வருகிற பாரத்தில் கையெழுத்து செய்யவேண்டியது. அவர் எழுதத் தெரியாதவராயிருந்தால் நேராகவந்து சாக்ஷிகளுக்கு எதிரே தன்னுடைய கைநாட்டினாலும் அடையாளத்தினாலும் அத்தாட்சி செய்யவேண்டியது. அவர்தானே நேராகவந்து மனுசெய்யும் விஷயத்தில் இந்த நிபந்தனைகளின் ஒரு காபி வாசித்து தெரிந்து கொள்ளுவதற்காக அவருக்குக் கொடுக்கப்படும். அவருக்கு படிக்கத் தெரியாத விஷயத்தில், அந் நிபந்தனைகள் வாசித்து விவரித்து காண்பிக்கப்படும். நேராகவந்து மனுசெய்யாத பட்சத்தில் இந்த நிபந்தனைகளில் ஒரு காபியும், டிக்ளரேஷன் பாரம் ஒன்றும் அவருக்கு அனுப்பப்படும். அவர் முதல் தடவை டிபாசிட் கட்டும்பொழுது டிக்ளரேஷன் பாரத்தில் கையெழுத்துசெய்து அதையும் கொடுக்கவேண்டியது.

முதல்முறை டிபாசிட்செய்யும்பொழுது கையெழுத்து செய்யவேண்டிய டிக்ளரேஷன் பாரம்.

“இதனால் நான் உறுதியாய் சொல்லுவதென்னவெனில் தபால் ஆபீசு சேவிங்ஸ் பாங்கி நிபந்தனைகள் என்னால / எனக்கு வாசிக்கப்பட்டதென்றும் அவைகளின் முறைப்படி நடப்பது கட்டாயமென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

"தவிர என்னால் எனக்காக எந்த தபாலாபீசிலும், பிரசிடென்ஸி சேவிங்ஸ் பாங்கியிலும் ஒரு அக்கவுண்டும் ஏற்படுத்தப்படவில்லையென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறேன்."*

19. ஸ்திரீகள் தங்கள் சொந்தப்பெயரால், தங்களுடைய ஏஜெண்டுகள் மூலமாயாவது அல்லது விவாகமாயிருந்தால் தங்களுடைய புருஷர்கள் மூலமாயாவது அல்லது ஏஜெண்டுகள் மூலமாயாவது அக்கவுண்டுகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படிப்பட்ட ஏஜெண்டாவது அல்லது புருஷனாவது அதற்கென்று ஏற்பட்ட நமூனாவில் பெண்பாலின் கைப்பட ஒரு வகாலத்துநாமா வாங்கிக்கொடுத்து டிபாஸிட் நிபந்தனைகளை தெரிந்துகொண்டு அவைகளை ஒத்துக் கொள்ளுகிறதாக டிக்ளரேஷனில் கையெழுத்து செய்யவேண்டியது. எந்தபோஸ்ட் ஆபீசு உத்தியோகஸ்தராவது, தான் இருக்கும் ஆபீசில் ஏற்படுத்திய அக்கவுண்டு சம்பந்தமாய், தன் மனைவியைத் தவிர வேறு ஸ்திரீகளுக்கு ஏஜெண்டாயிருக்கக்கூடாது.

---

* ஒரு மைனர்பேரில் ஏற்படுத்தும் அக்கவுண்டாகில், இரண்டாவது வசனத்தைக் கிறுக்கிவிட்டு, அக்கவுண்டு ஏற்படுத்துகிறவர் பின் வரும் டிக்ளரேஷன்கள் செய்யவேண்டும்:—

"இந்த மைனர்பேரில் எந்த போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியிலும் நான் வேறு அக்கவுண்டு ஏற்படுத்தவில்லையென்று உறுதிகூறுகிறேன்."

"மேற்படி மைனர் (கிறிஸ்தவருஷம், மாதம், நாள், இங்கே பதியவேண்டும்) பிறந்தாரென்றும் உறுதி கூறுகிறேன்."

20. டிக்ளரேஷன் பாரத்தை கிரமப்படி கையெழுத்து செய்து அதனையும், முதலாவது டிபாசிட்டையும் கொடுக்குங் காலையில், அல்லது டிபாசிட்டர் நேராகவந்து டிக்ளரேஷன் பாரத்தை கையெழுத்து செய்தவுடனே, டிபாசிட் மொத்தம், டிபாசிட்டருக்குக் கொடுக்கும்படியான பாஸ்புக் என்கிற ஒரு புஸ்தகத்தில் பதியப்பட்டு அப்பதிவில் போஸ்ட்மாஸ்டர் கையெழுத்து செய்து அவருடைய ஆபீஸ் ஸ்டாம்பு முத்திரையும் போடுவார். ஓர் டிபாசிட் தொகையையாவது அதில் ஒரு பாகத்தையாவது ஆறுமாத வாபஸ் வாயிதா அறிக்கைமீது பற்றிக்கொள்ளுந் தொகையாக்க விரும்பினால் அதற்கென்று அச்சிட்டு தபாலாபீசில் வைத்திருக்கும் உறுதிமொழி (சர்ட்டிபிகேட்டு) நமூனாவைப்பெற்று அதில் டிபாசிட்டர் சா[illegible] கையெழுத்துப்போட்டு தரவேண்டும்; இல்லாவிடில் அத்தொகை முழுதும் வேண்டுமென்றபோது வாபஸ்பெறும் டிபாசிட் தொகையொப்பந்தமாய் அவர் பாஸ் புத்தகத்தில் பதிவு வைக்கப்படும். பாஸ்புக் கொடுத்ததற்கடையாளமாக டிபாசிடர் ஒரு ரசிதில் கையெழுத்து செய்யவேண்டியது

குறிப்பு:—1 ஒரு டிபாசிட்டர் தனக்கு விருப்பமானால் தன் கணக்கின்பேரால் வைத்துள்ள எல்லா டிபாசிட்டுகளையும் (மற்கண்ட உறுதிமொழியில் [illegible] சொற்களைச் சேர்த்தெழுதி ஆறுமாத வாபஸ் வாயிதாஅறிக்கை[illegible] வேண்டுமென்று ஓர் பொது அதிகாரம் கொடுக்கலாம்; அதாவது:—

"நான் வேறுவிதம் தெரிவிக்கும்வரையில் என் கணக்கில் வைக்குப்படியான டிபாசிட்டுகள் ஆறுமாத வாபஸ் வாய்தா

அறிக்கைக் குட்பட்டவையாகப் பாவிக்கப்படவும் வேண்டு கிறேன்."

இவ்வாறு கொடுத்த அதிகாரமானது டிபாசிட்டரின் எழுத்து மூலமான விண்ணப்பத்தால் இரத்து செய்யப்படும் வரையில் அவர் கணக்கைச் சேர்ந்த டிபாசிட்டுகள் அந்த ஆறு மாத வாபஸ் வாயிதாவைப் பொருத்தியே கிற்கும். ஒவ்வொரு டிபாசிட்டு விஷயத்திலும் தனித்தனி உறுதிமொழியும் அவ சியமென்க.

21. ஒரு சப் அல்லது பிராஞ்சு ஆபீசில் அக்கவுண்டு ஏற்படுத்தும் விஷயத்தில், டிபாசிடருக்குக் கிடைக்கவேண் டிய பாஸ்புக்கை எட் ஆபீசிலிருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டும். இதுபற்றி முதல் டிபாசிட் செலுத்தும்பொழுது டிபாசிடருக்கு ஒரு ரசீது கொடுத்து பாஸ்புக்கை வாங்கிக் கொள்வதற்குத் தான் ஆஜராகவேண்டிய தேதியையும் தெரி விப்படுத்துவார்கள். டிபாசிடர் பாஸ்புக்கை வாங்கிக்கொண்ட வுடனே முதல் வாங்கின ரசீதை வாபஸ் செய்துவிட்டு பாஸ் புக் வாங்கிக் கொண்டதற்காக ஒரு ரசீதை கையெழுத்து செய்து கொடுக்கவேண்டியது. முதலில் கட்டின டிபாசிடின் மொத்தம் பாஸ்புக்கில் எட் ஆபீஸினால் பதியப்படும். இதனால் இந்த மொத்தம் எட் ஆபீசுக்கு அனுப்பப்பட்டதென்று டிபா சிடருக்கு நம்பிக்கைப்படும். முதலில்தனக்குக்கொடுத்த ரசீதை வாபஸ் செய்வதற்கு முந்தி அதில் பதியப்பட்ட மொத்தம் பாஸ் புக்கில் பதியப்பட்ட மொத்தத்திற்குச் சரியாயிருக்கிற தாவென்று ஒவ்வொரு டிபாசிடரும் ஜாக்கிரதையாய்ப் பார் க்கவேண்டியது.

பாஸ்புக்கும் அதினுடைய முக்கியமும்.

22. டிபாசிடருக்கு எப்படி இருக்குமோ அப்படியேபாஸ் புக்கானது அவர் இருக்கும் ஊரில் வழங்குகிற தேச பாஷை

யிலாவது அல்லது [illegible]கிவிஷ்லாவது இருக்கும். [illegible] அவருடைய அக்கவுண்ட் [illegible]ம்பரும் எந்த ஆபீசிலிருந்து புஸ்தகத்தை வாங்கிக்கொண்டாரோ அந்த ஆபீசின் பெயரும், அவருடைய சொந்த பெயரும் தொழிலும் இருப்பிடமும் அதில் காண்பிக்கப்படும். அந்த பாஸ் புக்கைக் கொண்டு வராமற்போனால் பணத்தைக்கட்டவும் கூடாது; மீண்டும் பெற்றுக்கொள்ளவுங் கூடாது. பாஸ் புக்கில் ஏதாவது மொத்தம் பதியப்படாமற் போனால், ஆபீசுக்கு இவ்விஷயத்தில யாதொரு உத்தரவாதமும் கிடையாது; ஆபீசைவிட்டு திரும்பிப்போகும்போது டிபாசிடர்கள் தங்கள் புஸ்தகங்களை சாக்கிரதையாய் பரிசோதனைசெய்து, பதிவுகள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்க்கவேண்டியது. தவிர பாஸ் புக்குகளை தங்களிடமே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஏனென்றால், எவனாவது ஒருவன் பாஸ் புக்கை மோசடியாய் பெற்றுக்கொண்டு தபாலாபீஸில் பணம் வாங்கி டிபாசிடருக்கு ஏதாவது நஷ்டத்தை உண்டாக்கினால் அந்த நஷ்டத்திற்கு தபாலாபீஸார் பொறுப்பாகமாட்டார்.

குறிப்பு:—ஒரு சப் அல்லது பிராஞ்சு போஸ்டாபீசில் ஏற்பட்டிருக்கிற கணக்கு விஷயத்தி , 31-வது விதியின்படி வட்டிபதிவதற்கு பிரதி ஜூன்மீ 15-ம் தேதிக்குப் பிறகு கூடிய சீக்கிரத்தில் பாஸ் புத்தகம் ஹெட் ஆபீசுக்கு அனுப்பப்படும். டிபாசிட்டரும் தன் பாஸ் புத்தகத்திற்குப் பதிலாக ஓர் ரசீது கொடுக்கப்பெறுவர். அந்த ரசீதை அவர் பாஸ் புத்தகம் திரும்பிவந்ததும் வாபஸ் செய்துவிடக்கடவர்.

பாஸ் புத்தகத்தை போக்கடித்துவிடுவதைப்பற்றி.

23. டிபாஸிடருக்கு முதலில் கொடுக்கும் பாஸ் புத்தகத்தின்மாவது அல்லது தபாலாபீசால் வைத்துக்கொள்ளப்படு

திற முதல் புத்தகத்திற்கு ... அவருக்கு கொடுக்கும் புத்தகத்திற்காவது ... வாங்கப்படமாட்டாது. (டிபாசிடரின் அபு... சம்பவித்ததாயிருந்தாலொழிய) ஒரு புத்தகம் ... போனாலும் அல்லது கெட்டுப்போனாலும் அல்லது ... ந்த நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் (35 வ... படி) தபாலாபீசு கண்ட்ரோலரின் அநுமதியின்மேல் ஒரு கணக்கு மறுபடியும் ஏற்படுத்தப்பட்டாலும், புதிய புத்தகத்திற்காக ... ரூபாய் ஒன்று கொடுக்கவேண்டியதாய் வரும்.

கணக்கு ஏற்படுத்தினபிற்பாடு பணத்தைக் கட்டுகிறவிதம்.

24. (1) ஒரு வருஷத்தில் எவ்வளவு கட்டவேண்டியதென்று குறித்திருக்கிறதோ அந்த அளவுக்கும் மொத்தத்தில் ஒரு டிபாசிட்டர் கட்டக்கூடிய அளவிற்கும் ... படாமலிருக்கிறவரையில் அடிக்கடி எப்பொழுது விருப்பம் இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் அவருடைய கணக்கு ஏற்பட்டிருக்கிற தபாலாபீசில் டிபாசிடர் பணத்தைக்கட்டலாம். அவர் செய்ய வேண்டியது என்னவென்றால் தபாலாபீசுக்கு பாஸ் புத்தகத்தையும் (அவசியமானால்) 20 - வது விதியில்கண்ட சர்டிபிகேட்டையும் கட்டவேண்டிய பணத்தோடு கொண்டுவரலாம்; அல்லது அனுப்பலாம் அவர் கட்டுகிறதொகையின்மொத்தம் பாஸ் புத்தகத்தில் எழுதப்படும். அடியில் கண்டிருக்கிற ... ம் திறுவையின் மொத்தம் எழுதப்பட்டிருக்கும். பதிவு போஸ்டுமாஸ்டரால் இனிஷியல் செய்யப்பட்டு ஆபீஸினுடைய தேதி முத்திரையும் குத்தி டிபாசிட்டருக்காவது அவர் அனுப்பிய ஆள்வசமாவது பாஸ் புஸ்தகம் வாபஸ் செய்யப்படும்:-

௵ ௴ ௳.	தபாலாபீஸ் [illegible]	[illegible] டிபாசிட்' [illegible] 'வாபஸ் [illegible]ருந்தொகை' [illegible]ல் எழுதப் ப[illegible]வேண்டும்).	[illegible]வேண்டுமென்ற வாங் [illegible] கட்டின தொகை.	வாபஸ் பெற்ற தொகை.
1883௵			ரூ அ ப	ரூ அ ப
எப்ரி௴ 3௳		கட்டினது பத்து ரூ.	10 0 0	...
ஷை 15௳		கட்டினது இருபத்தைந்து ரூ.	...	...
மே௴ 12௳		வாபஸ்பெற்றது மூன்று ரூ.	...	3 0 0
டிசம்பர்௴ 20௳.		வாபஸ்பெற்றது இருபது ரூ.	...	...

2. ஒரு ஹெட் ஆபீசில் ஏற்[illegible]பட்டிருக்கிற கணக்கின் [illegible]குகளாயிருக்கிற எந்த சப் ஆபீசுகளிலும் பணம் கட்டலாம். அந்த சப் ஆபீசின் ஹெட் ஆபீசிலும அல்லது அந்த ஹெட் [illegible] ஆபீசுகளிலும் பணம் கட்டலாம். இம்மாதிரியாகவே ஒரு [illegible]பீசு எதற்குக் கீழ்ப்பட்டிருக்கின்றதோ அந்த ஆபீசில் [illegible]தால் அச் சப் ஆபீசின் ஹெட் ஆபீசிலும் பணம் கட்டலாம். [illegible]பட்டிருக்கின்ற தபாலாபீசில் மாத்திரம் பணம் கட்டலாம்.

போதும்.	ஆறு மாதவா[illegible] கைமீது வ[illegible] வேண்டி[illegible]			[illegible] தொ	போஸ்ட் மாஸ்டரின் குறுங் கையெழுத்து (இனிஷியல்).
பிரதி வாரம் தேதி யின் பின் தின் ற [illegible] தொகை.	[illegible]ன் தொகை.	வாபஸ் பெற்ற தொகை.	பிரதி வாரம் தேதி யின் பின் [illegible] தொகை.	டிபாசிட்[illegible] தொகை.	
ரூ அ ப	ரூ அ ப	ரூ அ ப	ரூ அ ப	ரூ அ ப	
10 0 0	...	...	...	10 0 0	A. B. C.
...	25 0 0	...	25 0 0	35 0 0	A. B. C.
7 0 0	...	...	...	32 0 0	A. B. C.
...	...	20 0 0	5 0 0	12 0 0	A. B. C.

டிபாசிட்டர் அந்த ஹெட் ஆபீசின் கீழ் உள்ள சேவிங்ஸ் பாங் ஒரு சப் ஆபீசில் ஏற்பட்டிருக்கிற கணக்கின் டிபாசிட்டர் ஆபீசின் கீழ் உள்ள சேவிங்ஸ் பாங்கிகளாயிருக்கிற இதர சப் பிராஞ்சு ஆபீசில் டிபாசிட்டு செய்திருக்கிறவர் அந்த பிராஞ்சு பணம் கட்டலாம். மேலும் அந்த ஆபீசு சப் ஆபீசாகவிருந் இவ்விலக்குகளைத் தவிர ஒரு டிபாசிட்டர் தன் கணக்கு [illegible]ற்

குறிப்பு 1.—ஒ[illegible] செத்துவிடும்படி உத்தரவா ஞல் அதன்பேரில் [illegible] கட்டக்கூடாது.

குறிப்பு 2.—[illegible] பேரில் வைக்கப்பட்ட கணக் கில், அவன் 18 வய[illegible] மேல் ப[illegible] கட்டக்கூடாது.

குறிப்பு 3.—[illegible]ட்டர் வேலாடுமென்றபோது வா பஸ் பெறும்படி வைத்த த[illegible] கணக்கின் நிலுவை முழுத்தொ கையையோ அல்லது அதிலோரு பாகத்தையோ ஆறுமாதவா யிதா வாபஸ் அறிக்கைக்கு உள்ளாகும்படி மாற்றவி ரும்பினல் அதற்காக 20-வது விதியிற்கண்ட நமூனவில் ஓர்சர்டிபிகே ட்டு எழுதி போஸ்ட் மாஸ்டருக்கு கொடுக்கவேண்டும். இந்த சர்ட்டிபிகேட்டும் டிபாசிட்டாின் பாஸ் புஸ்தமும் சேர் ந்ததும் விரும்பியபடி மாற்றல் செய்யப்படும்.

25. ஒரு சப் அல்லது பிராஞ்ச் போஸ்டாபீசில் பணம் கட்டியிருந்தால் பாஸ் புஸ்தகத்தில் இருக்கிற ரசீதோடு ஜில் லாவினுடைய எட்குவார்டரில் சாதாரணமாயிருக்கிற எட் ஆபீசிலிருந்து அகனு லெட்ஜ்மெண்டும் டிபாசிடர் பெற்றுக் கொள்வார். இந்த அக்னலெட்ஜ—மெண்டு தபாலாபீசின் மூல மாய் சாதாரணமாய் அவருக்கு பட்டுவாடாசெய்யப்படும். சரி யான காலத்தில் அது டிபாசிடருக்கு சேராமல்போனலும், அல்லது அது அவரிடத்தில் வருகிறபொழுது கலேத்ததாக எதாவது குறியிருந்தாலும், அல்லது பாஸ் புஸ்தகத்தில் கண் டிருக்கிற பதிவோடு ஒத்துவராமற்போனலும், பாஸ் புஸ்தக த்தில் கண்டிருக்கிற எட் ஆபீசின் போஸ்ட்மாஸ்டருக்குடி பா

சிடர் உடனே மனு செய்யவேண்டும். அவருக்குத் திருப்திகரமான பதில் கிடைக்கிறவரைக்கும் அடிக்கடி மனுக்கொண்டே இருக்கவேண்டும்.

பணம் வாங்குகிற விதம்.

26. (1) ஒரு டிபாசிடர் ஆறுமாத வாபஸ் வாயிதா அறிக்கைக்குரிய தன் கணக்கிலிருந்து பணம்வாங்க விரும்பினால், அதற்கென்று ஏற்பட்டு தபாலாபீசில் கிடைக்கிற நமூனாவின் மூலம் தன் விருப்பத்தைப் போஸ்ட்மாஸ்டருக்கு தான் அறிக்கை செய்யவேண்டும். அப்புறம் டிபாசிடருக்கு அந்த அறிக்கைசேர்ந்த தேதியிலிருந்து ஆறுமாதங் கழித்துத் தொகை செலுத்தப்படும்தேதியைக் குறிப்பிட்டு போஸ்ட்மாஸ்டர் கடிதம் அனுப்புவார். அந்தத் தேதியில் தொகையை வாஸ்தவமாய் வாங்கிக்கொள்ளாத பட்சத்தில், ஆறுமாதவாயிதாபெற்ற அத்தொகையானது வேண்டுமென்றபோது வாபஸ்பெறும் டிபாசிட் கணக்கிற்கு மாற்றி வைக்கப்படும்.

(2) டிபாஸிடர் வேண்டுமென்றபோது வாபஸ் பெறும் கணக்கைச்சேர்ந்த அல்லது ஆறுமாத வாபஸ் வாயிதா அறிக்கையின் காலங்கடந்த பணத்தை வாங்கிக்கொள்ள இஷ்டமிருக்கும் பக்ஷத்தில், பணம் வாங்கிக்கொள்ளுவதற்கு மனுசெய்து கொள்ள தபாலாபீசில் கிடைக்கும் அச்சிட்டிருக்கிற நமூனாவில் தானே கையெழுத்து செய்தும் தன்பேரில் இருக்கிறநிலுவையையும் தான் பெற்றுக்கொள்ள எண்ணமிருக்கிற தொ

[illegible] மொத்தத்தையும் எழுதி நேரிலாவது அல்லது ஏஜெ ண்டின் மூலமாயாவது தன்னுடைய கணக்கிருக்கிற தபாலா பீஸில் தன்னுடைய பாஸ் புஸ்தகத்தையும் [illegible] வையும் ஆஜர்செய்யவேண்டியது. பணம் வாபஸ் பெற ஏஜெண்டு பாஸ் புஸ்தகத்தையும் விண்ணப்பத்தை [illegible] ஆஜர் செய்தால் [illegible] விண்ணப்பம் டிபாசிடரின் கையைவிட்டுப்போவதற்கு முந் யே அதில் ஏஜெண்டின் பெயரும் கையொப்பமும் பதிவாக வேண்டும். எவ்விதமாகிலுஞ்சரி தபாலாபீசில் விண்ணப்பம் சேர்வதற்குமுன் பதிவுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஏஜெண்டின் மூலமாய் அனுப்பும் பக்ஷத்தில் ஏஜெண்டின் பெ யர், பணம் வாங்கிக்கொள்ளச்செய்யும் மனுவில் எழுதப்பட்டி ருக்கவேண்டும். அவர் எழுதத் தெரியாதவராயிருந்தால் சா க்ஷிகையெழுத்து போடவேண்டியதற்காக நேரில் ஆஜராகி மனுவில் அவருடைய கைநாட்டையாவது அல்லது முத்திரை யையாவது வைக்கவேண்டும். அவர் நேரில் ஆஜராக அசக்த ராயிருக்கும் பக்ஷத்தில் கௌரவமுள்ள சிலர்களால் சாக்ஷி கை யெழுத்து போடப்பட்டு மனுவில் அவருடைய கைநாட்டா வது அல்லது முத்திரையாவது போடப்பட்டிருக்கவேண்டும். டிபாசிடர் நேரில் ஆஜராக அசக்தராயுள்ளதைப்பற்றியும் மனு சரியானவரி[illegible]லிருந்துவந்ததா என்பதைப்பற்றியும், விசா ரணை செய்து அவருக்கும் திருப்தியாயிருக்கும்பக்ஷத்தில் பாஸ் புஸ்தகத்தோடு இந்த மனுவைக் கொண்டுவருகிற மனிதனிட த்தில் போஸ்ட்மாஸ்டர் பணத்தைக்கொடுப்பார். டிபாஸிடர்

அல்லது அவரனுப்பிய ஆள் எழுதத்தெரியாதவராயின், அப்படிப்பட்டவர் பணத்தை வாங்கும்போது வைக்கவே[illegible] கைநாட்டை, டிபாஸிட்டருக்கு அல்லது அந்த ஆளுக்கும், போஸ்டாபீஸ்[illegible] உத்தியோகஸ்தர் யாருக்காவது தெரிந்தவருமான ஒருவர் தன[illegible]கையெழுத்தினுல் அத்தாட்சிப் படுத்தவேண்டியது.

[illegible] குறிப்பு 1.—ஒரு டிபாஸிடர் தன் பாஸ் புஸ்தகத்தில் தன்பெயரில் நிற்கும் நிலுவைத்தொகை முழுவதையும் வாங்கிவிட விரும்பினுல் அவர் தன் கணக்கை முடிவு செய்யவேண்டிவரும்.

குறிப்பு 2.—ஸ்திரிகள் டிபாசிவிட்டர்களாக யிருக்கும் கணக்குகளிலிருந்து அவர்களுடைய உத்திரவுபெற்ற ஏஜன்டு களினுல் 19-வது விதியின் பிரகாரம் பணம்வாங்கும் விஷயத்தில் பணம் வாங்குவதற்சாகக் கொடுக்கும் மனுவில் பின் சொல்லிய உறுதிமொழியிலும் அந்த ஏஜன்டு கையெழுத்து செய்யவேண்டும். "டிபாசிடர் இன்றையதினம் உயிரோடிருப்பதுடன் புத்தி ஸ்வாதீனமுள்ளவரா யிருக்கிருரென்று உறுதியாய்ச்சொல்லுகிறேன்."

27. தகப்ப[illegible]த்தவிர அல்லது தகப்பனுர் இறந்துபோயிருந்தால் தாயாரைத்தவிர வேறுயாராவது சரியான வயசு அடையாத ஒரு சிறுவன் பெயரால் ஏற்படுத்தப்பட்டு கணக்கிலிருந்து பணம் வாங்கிக்கொள்ள எண்ணமிருந்தாலும் அப்படிப்பட்ட இளைஞனுக்கு [illegible]ரக்ஷணை கர்த்தராயிருப்பதைப்பற்றி

பணம் வாங்க பாத்தியதை உண்டென்றாலும் டைரெக்டர்ஜெ வர்களினால் நியமிக்கப்பட்ட கமிஷனின் அடியில் வருகிற கேள்விகளுக்கு மறுமொழிகளை எழுதிக்கொடுக்க வேண்டும். 41-வது ரூலை யனுசரித்து போஸ்ட்மாஸ்டர் ஜெனரலினுடைய அனுமதியின்மேல் பணம் வாங்கிக்கொள்ள உத்தரவு செய்யப்படும் :—

(a) சரியான வயதுவராத இளைஞனுக்கும் உனக்கும் என்ன பாத்தியதை

(b) அந்த சிறுவனுடைய தகப்பனா அல்லது தாயாரா இறந்துவிட்டது? அல்லது இருவரும் இறந்து போய் விட்டார்களா? அந்த இளைஞனுடைய நெருங்கினபந்துவில்யார்உயிரோடிருக்கிறார்கள்?

(c) ——சாதனத்தினலாவது, பத்திரத்தினலாவது அல்லது பிரிடிஷ் இந்தியாவில் வழங்கிவருகிற யாதொரு சட்டத்தினலாவது, இளைஞனுடையசம்ரக்ஷணை கர்த்தாவாக நியமிக்கப்பட்டாயா? (இந்தகேள்விக்கு மறுமொழி உடன்பாடாயிருந்தால் அவருடைய சுதந்தரத்தை உறுதிப்படுத்துகிற பத்திரங்களை மனுதாரர் அனுப்பவேண்டும்.)

(d) இளைஞனுடைய சரியான வயது அடைந்த பந்து நீ தானா? அவன் உன்னோடு வசிக்கிறானா? அல்லது அவன் உன்னால் சம்ரக்ஷிக்கப்பட்டு வருகிறானா?

குறிப்பு:—இளைஞனுடைய பேரால் ஏற்படுத்தப்பட்ட கணக்கிலிருந்து பணம் வாங்குகிறபட்சத்தில் இளைஞனுடைய தகப்பனாவது அல்லது இளைஞனுடைய வேறு சவரக்ஷணை கர்த்தராவது பணம் வாங்குகிறதற்காக செய்துகொள்ளும் மனுவில் அடியில் வந்த சேர்ட்டிபிகேட்டை கையெழுத்து செய்யவேண்டும்:

“பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கிற தொகையானது இளைஞனுடைய உபயோகத்திற்காக வேண்டியதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.”

மைனரான ஸ்திரீபேரால் ஏற்படுத்தப்பட்ட கணக்கிலிருந்து பணம் வாங்குகிறபக்ஷத்தில் அம்மைனரின் தகப்பன், புருஷன் அல்லது வேறு சவரக்ஷணை கர்த்தாவது பணம்வாங்குகிறதற்காகச் செய்துகொள்ளும் மனுவில் அடியில் வருகிற சேர்ட்டிபிகேட்டை கையெழுத்து செய்யவேண்டும்:—

பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கிற தொகையானது கலியாணமாகாத *

சட்டப்படி கலியாணம் செய்துகொண்ட என்மனைவியானமைனரினுடைய உபயோகத்திற்காக வேண்டியதென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

---

* (ஸ்திரீயின்) புருஷனுயின் அடித்துவிடவும்.

¶ (ஸ்திரீயின்) புருஷனல்லாத வேறுமனிதனுயில் அடித்து விடவும்.

28. டிபாசிட்டு விஷயத் ... ஸ்டரு டைய இனிஷியல்போட்டு ஆபீசனுடை ... திரையுடனும் பெற்றுக்கொள்ளப்படுகிற தொகை ... கி புதநிலுவை இவ்வளவென்று பாஸ் புத்தகத்தில் காட்டப்படும்.

டிபாஸிடரிடத்திலாவது அல்லது பாஸ் புஸ்தகத்தையும் மனுவையும் கொண்டுவருகிற மனிதனிடத்திலாவது அந்த தொகை கொடுக்கப்படும் எல்லாசமயத்திலும் ஸ்டாம்ப் டியூடி (Duty) இல்லாமல் வாரண்ட் அப் பேமெண்டில் (Warrant of Payment) அவருடைய ரசீது வாங்கிக் கொள்ளப்படும்.

29. (1) ஒரு சப் போஸ்டாபீசில் பணம் வாங்க மனுக் கொடுத்தால் ஆபீசில் பணம் கையிருப்பில் இருந்தால் ஒழிய உடனே பணம் கொடுக்கப்படமாட்டாது. கையிருப்பில் பணமில்லாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் பணம் வரவழைக்கப்படும் அச்சந்தர்ப்பத்தில் பணம் பெற்றுக்கொள்ள எந்த தேதியில் தபாலாபீசுக்கு வரவேண்டுமென்று டிபாசிட்டருக்கு அறிவிக்கப்படும். டிபாசிட்டர் பாஸ் புஸ்தகத்தை தன்னிடம் வைத்துக்கொள்ளுவார். குறித்த தேதியிலாவது அல்லது அந்த தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் பிந்திய எந்தத் தேதியிலாவது பாஸ் புஸ்தகத்தை ஆஜர் படுத்தினால் பணம் பட்டுவாடா செய்யப்படும்.

(2) ஒரு பிராஞ்சு ஆபீசில் பணம் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு மனுவும் அந்த பிராஞ்சு ஆபீசு எதற்குக் கீழானதோ அந்த ஹெட் அல்லது சப் ஆபீசுக்கு

பணம் ([illegible] (Warrant of Payment) அனுப்ப[illegible] பெற்றுக்கொள்ள எந்தத் தேதியில் தபாலாபீசு[illegible] வேண்டுமென்று டிபாசிட்டருக்கு அறிவிக்கப்படும். டிபா[illegible]ட்டர் பா[illegible]ஸ்புஸ்தகத்தைத் தன்னிடம் வைத்துக்கொள்ளுவா[illegible] குறித்த தேதியிலாவது அல்லது அந்த தேதியிலிருந்து ஒருவாரத்திற்குள் பிந்திய எ[illegible] தேதியிலாவது பாஸ் புஸ்தகத்தை ஆஜர் ப[illegible]த்தினால் பண[illegible]கொடுக்கப்படும்.

(3) சப் ஆபீசு பிராஞ்சு ஆபீசுக[illegible] 26 (2) - வது விதியிற் சொல்லிய நிபந்தனைகளின்ப[illegible] டிபாசிட்ட ரிடத்திலாவது அல்லது பாஸ் புஸ்தகத்தை ஆஜர்படுத்துகிற மனித ரிடத்திலாவது பணம் கொடுக்கப்பட்டு எல்லா சமயத்திலும் ஸ்டாம்பு டிக்கட்டி[illegible] இல்லாமல் வாரண்ட் [illegible]ப் பேமெண்டில் (Warrant of [illegible]ment) அவருடைய ரசீது வாங்கப்படும். மேலும் இவ்விஷய[illegible] அல்லது பிராஞ்ச் போஸ்ட்டு மாஸ்டரின் குறிப்பை[illegible]த்து ஆபீசு தேதி முத்திரைக்கு நோராக பாஸ் புஸ்தகத்தில் குறிக்கப்படும்.

குறிப்பு:—(a) மைனர் கணக்கு (b) ஜாமீன் டிபாசிட்டு கணக்கு (Security deposit account) (c) 44-வது விதியிற் சொல்லிய கூட்டுக்கணக்குகள் ஆகியவைகளிலிருந்து பணம் வாங்குவதற்குச் செய்யும் விண்ணப்ப விஷயத்தில் ஹெட் ஆபீசிலிருந்து பட்டுவாடா உத்தரவு (Warrant of Payment) வருகிறவரையில் எவ்விதத்திலும் பணம் பட்டுவாடா செய்யப்படமாட்டாது.

30. வேறு உத்திரவு பிறக்கும்வரை [illegible] நடை நிபந்தனையை அநுசரித்த வேண்டுமென்ற [illegible] டிபாஸிட்டுகளுக்கு ரூபா [illegible]க்கு 100-க்கு 3 வீதமும் [illegible] மாதவாயிதா அறிக்கையில் வேண்டிய டிபாஸிட்டுகளுக்கு ரூபா 1-க்கு 4¼ வீதமும் வட்டி கட்டிக்கொடுக்கப்படும். ஒரு மாதத்தின் நாலாவது நாள் முடியக்கும் மாதக்கோடிக்கும் நடுவிலுள்ள ஓர் கணக்கின் குறைந்த நிலுவைத் தொகைமேல் பிரதி பஞ்சாங்க மாதக்கணக்காய் இந்த வட்டி கொடுக்கப்படும். முழு ரூபாய் தொகைகளுக்கே வட்டி கொடுக்கப்படும். மை[illegible]க்கும் கூட வட்டி கணக்கிடப்படும். ஓர் கணக்கில் தங்கும் நிலுவைத்தொகை வேண்டுமென்றபோது வாங்குந் தொகையாயிருந்தாலுஞ்சரி, அல்லது, ஒரு பாகம் வேண்டுமென்றபோது வாங்குவதையும் மற்றது ஆறுமாதவாயிதா வாபஸ் அறிக்கையின்மீது வாங்குவதாயும் இருந்தாலுஞ்சரி, ரூ. 2,000-க்கு (அல்லது மைனர் நிமித்தம்வைத்த கணக்காயின் ரூ. 1,000-க்கு) மேற்பட்ட எந்த தொகைக்கும் வட்டி கொடுப்பதில்லை.

குறிப்பு 1.—ஒரு கணக்கை எடுத்துவிடும்படி உத்தரவாகும்போது, அவ்வித உத்தரவு வெளியாகும் மாதத்தின் முதல் நாளிலிருந்து வட்டி சேர்க்கப்படமாட்டாது. (35-வது விதியின் கடைப்பாகத்தைப் பார்க்கவும்.)

குறிப்பு 2.—ஒருகாலஞ்சென்ற டிபாஸிட்டர் கணக்கின்பேரில், போஸ்ட் மாஸ்டர் ஜெனரலவர்களால் கணக்கில் மீந்தி

ருக்கும் ... ன அங்கீகரிக்கப் பட்டவ
ருக்கு ... மாதத்தின் முதல் நாள் தொ
டங்கி ... படமாட்டாது. காலஞ்சென்ற டிபாசிட்
டருடைய ... அவர் இறந்த பிறகு கட்டிய தொகை
யின் மேல் ... வட்டிக் கொடுக்கப்படமாட்டாது.

31. ஒவ்வொரு மாதத்திற்கும் மேற்சொன்ன பிரகாரம் கணக்கிடப்பட்ட வட்டியானது ஒவ்வொரு கணக்கின் நிலுவைக்கு ஒவ்வொரு வருஷத்தில் சேர்க்கப்படும். அவைகளில் ... செய்வதற்காக தங்களுடைய பாஸ் புஸ்தகங்களை டிபாசிட்டர்கள் ஜூன் மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு ... டிய சீக்கிரத்தில் ஆஜர்படுத்தவேண்டும். இந்த விஷயத்திற்கு பாஸ்புஸ்தகம் கொண்டுவரப்படாமல் போனால் மறுதடவை பணம் கட்டும் பொழுதாவது பதிவு செய்யப்படும்.

குறிப்பு 1.—இந்த சட்டத்தின்படி வட்டியைச் சேர்ப்பதற்காக சப் அல்லது பிராஞ்சு போஸ்டாபீசில் டிபாசிட்டராய் இருக்கிறவர்களுடைய பாஸ் புஸ்தகங்கள் ... ஆபீசுக்கு அனுப்பப்படும்.

குறிப்பு 2.—சென்றவருஷத்திற்கு வட்டி சேர்க்கப்பட்டிருந்தாலன்றி மார்ச்சு 31 தேதியின்மேல் பாஸ்புஸ்தகத்தில் நிலுவைப்பணம் குறிக்கப்படமாட்டாது.

கணக்குகளைமாற்றுவதைப்பற்றி.

32. மாற்றுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பாக கணக்கு ஏற்பட்டிருக்கும் ... த்தில் ஒருடிபாசிடர் தன்னுடைய

கணக்கை சார்ஜில்லாமல் (Bank) இருக்கிறயாதொரு தபாலாபீ மாற்றிக்கொ . அவருடைய கணக்கை மாற்றிக்கொள் தபாலாபீசுக்கு தன்னுடைய பாஸ்புஸ்தகத் டுவரவேண்டும் அல்லது மாற்றுகிறதற்காக மனுவோடு அதை ஆஜர்படுத்தவேண்டும். பாஸ்புஸ்தகம் டிபாசிடருக்கு மறுபடியும் கொடுத்துவிடப்படும். அவருடைய கணக்கு மாற்றப்பட்ட தபாலாபீசில் கூடியசீக்கிரத்தில் அதை அவர் புதிதான தன்னுடைய திரிக்கையில் வரவுசெய்யவேண்டும்.

குறிப்பு 1.—ஒரு எட் ஆபீஸிலிருந்து இன்னொரு ஆபீசுக்கு மார்ச்மீ 16 தேதி முதல் 31 தேதிவரையில் ஒரு கணக்கு மாற்றப்படமாட்டாது.

குறிப்பு 2.—எடுத்துவிடும்படி உத்தரவான கணக்குகள் மாற்றப்படமாட்டா.

குறிப்பு 3,—ப அல்லது பிராஞ்சு ஆபீசில் டிபாசிட்டு செய்தவருடைய பாஸ்புஸ்தகம் அதை மாற்றும்படி அதிகாரம் கொடுத்த உத்தரவுகளை அதில் பதிவுசெய்வதற்காக முதலில் எட் ஆபீசுக்கு அனுப்பப்படும்,

கணக்கு எடுத்துவிடுதல்.

33. (1) டிபாசிடரின்பேரில் நின்ற நிலுவைத்தொகை முழுதும் வேண்டுமென்றபோது வாங்கும் டையாயிருக்கும் பட்சத்தில் அதைச் சம்பந்தித்த கணக்குகள் எப்போதே

பணத்தை [illegible]னும் ஒ[illegible]ாடி[illegible] ஒழித்து[illegible]லாம்; ஆனால் ஒருடிபாசிட்[illegible] அதின் ஓர் பாகமோ ஆறுமாத வாபஸ்[illegible]கைக்கு[illegible]டப்பட்டதால் அவ்விதக்கணக்கு 34,34[illegible]களில் [illegible] சந்தர்ப்பங்களில் தவிர 26 (1) விதியின்[illegible]டுக்கப்பட்ட அறிக்கைக்காலம் செல்லும் வரையில் பைசல் செய்து [illegible]க்கமுடியாது.

(2) பணம் கட்டுப[illegible]ம் கணக்கை எடுத்துவிட விரும்[illegible]கமும் அதிலிருக்கும்இருப்புத்தொகையை பெற்றுககொள்ள விண்ணப்பமும் கொடுக்கவேண்டும் அவாறு இருப்பிலிருக்கும் நிலுவைப்பணத்தோடு வட்டி விண்[illegible]ம் கொடுத்த முன்மாதக்கடைசி வரைக்கும் உண்டான வட்டியை பாஸ்புஸ்தகத்தில் சேர்த்து ஆகமொத்தம் அவருக்குசேரவேண்டியதொகை ஏற்படுத்தப்படும்; பிறகு அந்ததொகை பணம் கட்டுபவருக்குக்கொடுத்து அவரது [illegible]கையொப்பத்தை "வாரன்ட் ஆப் பேமென்ட்" உத்தரவில் வா[illegible]கிக்கொள்ளப்படும். பாஸ் புஸ்தகம் தபாலாபீஸிலேயே நிறுத்திக்கொள்ளப்படும். இப்படி கணக்கை எடுத்துவிடும் விண்ணப்பம் ஒரு சப் அல்லது பிராஞ்சு ஆபீசிலே கொடுத்தால் சதாரணமாய் பணம் வாங்குவதற்குண்டான நடவடிக்கையே தவிர வேறில்லை ஆனால் பாஸ்புஸ்தகமும்; மட்டும் நிறுத்திக்கொள்ளப்படும். மேலும் விண்ணப்பமும் பாஸ்புஸ்தகம், வட்டி வரவேண்டியதாயிருக்கும்போதெல்லாம் பணம் கொடுக்க உத்திரவுக்காக (Warrant of Payment) எட் ஆபீசுக்கே அனுப்பப்படும். சப் ஆபீசு[illegible]ரண்ட் ஆப்பேமெண்டு கொடுக்க உத்தரவு பெற்றதொன்றுகி[illegible]மேலே சொன்னபடிசெய்யப்படும்.

குறிப்பு.—ஒரு டிபாஸிட்டரை வாரத்துக்கொருமுறைக் கதிகம் தன் கணக்கிலிருந்து பணம் வாங்கவொட்டாமல் தடுக்கிற விதி (13-வது விதியைப் பார்க்கவும்) ஓர் கணக்கைப் பைசல்செய்து ஒழிப்பதற்குஅசவயில்லை; அதாவது-வாபஸ் வாங்கின வாரத்திற்குள் ஒரு கணக்கை பைசலாய் ஒழிக்கலாமென்பதே.

34. போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அல்லது தபாலாபீசு கன்ட்ரோலரவர்கள் இவ்விதிகளின்படி ஒரு கணக்கை ஒழித்துவிடும்படி உத்தரவு செய்தால், கூடிய சீக்கிரத்தில் பாஸ் புஸ்தகத்தைக் கொடுத்துத் தமக்குச் சேரவேண்டிய தொகையை பெற்றுக்கொண்டு போகும்படி எழுத்து மூலமாய் டிபாஸிட்டவருக்கு தெரிவிக்கப்படும். அப்படி தெரிவித்த தேதிமுதல் அந்தக்கணக்கில் வைக்க பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது, அந்த தேதிக்குமுன் மாதக்கடைசிவரைக்குமே வட்டி கிடைக்கும்.

குறிப்பு.—இச்சந்தர்ப்பங்களில் ஆறுமாத வாயிதாவாபஸ் அறிக்கையின் மேல்கட்டிய டிபாசிட்டுகளின்பேரில் அவ்விதடிபாசிட்டுகளுக்கு எர்பட்ட [illegible]தப்படி வட்டி (எதாவது கொடுக்கவேண்டியிருந்தால்) கணக்கிடப்படும்.

34 A. ஒரு மைனர் தன்பேரில் ஏற்படுத்திய கணக்கை தான் 18 வயதாகிறபோது எடுத்து விடவேணும். வயதுக்கு வந்த இளைஞன் இந்தியாவில் இல்லாத [illegible]வக்க [illegible]ண்டாகி அதனால் மிகுந்த கஷ்டம் சேருமேயானால் போஸ்ட்மாஸ்டர்

ஜெனரல் அவர்கள் மைனரின் கணக்கை கார்டியன் எடுத்து விடுவதற்கு உத்தரவுகொடுப்பார். இந்த கார்டியன் அதை யிட்டுவரக் கூடிய எந்த நஷ்டத்துக்கும் பாத்தியஸ்தராவார். 18 வயதினரான ஒரு இளைஞன் சட்டத்தின்படி அல்லது ஒரு கோர்ட் ஆர்டரின்படி இன்னும் மைனராகவே யிருந்தால் இந்த மைனர் கணக்கை அவன் 18 வயதானவுடன் அவன் கார்டியன் எடுத்துவிட வேண்டியது. ஒரு மைனரானவன் 18 வயதடைந்த மாதத்தின் முதல் தினந்துவங்கி அவன் நிமித்தம் வைத்திருக்கும் கணக்கிற்கு வட்டி நின்றுபோய்விடும்.

குறிப்பு —34-வது விதியின் கீழ்உள்ள குறிப்பு இவ்விதிக்கும் பொருந்தும்.

எடுபட்டபிறகு மறுபடி கணக்குவைத்தல்.

35. ஒரு தடவை கணக்கு எடுத்துவிட்டால், தபாலாபீசு கண்ட்ரோலரவர்கள் உத்தரவில்லாமல் அப்படி எடுத்துவிட்ட தேதிமுதல் மூன்றுமாதம் முடிவதற்குமுன் வேறேகணக்கு வைக்கக்கூடாது. உத்தரவுபடி கணக்கு எடுபட்டால் எடுத்துவிடும்படி உத்திரவுகொடுத்த அதிகாரியின் அனுமதியில்லாமல் எவ்விதத்திலும் புதியதாய்க் கணக்கு ஒரு டிபாசிடர் வைக்கக்கூடாது.

கலாவதியான (டெட்) கணக்குகள்.

36. லேவாதேவிகளில்லாமல் கீழ்குறித்தகாலங்களுக்குமேற்பட்டிருக்கும் கணக்குகள் காலாவதியான கணக்குகளாக பாவிக்கப்படும். பிறகு தபாலாபீசு கண்ட்ரோலரவர்கள் உத்தர

வில்லாமல் அப்பேர்ப்பட்ட கணக்குகளில் பணம் கட்டவும் வாங்கவும் கூடாது:—

கணக்கின் நிலுவைப் பணம்	பணம் கட்டுதல், வாங்குதல், வட்டி சேர்தல் முதலியலாவாதேவிகள்.
10ரூக்கு மேற்படாதிருக்கையிலும்.	3 முழுவருஷங்களாய் விடுபட்டிருக்கையிலும்
100 ,, ,,	6 ,, ,, ,,
100 மேற்படுகையிலும்	12 ,, ,, ,,

அவை காலாவதியான கணக்குகளாம்.

குறிப்பு 1.—இந்த விதியில் "லாவாதேவி" என்பதினால் பணம் கட்டுவது வாங்குவதுமன்றி வருஷந்தோறும் பாஸ்புஸ்தகத்தைக் கொடுத்து அவ்வருஷத்து வட்டி சேர்த்துக்கொள்வதும் கருத்தாம்.

குறிப்பு 2.—காலாவதியான ஒரு கணக்கு டிபாஸிட்டருடைய விண்ணப்பத்தின்படி மீண்டும் புதுப்பிக்கப்படலாம். அப்போது சென்றகாலத்து வட்டி கணக்கிடப்பட்டுதொகையோடு சேர்க்கப்படும்.

சேவிங்ஸ் பாங்கியில் போட்டிருக்கும் பணத்திற்கு வாரிசுதாரர்கள் அல்லது, சம்ரக்ஷணகர்த்தாக்கள் கேட்குமபோது அனுசரிக்கவேண்டிய முறைமைகள்.

37. பணம் கட்டுமொருவர் தபாலாபீசு சேவிங்ஸ் பாங்கியில் 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் பணமாகவாவது கவர்ன

மெண் பத்திரமாக வாவது அல்லது இரண்டுமோகவாவது வைத்துவிட்டு இறந்துவிட்டால் அப்படி இறந்த மூன்றுமாதத்துக்குள் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலவர்களுக்கு அவர் வைத்துப்போன உயில் பத்திரமாவது அவருடைய ஸ்திதியை பரிபாலிக்கும்படி யாதொரு உத்தரவாவது அல்லது 1889-ம் வருஷத்தின் 7 வது ஆக்டுபடி கொடுக்கப்படும் ஒரு சர்டிபிகேட்டாவது ஆஜர்ப்படுத்தப்படவேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில், டிபாஸிட் தொகையை வாங்கவாவது, இறந்துபோனவருடைய ஸ்திதியைப்பரிபாலிக்கவாவது எவரொருவர் உரியவரென்று போஸ்ட்மாஸ்டர் ஜெனரலவர்களுக்குத் தோற்றுகிறதோ அவரிடத்தில் அந்ததொகையைக் கொடுத்துவிட உத்தரவு செய்யலாம்.

குறிப்பு 1.—இறந்துபோன டிபாசிட்டர் மைனராயிருந்து ஒன்றிற்கு அதிகமான கணக்குகள் அவர் பெயரில் ஏற்பட்டிருந்தால் இந்த ரூல் அனுசரிக்கும்பொருட்டு எல்லாக்கணக்கின்வரவிலிருந்தும் இருப்புமுழுதும் ஒன்றாய்ச்சேர்க்கப்படும்.

குறிப்பு 2.—எந்தக்கணக்கின் நிலுவைத்தொகை முழுதுமோ ஒருபாகமோ இறந்த வாபஸ்வாயிதா அறிக்கைக்குள்ளாகியிருக்கிறதோ அந்தக்கணக்கிலிருந்து இந்த விதியின்படி அறிக்கை வேண்டுமலே பணம் பட்டுவாடா செய்யப்படலாம். இந்த சந்தர்ப்பங்களில் ஆறுமாதவாயிதா வாபஸ்அறிக்கையின்மேல்கட்டிய டிபாஸிட்டுகளின்பேரில் அவ்விதடிபாசிட்டுகளுக்கு எற்பட்ட மேலான வீதப்படி வட்டிகணக்கிடப்படும்.

38. தொகை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால், உயில் பத்திரமாவது பரிபாலன உத்தரவாவது அல்லது 1889ம் வருஷத்தின் 7-வது ஆக்ட்டுப்படி ஒரு சர்ட்டிபிகேட்டாவது ஆஜர்படுத்தினால் கொடுத்துவிடப்படும். ஆனால் எந்த கேசிலாவது தபாலாபீசு டைரெக்டர் ஜெனரலவர்களுக்கு அப்பேர்க்கொத்த தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்துவது கஷ்டமென்றும், அவைகளில்லாமலே சாட்சி ரூபகமாயவிடுமென்றும் தோற்றுகிறபட்சத்தில் அவர் அந்த கேசுக்கு அவைகள் வேண்டாமென்று உத்திரவு செய்துவிடலாம். 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருக்கும் தொகையானது காலஞ்சென்ற ஒரு மைனர்பேரில் வைத்தபணமாகில் (இந்த கணக்கின் நிலுவை வட்டிநீக்கி 1,000 ரூபாய்க்கு மேற்படாது) மேலே சொல்லிய சர்ட்டிபிகேட் முதலானவைகளை ஆஜர் படுத்துவது கஷ்டமல்லாவிடிலும், வேண்டாமென்று உத்திரவுசெய்ய டைரெக்டர் ஜெனரலுக்கு [illegible].

குறிப்பு 1.—இறந்துபோன மைனர் பெயரில் ஒன்றிற்கு அதிகமான கணக்குகள் ஏற்பட்டிருந்து இக்கணக்குகள் இருப்பிலிருக்கும் மொத்தத்தொகை (நடந்துவரும் வருஷத்திற்கு வட்டி நீக்கி) 1,000 ரூபாய்க்கு அதிகமாயிருந்தால் இந்த [illegible] முதல் வசனம் பொருந்தும்.

குறிப்பு 2.—37-வது விதியின் [illegible] குறிப்பு இந்த விதிக்கும் பொருந்தும்.

[illegible] கட்டுமொருவர் [illegible]க்தியம் பிடித்தாவது அல்லது எந்தகாரணத்திலாவது தம்முடைய காரியங்களைப் பார்க்கக்கூடாதவராகி அந்தவிஷயம் போஸ்ட்மாஸ்டர்ஜெனரலவர்

களுக்கு நிரூபகம் செய்வித்தால், அவர் உரித்தான மனுஷரைக் கண்டாராய்க்கு அவருக்கு அப்போதைக்கப்போது டிபாசிட்டிலிருந்து பணம் பட்டுவாடா செய்வார். ஒரு டிபாஸிடருடைய காரியங்கள் பார்க்க ஒரு சங்கத்தார் அல்லது ஒரு மானேஜர் நியமிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கேயன்றி வேறொருவருக்கும் பணம் கொடுக்கப்படமாட்டாது.

40. உயில் சாதனமெழுதாமல் இறந்தவரும், வேலையை விட்டு வலசைவாங்கினவரும், பித்தராய்விட்டவரும், அல்லது வேறெந்தவிதமாகவோ தம்தம் காரியங்களை நிர்வஹிக்க அசக்தருமான பிரிடிஷ் சேனையைசேர்ந்த நான்கமிஷண்டு உத்தியோகஸ்தர்கள், சோல்ஜர்கள் "இவர்களின் டிபாசிட்டுகள் கமிட்டி ஆப் அட்ஸ்ஜஸ்ட்மென்ட், என்னும் சங்கத்தின் தலைவர் (பிரசிடென்ட்) மனுசெய்துகொள்ள அவருக்குச் செலுத்தி விடப்படும்.

41. தந்தை, அவர் இறந்தபட்சத்தில் தாய், இவர்களல்லாமல் வேறொருவர் ஒரு மைனருக்காக வைத்திருக்கும் கணக்கில் அந்த மைனர் தம்சம்ரக்ஷணையிலிருப்பதாக பணம் வாங்க பாத்தியதை கொண்டிருந்தால், போஸ்டுமாஸ்டர் ஜெனரலவர்கள் மனுதாரரை மைனரின் உபயோகத்திற்காக பின்வரும் விதிகளின் பிரகாரம் பணம்வாங்க உத்தரவு செய்யலாம்:—

(a) மனுதாரர் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல்வர்களுக்கு திருப்திகரமான ஆதாரங்காட்டி தான் மைனருக்கு சட்டப்படி போஷக (கார்டிய) னென்று நிரூபிக்கவேண்டும்.

(b) மனுதாரர் மரண சாதனம் (உயில்) அல்லது வேறு சாதனத்தின் படி கிரமமாய் போஷக நியமனம் பெற்றவனென்று காட்டி அச்சாதனங்களை ஆஜர் செய்யவேண்டும்.

(c) ஓர்கணக்கின் தொகைரூபாய் 250க்கு மேற்படாமலிருந்து மனுதாரன்தான் மைனரின் போஷகனென போஸ்ட்மாஸ்டர் ஜனரலவர்களுக்கு சாக்ஷிபூர்வகமாக நிரூபிக்கவேண்டும்; ஆனால் (a) அல்லது (b) பிரிவின்படி தான்போஷக பாத்தியதை கொள்ளவில்லையென்றும் சொல்லவேண்டும்.

(d) ஓர் கணக்கின் தொகை ரூபாய் 250 க்கு மேற்பட்டதாயிருந்து மனுதாரர் (a) அல்லது (b) பிரிவின்படி தான் போஷகபாத்தியதை கொள்ளவில்லையென்று ஒப்புக்கொண்டு 1890-ம் வருஷத்திய (VIII) எட்டாம் சட்டத்தின்படி பெற்ற ஸ்திதி பரிபாலன சுதந்திர (அட்மினிஸ்டிரேஷன்) சர்டிபிகேட் ஒன்றை ஆஜர்செய்யவேண்டும்.

(e) மனுதாரர் ஓர் மைனருக்கு (தந்தையோ தாயோ அல்லாமையால்) சந்தேகம் சேர்ந்தவிடத்து பணம் பட்டுவாடா செய்வதற்கு முந்தி 1890-ம் வருஷத்திய (VIII) எட்டாம் சட்டத்தின்படி பெற்ற ஸ்திதி பரிபாலன் சர்ட்டிபிகேட்டு ஒன்றை ஆஜர் செய்யச்சொல்லவேண்டும்.

குறிப்பு—மேற்படி (c) பிரிவின்படி போஸ்டுமாஸ்டர் ஜனரலவர்களிடம் பெற்ற அதிகாரமான ஆர் கணக்கின் நிலுவைத்தொகை ரூபாய் 250 க்கு மேற்பட்டுவிட்ட பிற்காலத்தில் பணம் வாங்குவதற்கு செலாவணியாகாது.

பப்ளிக் (பொதுக்) கணக்குகள்.

42. பப்ளிக் கணக்குகளை எற்படுத்தி நடப்பிப்பதில் பின் வரும் பிரத்தியேக நிபந்தனைகள் அனுசரிக்கப்படும்:—

(ii) வைத்தியசாலை, கோவில், அல்லது மதவிஷயமாயுள்ள இதர ஸ்தாபனசாலை, பள்ளிக்கூடம், அநாத சிசுபோஷணச்சாலை, ஆப்தரக்ஷணசாலை, புஸ்தகசாலை முதலியவைகளுக்குரிய பண்டுகளின் அல்லது தனித்தனி ஆட்களின் சுயநன்மைக்கல்லாமல் பொதுநன்மைக்காய் ஏற்பட்ட பண்டுகளின் செக்ரிடெரிகள், பொக்கிஷக்காரர்கள், மானேஜர்கள் கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். குதிரைப்பந்தயம், பாணவேடிக்கை, குண்டு ஆட்டம், பொதுச் சாப்பாடு முதலானவைகளுக்காகஅமைக்கப்பட்ட பண்டுகளுக்காகக் கணக்கு வைக்கக்கூடாது.

உதாரணம்.—சுயாயம் கருதாமல் பொதுவிஷயமாய் எற்படுத்திய ரிஜிமெண்டு, பப்ளிக்பண்டுகளுக்குரிய பண்டுகளுக்கு கணக்குவைக்கலாம்.

விவரணம்.—(1) ஓர் புஸ்தகசாலை கையொப்பக்காரரின் உபயோகத்திற்கா[illegible] மாத்திரமிருந்தாலும், புஸ்தகசாலைப் பண்டுக்குக் கணக்கு ஏற்படுத்தலாம்.

விவரணம்.—(2) ஒரு ஸ்தாபனசாலைக்கு இரண்டு அல்லது அதிகம் பிரத்தியேகப் பண்டுகள் இருக்குமாயின் அந்தப் பண்டுகள் ஏற்பாடானபோது கைக்கொள்ள சம்மதித்துக்கொண்ட [illegible]நிபந்தனைகள் பிரகாரம் மேற்படி பண்டுகள் ஒன்ருய்ச் சேர்க்கப்படக் கூடாததாயின், தனித்தனியே ஒவ்வொரு பண்டுக்கும் கணக்கு ஏற்படுத்தலாம்.

விவரணம்.—(3) அப்போதைக்கப்போது பணம் கட்டுவதும் வாங்குவதும் கூடாததாயினும், பப்ளிக் அக்கவுண்டு விஷயமாய் காலத்துக்குகாலம் பணங்கட்டவும் செலவுக்காக வாங்கிக்கொள்ளவுங்கூடும். அதாவது—கோவில், தர்மசாலைஸ்தாபனம் முதலானவை கட்டும் நோக்கமாய்வைத்த பண்டு கணக்கில் வைக்கலாம்.

(h) கோவாப்பரேட்டிவிகிரெடிட்சங்கத்தின் 1904-வது ஆக்ட் (1904 வருஷத்தின் X) பிரகாரம் அல்லது சுதேச இராஜியங்களில் ஏற்பட்டிருக்கும் இது போன்ற சட்டங்கள் பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஸெகிரிடெரிகள், டிரெஷரர்கள், மானேஜர்மார்கணக்குவைத்துக்கொள்ளலாம்.

(c) குடும்ப ஆபத்துகளில் அனுகூலமாக பிரயோகிக்கும் நோக்கமாய் கையொப்பமிட்டுச்சேர்த்த உபகார பண்டுகளின் ஸெக்ரிடேரிகள், மானேஜர்மார்கள் கணக்கு வைத்துக்கொள்ளலாம்.

(d) கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர், ரெயில்வே, ஸ்டீமர் கம்பனிகளைப்போன்ற பொதுத்தொழிற்சாலைகளில் உத்தியோகஸ்தர், தங்கள் கீழ் உத்தியோகஸ்தரிடமிருந்து அவர்கள் இஷ்டப்பட்டு டிபார்ட்டுமெண்டு முகாந்தரமாய் டிபார்டுமெண்டு பிரயோசனங்களுக்காக கையொப்பத்தால் சேர்த்த பண்டுகளுக்கு கணக்கு வைத்துக்கொள்ளலாம்.

விவரணம்.—இந்த விதியின்பொருட்டு "ஆபீசர்ஸ் ஆப் கவர்ன்மெண்டு" (கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள்) என்னும் சொற்பிரயோகம் இங்கிலீஷ் ராஜாங்கத் தபாலோடு ஒன்றுசேர்க்கப்பட்ட தபால்களையுடைய சுதேச சமஸ்தானத்து கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் எவர்க்கும் அன்வயிக்கும்.

(e) மேலேசொல்லியவற்றையொத்த பப்ளிக் கணக்குகளுக்கு அவைகளில்வரும் வரும்படியை உபயோகப்படுத்தும் விதத்தைக் குறிக்கும் பெயரிட வேண்டும். உதாரணம் இன்னவூர் ஔஷதசாலைபண்டு வேலையாட்களின் அசௌக்கிய பண்டுமுதலியன. மேலும் இந்த பண்டுகளின் நோக்கத்தையும் வரு

ம்படியின் மூகாந்தரத்தையும் எழுத்தில் தெரிவிக்க வேண்டும்.

(f) ஒவ்வொரு புதிய பப்ளிக் கணக்கும் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அவர்கள் உத்திரவின்பேரில் வைக்கப்படவேண்டும். இவ்வித கணக்கை எடுத்துவிடுகிறதற்கு காரணமிருந்தால் அப்படி செய்யச்சொல்வதற்கும் அவரே அதிகாரி.

(g) ஒரு பப்ளிக் கணக்கு வைப்பவர் மாறி இன்னொருவர் வரும்போது புதியடிக்ளரேஷன் எழுதவேண்டும். (18-வது விதியைப்பார்க்கவும்). ஆகிலும் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் தன் உத்தியோக நிலையில் கணக்கு வைக்கும்போது மேற்படி டிக்ளரேஷன் வேண்டியதில்லை.

(h) 6-வது ரூலில் கண்ட நிபந்தனைகள் ஒன்றுக்கு மேற்பட்ட உத்தியோக சம்பந்தமல்லாத அல்லது பொதுவான கணக்குகள் ஏற்படுத்துவதைத் தடைப்படுத்தமாட்டா.

(i) இருவர் அல்லது அதற்கதிகமானவர்பேரில் கூட்டாய்பணம் கட்டப்படாதென்கிற நிபந்தனை (?-வது விதியைப் பார்க்கவும்) பொது (பப்ளிக்) கணக்குகளுக்கு அனுவயிக்காது.

(j) வருஷாந்தம் கட்டுந்தொகை ரூபா 200 க்கும் மொத்தத்தொகை ரூபா 2,000 த்துக்கும் (11, 12-வது

விதிகளைப் பார்க்கவும்) அவ்வாறே வட்டி கணக்கிடுவதற்கு (30-வது விதியைப் பார்க்கவும்) தொகை ரூபா 2,000 த்துக்கும் அதிகமிருக்கப்படாதென்கிற நிபந்தனை பொதுக்கணக்குக்கிருக்கில்லை. ஆயினும் இவ்வித கணக்கில் நடவானின்ற வருஷத்து வட்டி நீக்கி 10,000 ரூபாய்க்குமேல் இருக்கக்கூடாது. 10,000 ரூபாய்க்குமேலுள்ள எந்தக் கணக்கிலும் வட்டி சேர்க்கப்படமாட்டாது.

(k) ஒரு காலெண்டர் மாதத்திற்குள் (calendar month) ஒரு பொதுக் கணக்கின் பாக்கியிலிருக்கும்படியான வேண்டுமென்றபோது வாங்கக்கூடிய டிபாசிட்டுகளிலிருந்து 1,000 ரூபாய்க்குமேல் வாங்கக்கூடாது. ஆயினும் ஒருவன் தன்கணக்கிலிருக்கும் ஆபீசுக்கு தன்கருத்தை அறிக்கைசெய்து மீண்டும் பணம் வாங்கலாம். அந்த அறிக்கையை ஒரு சாதாரணக் கடிதம்போல் எழுதி அதில் வாங்குந்தொகையும் தேதியும் குறித்து போஸ்ட்மாஸ்டர் விலாசத்திற்கு அதை ஒரு மாதத்திற்கு முந்தியே அனுப்பவேண்டும். இரண்டு அல்லது அதிக தடவைகளில் அத்தொகையைவாங்க உத்தேசித்தால் எத்தனை தடவையில் எந்தத் தேதிகளில் எவ்வளவு தொகை வாங்குவதோ அதை அந்த அறிக்கையில் முக்கியமாய்க் குறிக்கவேண்டும். ஆறுமாதவாயிதா

அறிக்கைக்குட்பட்ட டிபாசிட்டுகளுக்கு பணம்வாங்காமுன் 26 (1)-வது விதியின் நிபந்தனைகளையநுசரித்து ஆறுமாத அறிக்கை தரவேண்டும்.

(1) ஒரு பப்ளிக் அக்கவுண்டு விஷயத்தில், டிபாஸிடர் கையொப்பமிட வேண்டிய டிக்ளரேஷனில் (18 வது விதியைப் பார்க்கவும்) காணப்படும் "எனக்காக என்னால் எந்த போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கிலும் கணக்கு ஏற்படுத்தப்படவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்," என்பது இருக்கப்படவேண்டும்.

43. (1) கவர்ன்மெண்டுக்கு உரியதாயும்.

(2) கவர்ன்மெண்டுக்கு ஒப்பந்தம் பண்ணும்படி வாங்கிக் கொள்ளப்பட்டதாயும்,

(3) கவர்ன்மெண்டு செலவு சம்பந்தமான கஜானாவிலிருந்து வாங்கப்பட்டதாயும்,

(4) லோகல் அல்லது முனிஸிபல் வரிக்காக தண்டப்பட்டதாயும்,

(5) ஏதாவது ஒரு சட்டத்தின் முறைமைப்படி ஒரு பப்ளிக் ஆபீஸரால் தண்டப்பட்டதாயும், வாங்கிக்கொள்ளப்பட்டதாயும், நம்பிக்கையாய் வைத்திருக்கப் பட்டதாயும், கவர்ன்மெண்டு சொத்தாயும்,

இருக்கிற பணத்தை ஸேவிங்ஸ் பாங்கியில்கட்ட இடங் கொடுக்கப்படாது.

குறிப்பு 1.—ஏழைகளின் வறுமையைத் தீர்ப்பதற்காவது, கல்வி கற்பிப்பதற்காவது, வயித்தியம் செய்வதற்காவது அல்லது பொதுஜன உபயோகமாய் வேறு இதர பிரயோஜனத்தை விர்த்திசெய்வதற்காவது நம்பிக்கையாய் வைக்கப்பட்ட பண்டுகளின் டிரஸ்டிகள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கவர்ன்மெண்டு சொத்து அல்லாத பணத்திற்கு பொதுக்கணக்கு ஒன்று ஏற்படுத்துவதில் இவ்விதியில் சொல்லியதொன்றும் தடைசெய்யாது.

குறிப்பு 2.—ஏதாவது ஒரு கேஸ் சம்பந்தமாய், பணம் போஸ்ட்டாபீஸ் ஸேவிங்ஸ்பாங்கியில் தானே கட்டவேண்டுமென்று ஒரு லா கோர்ட்டார் தீர்மானித்தால் அவ்விதமான பணத்துக்கு ஒரு கணக்கு வைப்பதற்கு யாதும் தடையில்லை. அப்பேர்ப்பட்ட கணக்கிற்கு மற்ற சாதாரண கணக்குகளுக்குரிய விதிவிலக்குகள் எல்லா அம்சத்திலும் அன்வயிக்கும்.

ரிஜிமெண்டல் பேமாஸ்டர் கணக்குகளும் இதர கூட்டுக்கணக்குகளும்.

44. கீழ்ச்சொல்லிய கூட்டுக் கணக்குகளை ஏற்படுத்தி நடப்பிப்பதில் பின்வரும் பிரத்தியேக நிபந்தனைகள் அனுசரிக்கப்படும்:—

(a) ஒரு சுதேசஜன பட்டாளத்தின் கமாண்டிங் ஆபீசர், அப்பட்டாளத்தில்தன்கீழிருப்பவர்களுக்காக

போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கியில் ஒரே அக்கவுண்டு ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இந்த ஒரே அக்கவுண்டில் சம்பந்தப்பட்டவர்களுடைய தனித்தனி அக்கவுண்டைப் பற்றியும், அவர்களுக்குத் தனித்தனியே சேரவேண்டிய வட்டியைக் கொடுக்கும் விஷயத்தைப்பற்றியும், கமாண்டிங் ஆபீசர் தன்னுடைய சொந்த ஏற்பாட்டைச்செய்து கொள்ளவேண்டியது. இவ்வித அக்கவுண்டானது அமுலில் இருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும். அக்கவுண்டை கமாண்டிங் ஆபீசர் ஏற்படுத்தும்போது போடப்படும் பணமானது தான் அறிந்த அளவில் பட்டாளஜனத்தையே சேர்ந்ததென்று ஒரு சர்டிபிகேட் செய்யவேண்டும்.

(b) ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டுகளும் போலீஸ் ஸ்டேசனுக்கு கமாண்டிங் ஆபீசர்களும் தங்களுக்கு கீழ் இருக்கும் போலீஸ் வகுப்பைச்சேர்ந்தவர்கள்பேரில் கணக்கு ஏற்படுத்தலாம்.

(c) டிஸ்டிரிக்டு போர்ட்டு முனிசிபாலிடிகளின் அக்கிராசனாதிபதிகள் அப்படிப்பட்ட போர்ட்டு முனிசிபாலிடிகளின் உத்தியோகஸ்தர்கள் நிமித்தமாக இது விஷயமாய் லோகல் கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தும் விதி

களை அனுசரித்து கணக்குகளை வைத்துக்கொள்ள இந்த விதி இடங்கொடுக்கும்.

(d) கண்டோன்மெண்டு கம்மிட்டிகளின் காரியதரிசிகள் (Secretaries of Cantonment Committees) இந்திய கவர்ன்மெண்டால் அப்போதைக் கப்போது அங்கீகாரம் செய்யப்படும் விதிகளுக்கிணங்க கண்டோன்மெண்டு பணத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்ட பென்ஷனில்லாத உத்தியோகஸ்தர்களுக்காக இம்மாதிரியான கணக்குகளை ஏற்படுத்த அதிகாரம்பெற்று இருக்கிறார்கள்.

குறிப்பு:— இவ்விதியில் யாதொன்றும், கூட்டுக்கணக்கு ஏற்பட்டிருக்கிற மேலேகண்டவகுப்புகளில் எவரேனும்தானே சுயேச்சையாகத் தன்பேரில் சொந்தத்தில் கணக்கு ஏற்படுத்[illegible]காள்வதில் தடை செய்வதாக நினைக்கப்படக்கூடாது.

(e) வருஷ[illegible]டுந் தொகை ரூபா 200-க்கும் மொத்தத்தொகை ரூபா 2,000 த்துக்கும் (11) 12-வது விதிகளைப்பார்க்கவும்) அவ்வாறே வட்டி கணக்கிடுவதற்கு (30-வது விதியைப்பார்க்கவும், தொகை ரூபா 2,000 த்துக்கும் அதிகமிருக்கப் படாதென்கிற நிபந்தனை இந்த விதியின்படி வைத்த கணக்குகளுக்கில்லை.

(f) டைரெக்டர் ஜெனரல் அவர்களின் பிரத்தியேக அனுமதி பெற்றால் ஒழிய இவ்விதியின்படி ஏற்

